விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 கதிர் 044 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 24, சனிக்கிழமை 09.01.2016

வவுனியாவில்
கல்வியுலகின் புதிய சகாப்தம்
EDI
Educational Development Institute
கவிஞன் பப்ளிகேசன் அருகாமை
டிரான்ஸ்போமர் சந்தி, பண்டாரிகுளம் - 076 8078451
இன்று முதல் உயர்தர பிரிவுகள் ஆரம்பம்
A/L - 2018 கணித விஞ்ஞானப் பிரிவு
பௌதிகவியல் இரசாயனவியல்
திரு.A.இந்திரலிங்கம் (Msc) திரு.A.S.பரந்தாமன் (Bsc)
மட்டுப்படுத்தப்பட்ட 20 மாணவர்களைக் கொண்ட ஒரு பிரிவு மட்டுமே மேலதிக விவரங்கள் உள்ளே 6 ஆம் பக்கத்தில்...

# அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்தமை மிகப் பெரும் கொடூரம்

## பாலச்சந்திரனின் படுகொலை உலகையே உறைய வைத்தது
## கொழும்பில் கவலை வெளியிட்டார் மகாத்மா காந்தியின் பேரன்



கொழும்பு, ஜனவரி 9
அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலைசெய்தமை போரின் கொடியதன்மையை வெளிப்படுத்தியது என மகாத்மா காந்தியின் பேரனும் இலங் கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவருமான கோபாலகிருஷ்ண காந்தி நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.
வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் என்ற காரணத்துக்காக கொடிய முறையில் பாலச்சந்திரன் என்ற குழந்தையைக் கொன்றமை உலகையே உறைய வைத்த கொடூரமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று பக். 26

## வரலாறாகிவிட்டார் பிரபாகரன்



கொழும்பு, ஜன.9
வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாறாகி விட்டார். அவரின் குறிக்கோள் மீண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என மகாத்மா காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி தெரிவித்தார்.
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நடந்த நிகழ்வில் சிறப்பு பக். 26

## நல்லாட்சி அரசுக்கு பான் கீ மூன் வாழ்த்து

கொழும்பு, ஜன. 9
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசின் ஒரு வருடப் பூர்த்தியையொட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன். பக். 26



## அரசமைப்புத் திருத்தம் குறித்து இன்று அறிவிப்பார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.9
புதிய அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விசேட அறிவிப்பொன்று நாடாளுமன்றில் வெளியிடப்படவுள்ளது.
வடக்கு-கிழக்கை இணைத்தல் மற்றும் கிழக்குக்குச் சுயாட்சியைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற எந்தவொரு திருத்தமும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படமாட்டாது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன. பக். 29

## புலம்பெயர் தமிழர் வடக்கில் முதலீடு செய்ய வரவேண்டும்

*பிரதமர் ரணில் அழைப்பு*



கொழும்பு, ஜன. 9
புதிய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அனைத்து மக்களுக்கும் அவர்களின் சொந்தக் காணிகள் மீளக் கையளிக்கப்படும். இதன் பக். 26

## அமெரிக்காவும் இந்தியாவுமே ஆட்சி மாற்றத்துக்குக் காரணம்

*கூறுகின்றார் பசில் ராஜபக்ச*

கொழும்பு, ஜன.9
அமெரிக்காவும் - இந்தியாவுமே கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்துக்குக் காரணம்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
மைத்திரி அரசின் ஓராண்டு பூர்த்தி பக். 26

## தம்மைக் கொல்ல முயன்றவருக்கு மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன.9
தம்மைக் கொல்ல முயன்ற குற்றச் சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினருக்குப்பொது பக். 26

## கழுத்துப்பட்டிச் சவாலை மறந்துபோனார் கோத்தா



கொழும்பு, ஜன.9
பெரிய மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக் குழு முன், கறுப்புக் கழுத்துப்பட்டி அணிந்துவந்து வாக்குமூலம் அளிப்பேன் என்று சவால் விடுத்திருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அந்தச் பக். 26

நல்லாட்சி அரசின் ஓராண்டு பூர்த்தி
விரிவு பக். 02

## யாழிலிருந்து ஜனாதிபதிக்கு முறைப்பாடு

கொழும்பு, ஜன.9
ஜனாதிபதியிடம் முறைப்பாடு தெரிவிக்கும் சேவை உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாகவே, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலிருந்து பக். 26




முச்சந்தி முரளி



அப்ப... பொல்லக் குடுத்து அடி வாங்கிப் போட்டினம் பாருங்கோ..

## அரசமைப்புப் பேரவை குறித்து ஆராய கூடுகிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன.9
நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்புப் பேரவை குறித்த பிரேரணை தொடர்பில் ஆராய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று கூடுகிறது.
புதிய அரசமைப்பை வரைவதற்காக இன்று நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக மாற்றம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பிலான பிரேரணையை இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.
இந்தப் பிரேரணை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் [illegible] பக். 26

# எஞ்சிய 248 ஏக்கர் எப்போது விடுவிப்பு?

## வலி.வடக்கு மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன.9
அமைச்சரவை அனுமதித்த எஞ்சிய 248 ஏக்கர் நிலப் பரப்பு வலி.வடக்கில் எப்போது விடுவிக்கப்படும் என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
வலி.வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பில், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அந்தத் தீர்மானத் பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் ஓராண்டு பூர்த்தி; நாடு முழுவதும் நேற்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன 9
நல்லாட்சி அரசின் ஓர் ஆண்டு பூர்த்தி தினம் நேற்று நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.
கடந்த வருடம் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டார்.

**யாழ்ப்பாணம்**

நல்லாட்சி அரசின் ஓர் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்.மாவட்டச் செயலகத்தில் மரநடுகை மற்றும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசிய கீதத்துடன் தேசிய கொடியேற்றப்பட்டு மேற்படி நிகழ்வுகள் நடைபெற்றன. நல்லாட்சி அரசின் ஆண்டை முன்னிட்டு யாழ்.பழைய பூங்கா வளாகத்தில் இடம்பெற்ற மரம் நடும் நிகழ்வில் முதல் மரத்தை மாவட்டச் செயலர் என்.வேதநாயகன் நட்டு வைக்க அதனைத் தொடர்ந்து திணைக்களத் தலைவர்கள் மரங்களை நட்டனர். இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக யாழ்.றக்கா வீதியில் அமைந்துள்ள எழும் பிள்ளையார் ஆலயத்தில் ஜனாதிபதி உள்ளிட்டோருக்கு நல்லாசி வேண்டி விசேட வழிபாடுகளும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
அத்துடன் எழுதுமட்டுவாழ் தெற்கில் இடம்பெற்ற விழாவில் அந்தப் பகுதியில் உள்ள அழிக்கப்பட்ட தென்னந்தோட்டத்தில் மீள்நடுகையாகத் தென்னங் கன்றுகள் நடப்பட்டன. மதத் தலைவர்களின் ஆசிகளுடன் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் பிரதிநிதி மற்றும் பிரதேச திணைக்களத் தலைவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டனர்.
இதேவேளை, இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தென்னம்பிள்ளைகள் வழங்கியதுடன் பொது இடங்களில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

**அம்பாறை**

அம்பாறை,திருக்கோவில் வலையக்கல்வி அலுவலகத்திலும் மரக்கன்றுகள் நடப்பட்டன திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்வி அலுவலகத்தின் ஊழியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

**மலையகம்**

நல்லாட்சி அரசுக்காக மலையகத்திலும் விசேட நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஹற்றன் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றன. இந்த நிகழ்வை கினிகத்தேனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த விசேட பூசையில் மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் மற்றும் கினிகத்தேனை பிரதேச செயலக சேவையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்திலும் நல்லாட்சியின் ஒரு வருட பூர்த்தி நிகழ்வுகள் நடைபெற்றன. குறிப்பாக ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டன. அதே வேளை, தலைமன்னாரின் சிலுவைநகர் பகுதியில் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறுவர் பாடசாலை ஒன்றும் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் மரநடுகை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற



இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள், கிராமத் தலைவர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

**முல்லைத்தீவு**

நல்லாட்சி அரசின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் விசேட வழிபாடுகள் உட்படப் பல நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன் அனைத்துப் பிரதேச செயலக பிரிவிலும், கிராம சேவையாளர் காரியாலங்களிலும் மரநடுகை நிகழ்வு களும் நடத்தப்பட் டிருந்தன. அதில் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.



**வவுனியா**

வவுனியாசிதம்பரபுரம் இம்மானுவேல்ஐக்கிய திருச்சபையில் ஆசிர்வாதப் பிரார்த்தனை நடைபெற்றது. ஆசிர்வாதப் பிரார்த்தனைக் கூடுகை வவுனியா சிதம்பரபுரம் இம்மானுவேல்ஐக்கிய திருச்சபையில் வவுனியா இம்மானுவேல் ஐக்கிய திருச்சபையைச் சேர்ந்த எஸ்.அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.
அத்துடன் மரநடுகை நிகழ்வும் வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அதிபர் எஸ்.சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் எம்.பி. றோகண புஸ்பகுமார கலந்துகொண்டார்.
வவுனியா பட்டாணிச்சூர் பள்ளிவாசலில் மைத்திரிபால சிறிசேன அரசின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு விசேட ஆராதனைகள் நடைபெற்றன. பட்டாணிச்சூர் முஸ்லிம் பள்ளிவாசலின் மௌலவி எஸ்.ஏ.அப்துல் சமட் தலைமையில் நடைபெற்ற ஆராதனையில் ஜனாதிபதிக்கு ஆசி தெரிவித்தும் இனங்களுக்கிடையில் நல்லுறவும் ஒற்றுமையும் நீடிக்க வேண்டியும் பிரார்த்தனை நடைபெற்றது.



வவுனியா பிராந்திய பொலிஸார் மக்கள் தொடர்புப் பிரிவு ஏற்பாடு செய்த மரம் நடுகை நிகழ்வு வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் இ. எம்.எம். ஏக்கநாயக்க, வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டு மரம் நடும் நிகழ்வை ஆரம் பித்து வைத்தனர்.
வவுனியா இந்துக்கல்லூரியில் திருமதி நடராஜா தலைமையில் நடைபெற்ற ஓராண்டுப் பூர்த்தி நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஈ.மகாதேவன், வவுனியா தெற்கு கல்வி வலய அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.வரதகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் மூன்று முறிப்பு பாடசாலை, செட்டிகுளம் மகாவித்தியாலம், அருவித்தோட்டம் பாடசாலை உட் பட வவுனியா நகரில் உள்ள பாடசாலைகள் பலவற்றிலும் வவுனியா தெற்கு கல்வி வலயத்திலும் சிதம்பரபுரம் ஒளிசுடர் சமூகஅமைப்பிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் ஜனாதிபதியின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பள்ளிக்குடாவில் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. பள்ளிக்குடா முருகமூர்த்தி ஆலயத்தில் விசேட வழி பாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து பள்ளிக்குடா பொது நோக்கு மண்டபத்தில் 100 மரங்கள் நடுகை செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பூநகரிப் பிரதேச செயலாளர், மாவட்ட செயலக அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**திருகோணமலை**

ஜனாதிபதி பதவியேற்று ஒருவருட நிறைவை முன்னிட்டு திருகோணமலையிலும் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. குறித்த நிகழ்வுகளை திருகோணமலை மாவட்ட செயலகமும் கிழக்கு மாகாண சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வில் சர்வ மத பிரார்த்தனை மற்றும் மர நடுகை ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் தலைமையில் திருகோணமலை கோணேஸ்வரம் கோயிலில் இந்து மத சமய நிகழ்வுகள் மற்றும் பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டன. பின்னர் மட்டிக்களி பிரதேச கடற்கரையோரத்தில் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வும், திருகோணமலை கடற்கரையோரம் சார்ந்த பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வும் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் முன்னுள்ள பாதையோரத்தின் அருகில் மரநடுகை நிகழ்வும் நடைபெற்றன.
நல்லாட்சி ஆண்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு பிரதேச செயலகங்கள் உட்பட ஏனைய திணைக்களங்களிலும் சமய நிகழ்வுகள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களில் வழிபாடுகள் உட்பட பல நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக அனைத்துத் திணைக்களங்களிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் நல்லாட்சி அரசு பற்றிய உரைகள் இடம் பெற்றன. இதில் பொது மக்கள் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டார்கள்.

(த-10-86-101-9-56-402-21-ரி7-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT

# ICBT CAMPUS JAFFNA

## ஜனவரி 2016 கல்வியாண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்



### Diploma in IT

Duration : 2 1/2 Months (Full Time)
4 Months (Part Time)

### HND in
Networking
Software Engineering
Computing

Entry Criteria
- G.C.E. A/L or Equivalent
- G.C.E. O/L
- Any Diploma

Duration : 2 Years

edexcel

### B.Sc (Hons) in
Software Engineering
Information Technology

Entry Criteria
- HND or Equivalent

Cardiff Metropolitan University

**Register on / before 25th of January 2016**

580 Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel: 021-4 777 888

For more inquiries:
076 928 9810, 076 928 978 4

யாழ். மண்ணில் இல:580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதகு ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

## அவர்களின் வரவேற்பு விழா

## புனித அன்னாள் ஆலயம் - இளவாலை.





**இடம் : புனித அன்னாள் ஆலயம், இளவாலை.**

**காலம் : 10.01.2016**

**நேரம் : காலை 9.30 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**



### ஆசிச் செய்தி

### மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

எம் மண்ணில் கத்தோலிக்க மதத்தவர்களின் பெருந் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் பேராயர். யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களுக்கு இளவாலை புனித அன்னாள் ஆலய மக்கள் எடுக்கும் வரவேற்பு விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். சீரான பண்பாளரான ஆன்மீகத் தலைவருக்கு அவரது பிரியத்துக்குரிய இளவாலை மக்கள் கொடுக்கும் கௌரவமாக இவ்விழா நடைபெறுவது சிறப்புக்குரியது. கல்விப்பணி கடவுள்பணியாற்றிய ஆயர் அவர்கள் எம் மண்ணில் நீதி நிலைத்திடவும். நிம்மதி தழைத்திடவும் பணியாற்ற வாழ்த்தி எமது பிரார்த்தனையை சமர்ப்பித்துக்கொள்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை ஆதீன முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



### Message from Hon' Chief Minister, Northern Province

St.Annes Church, Ilavalai intends welcoming Jaffna Bishop Justin Bernard Gnanapragasam on 10.01.2016

I feel elated in being called upon to attend the function. Let me first extend my warmest greetings to Bishop Justin.

Bishop Justin who was ordained into priesthood on 24.04.1974 has completed over 40 years of service to the Lord and to the People.

Rev.Father Justin has always been forthright in his views and has upheld justice, fairplay and equality at all times. He has been championing the rights of our people during their most critical times.

His love for the people transcends religious barriers and hence he has earned the respect of all high and low, clergy and laity.

We pray to God to bless him to serve God and Man in his own inimitable manner for many many years to come.

May his visit to Ilavalai too be blessed by Him.

**Justice C.V. Wigneswaran**
**Chief Minister- Northern Province**



### வாழ்த்துச் செய்தி

மேதகு ஆயர் பேரருட்திரு.யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரை, புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் என்றவகையில் கல்லூரிச் சமூகம் சார்பாக உளமார வாழ்த்துவதில் பெருமையும் பெருமகிழ்வும் அடைகின்றேன்.

தன்னிகரில்லாத தலைவனாக எமது கல்லூரியை தாங்கி நின்று, கல்வி, கலை, கலாசாரம், நற்பண்புகளுடன் மாணவர்களுக்கு ஞான அறிவையும் நன்கு ஊட்டி ஆளுமையுள்ள தலைவர்களை உருவாக்கிய பெருந்தகை. கல்லூரி ஆசான்களையும். மாணவச் செல்வங்களையும் சாதனையாளர்களாக்கிய செயல்வீரன். பல பணிக்களங்களில் தடம் பதித்த பேராளன். "நீ உன் ஆடுகளை மேய்" என அழைத்த ஆண்டவனின் பணியாளன் ஆக்கியவர். இறை அழைப்பை சிரமேற்று சிரத்தையுடன் பணியை பொறுப்பேற்றிருக்கும் ஆயர் அவர்களை இறைவன் தனது அருள் வளங்களை நிறைவாகப் பொழிந்து, கரம்பிடித்து வழிநடத்த வேண்டுமென்றும். இறைதிட்டத்தின் மறை பொருளை இவர் முழுமையாக அறிந்து அதை செவ்வனே செயற்படுத்தும் ஞானத்தை இறைவன் அவருக்கு அருளவேண்டுமென்றும் ஆசித்து நிற்கின்றோம். மேலும் ஆயர் அவர்கள் ஏற்றிருக்கும் நற்பணி நானிலத்தில் நறுமணம் பரப்பிட நலமுடன் வாழ்த்தி, தொடரும் தங்களின் பயணத்தில் இப்போது போல் எப்போதும் ஹென்றீசியன் சமூகம் கூட வரும் என்பதையும் இவ்வேளை மகிழ்வுடன் கூறிநிற்கின்றேன்.

**அருட்தந்தை யோ.அ.ஜேசுதாஸ் (அதிபர்)**
**யா/புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை.**



### வாழ்த்துச் செய்தி

மேதகு ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்கள் யாழ் ஆயராகத் திருப் பொழிவு செய்யப்பட்டது காலத்தின் கண் நிகழ்ந்தேறியது உன்னதமான வரலாற்றுப் பதிவாகும்.

நாகரீக மோகம், நுகர்வு கலாசாரம், ஆடம்பரப்பிரியம் என்பவற்றால் தொலைந்துகொண்டிருக்கும் திருச்சபைக் குழுமத்தின் ஆன்மீக ஈடுபாட்டை மீளவும் கட்டியெழுப்பி இறைவழி மந்தையை வழிநடத்திச் செல்ல வேண்டிய காலமிது. காலமிட்ட கட்டளை ஆயர் அவர்களின் தெரிவும் அருட்பொழிவும்.

திருச்சபையின் அங்கத்தவர்களான குருக்கள், துறவியர், திருத்தொண்டர் பொது நிலைப் பணியாளர் அனைவரும் ஆன்மீகப் புதுப்பித்தலுள் ஈர்க்கப்பட்டு இறையிரக்கத்தைச் சுவைக்க திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டில் புதிய ஆயராக மேதகு ஆயர் அருட்திரு. யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் எமக்கு கிடைத்தமை மாபெரும் இறைவரப்பிரசாதம் என்றால் அதில் மிகையேதுமில்லை.

தகைமைத்திறனும், ஆன்மீக வலிமையும், இறை பற்றுறுதியும் தாங்கிய நடுநிலையான தலைமைத்துவப் பண்பும், இரக்க சிந்தையும் கொண்ட ஆயர் இறைவழி மந்தையை வழிநடத்திச் செல்வதில் தீராத தாகம் உடையவர். ஆயர் அவர்கள் மீது இறையாசி நிறைவாகப் பொழியப்படவும் அவர் தம் பணி சிறக்கவும் வாழ்த்துவதோடு எமது மண்ணில் 26 ஆண்டுகள் அயராது சேவையாற்றி மண்ணிற்கு பெருமை சேர்த்த ஆயர் அவர்களை எம் மண்ணிற்கு வரவேற்று நன்றி நவில்வதில் மனநிறைவும் பெருமிதமும் கொள்கின்றோம்.

வாழ்க அவரது சாதனைகள், வளர்க அவரது பணிகள்.

**அன்ரன் பாலசிங்கம்**
**ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி- இளவாலை.**



### இளவாலையில் இணையற்ற பேராளன்

**தோற்றுவாய்.**

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற தெய்வப் புலவரின் விதிமுறைக்கிணங்க பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல ஓவசியர் ஞானப்பிரகாசத்தினதும், கரம்பனைச் சேர்ந்த எமிலிதங்கமலரினதும் இல்லறப் பூங்காவில் பூத்த நான்காவது மலரே எமது இன்றைய யூபிலி நாயகர் அருள்மிகு ஜஸ்ரின் அடிகள். மூத்தவர் குலேந்திரன் கணக்காய்வாளர். அடுத்தவர் மகேந்திரன் பொறியியலாளர். இளையவர் நவநீலன் ஒரு மருத்துவ நிபுணர். யோய்ஸ் பிறேமிளா. ஜனற் வன்மலா. ஜோவிதா ஆகியோர் அன்புச் சகோதரிகள்.

**வித்தியாரம்பம்**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பக்கல்வியை அளிக்க யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி உயர்கல்வியைத் தந்தது. குடும்பப் பின்னணியும், விசுவாச வாழ்வும். இரு கத்தோலிக்க கல்லூரிகளின் ஊக்குவிப்பும் வழி நடத்த இறைவனின் குருவாக பணிவாழ்வு வாழ முனைந்த ஜஸ்ரின் புனித மாட்டீன் குருமடத்தில் இணைந்து குருகுலப் பயிற்சியை மேற்கொண்டார்.

**இறைப்பணிப்பயிற்சி**

தொடர்ந்து அம்பிற்றியா தேசிய குருக்கள் கல்லூரியில் மெய்யியலையும் இந்தியாவில் அத்தனகாமம் (பூனா) பாப்பரசர் குருத்துவக் கல்லூரியில் இறையியலையும் கற்றுத் தேறி யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் 1974 ஏப்ரல் 24இல் மேதகு தீயோகுப்பிள்ளை ஆண்டகையால் இறைவனின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்

**மேய்ப்புப்பணிப் பாதையில்...**

தொடர்ந்து மேய்ப்புப் பணிப்பாதையில் தமது குருத்துவ வாழ்வைத் தொடங்கிய அடிகள் 1974 75 களில் கிளிநொச்சி வலைப்பாடு பங்குகளிலும் 1975 – 76 களில் உருத்திரபுரம் லோங் ஆதரவற்ற சிறுவர் கல்வி நிறுவனத்திலும் இறைபணி வாழ்வைத் தொடர்ந்தார்.

**புனித ஹென்றியரசர் கல்லூரியில்**

1976 களில் புனித ஹென்றியரசர் கல்லூரியின் துணையதிபராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிய அடிகள் கற்பித்தலுக்குக் கற்றல் முக்கியம் என்ற மூதுரையைக் கடைப்பிடித்து தம் சொந்த கல்வித் தரத்தையும் உயர்த்துமாறு உழைத்தார். அவரது அயரா உழைப்பு லண்டன ஹால் பல்கலைக்கழகத்தில் 1979 – 80களில் ஆய்வு செய்து முதுகலைமாணிப் பட்டத்தை (M.A) பெறச்செய்த

**கல்விப் பணியுடன் மேய்ப்புப் பணியும்...**

1981இல் மீண்டும் எமது கல்வித்தாபனத்துக்கு வந்த ஜஸ்ரின் அடிகள் துணையதிபராகவும் மாரீசன் கூடல் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். மெல்கிசேதேக் முறைப்படி நீர் என்றும் குருவே. என்ற பொன்மொழியை அவர் என்றும் மறக்கவில்லை. பங்குத் தளத்திலும் கல்விப் பணியிலும் ஏக காலத்தில் கடமையாற்றுவது மிகக் கஷ்டமான ஒரு கருமம் ஆயின் சோதனைகள். வேதனைகள் மத்தியில் சாதனைகள் புரிவது அடிகளுக்குக் கைவந்த கலை.

**அறிவாற்றலின் உச்சநிலையில்...**

கல்வி மேற்கொண்ட கரையிலாக் காதலாலும் தாம் கல்வியுலகில் கடமையாற்றுவதில் அப்பழுக்கற்ற ஆற்றலைப் பெற்றுக் கொள்ளவும் கற்கை நெறியைத் தொடர்ந்த அடிகள் 1986- 88 களில் பிரித்தானிய சதாம்ரன் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் ஆய்வுகள் மேற்கொண்டு. கலாநிதிப் பட்டமும் (Ph.D.Ed) பெற்றார்.

**அடிகளின் வியத்தகு சாதனைகள்...**

- 1989இல் ஹென்றியரசர் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்ற அடிகளின் வியத்தகு சாதனைகளைச் சுருக்கமாக நிரற்படுத்துவோம்.
- கல்லூரியின் புராதனம் மிக்க முகப்புவாயிலை (புனித சூசையப்பர் துறவிகளால் முன்பு அமைக்கப்பட்டது) பாரம்பரிய தோற்றம் மாற்றப்படாமல் கலையழகு பொருந்திய நவீன முகப்பாக மாற்றியமைத்தமை. (உதவி பிரான்சிலுள்ள பழைய மாணவர்கள்)
- நீண்ட காலமாக பழைய கட்டடங்களில் இயங்கிய மாணவர் விடுதியை எல்லா வசதிகளுடன் கூடிய புதிய கட்டடமாக அமைத்தமை. (உதவி கொழும்பு பழைய மாணவர்)
- பழைமை வாய்ந்த கல்லூரி மண்டபத்தை நவீன கட்டடமாக மாற்றியமைத்தமை.
- விளையாட்டு அரங்கில் பார்வையாளருக்கான அழகிய காட்சி காண்கூடம் அமைத்தமை.
- துணை அதிபராயிருக்கும்போதே தொடக்க வேலைகளை ஆரம்பித்து ஆயிரக்கணக்கான மாணவர்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கப் பிரமாண்டமான ஒரு தண்ணீர் தாங்கி அமைத்தமை.
- பலவருடம் காலம் பாவனையற்றிருந்த விளையாட்டரங்கின் கிணறு திருத்தியமைக்கப பட்டமை.
- நவீன முறையில் பல மாணவர் ஏககாலத்தில் பாவிக்கக் கூடிய சலகூட வசதி அளித்தமை.
- இருபத்தைந்து வருட இறைபணி மேய்ப்புப்பணி கல்விப்பணியில் மிகக் கூடிய காலம் இளவாலையிலும் ஹென்றியரசர் கல்லூரியிலும் செலவிட்டு உழைத்தமை.
- ஹென்றியரசர் கல்லூரி மிக நீண்டகாலம் உதைபந்தாட்டத்தில் பெற்றிருந்த சாதனைகளைத் தொடர்ந்து நிலைநாட்டியமை.
- கல்லூரியில் வாத்தியக்குழுவை (**Western Band**) அமைத்து அதற்குத் தேவையான இசைக்கருவிகளை இளவாலை பழைய மாணவர்கள் சங்கத்தின் உதவியுடன் பெற்றுக்கொடுத்தல்.
- இளவாலையிலும் சுற்றுக்கிராமங்களிலும் பல சமூக அபிவிருத்திச் செயல்களில் பங்களிப்புச் செய்தமை.
- இளவாலையிலும் சுற்றுக்கிராமங்களிலும் பலமாணவர்களைப் பொறியியலாளர்களாக மருத்துவ நிபுணர்களாக கலைஞர்களாக சமூக சேவையாளர்களாக விரிவுரையாளர்களாக உருவாக்கியமை.
- ஆசிரியர்களுக்கு நிதியுதவியாக இடர்பாடுக் காலங்களில் ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாது அளித்து வட்டியின்றி மாதவீதம் (குறைந்த தொகையாக) அறவிட்டமை.
- லண்டன் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து லண்டனில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கியமை. (1979களில்)

**1989இல் ஹென்றியரசர் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்ற அடிகளின் வியத்தகு சாதனைகளைச் சுருக்கமாக நிரற்படுத்துவோம்.**

குறையாது அளித்து வட்டியின்றி மாதவீதம் (குறைந்த தொகையாக) அறவிட்டமை.

லண்டன் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து லண்டனில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கியமை. (1979களில்)

**இடப்பெயர்வு காலச் செயற்பாடுகள்**

அண்மையில் இடப்பெயர்வு காலத்தில் ஹென்றியரசர் கல்லூரிக்கு மாலைவேளையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்க கல்வித் திணைக்களம் வழிவகுத்தது. எம் கல்லூரியின் தனித்துவமும் மாணவர் ஆசிரியரின் ஆளுமையும் கல்வியின் தரமும் பாழாவதைக் கண்டு மானிப்பாயில் கிடுகுக் கொட்டில்களை அமைத்து எம் கல்லூரி தனித்தியங்க வழிசெய்தார்.

**ஆயர் அவர்களின் கடந்தகால தொடர்பணிகள்**

யாழ். மாவட்டத்தின் சிறந்த கல்லூரிகளான புனித ஹென்றியரசர் கல்லூரி புனித பத்திரிசியார் கல்லூரிகளின் அதிபர். இளவாலை மறைக்கோட்டக் குருமுதல்வர். சிறந்த கல்விமான். அப்பழுக்கற்ற நிர்வாகி. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிரம்பிய உழைப்பாளி. தனித்துவமும் ஆளுமையும் மிக்கவர். யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் யாழ். மறைமாவட்ட ஆலோசனைக்குழுவினர். யாழ். மறைமாவட்ட குருமுதல்வர்.

வாழ்க அவரது சாதனைகள். வளர்க அவரது பணிகள்.

**A.J சவுந்தரநாயகம் (சந்திரன்)**
**புனித அன்னாள் பங்குமகன், இளவாலை.**



### வாழ்த்துச் செய்தி

து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார் தாம் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார் தமக்கு ம் மாட்சியில் பங்குபெறச் செய்தார்" (உரோமையர் 8:30)

ரில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கல்விப் பணியோடு ளையும், சமூகப் பணிகளையும் செவ்வனே ஆற்றி தற்போது ஆயராய் உயர்ந்துள்ள பேரருட்திரு. யஸ்ரின் பேணாட் ஆண்டகை அவர்களை உளமார வாழ்த்தி இவ்வினிய நாளில் அவரை இங்கு வரவேற்பதில் பேருவகை கொள்கின்றேன். 1978இல் நான் புனித ஹென்றியரசர் கல்லூரியில் 8ஆம் தரத்தில் இணைந்தபோது உப அதிபராக பணியாற்றிய இன்றைய ஆயர் ஒரு வருடத்தின் பின் உயர்கல்விக்காக வெளிநாடு சென்றார். கல்விப்புலத்திலே அவரது தகைமையும், தலைமைத்துவத்திலே அவரது ஆளுமையும். உறவுநிலைகளுக்கு வலுவூட்டும் அவரது பண்பும் பலரும் அறிந்ததே.

பலருடைய உருவாக்கத்துக்கு வழியாக இருந்த இவர் ஆயர்நிலை உருவாக்கத்தைப் பெறுவதற்கு இளவாலைப் பணித்தளம் பின்புலமாய் அமைந்துள்ளது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதே.

இளவாலை பங்கின் புனித அன்னாள் ஆலயத்திலும், புனித யாகப்பர் ஆலயத்திலும். புனித யூதாதேயு ஆலயத்திலும் அத்துடன் மாரீசன்கூடல், போயிட்டி, பெரியவிளான், மாதகல் பங்குகளிலும் தமது நிறைவான பணியை வழங்கி மக்கள் வாழ்வில் ஒளியூட்டி வழிகாட்டியுள்ளார்.

இன்றைய இந் நன்நாளிலே, ஆண்டவருடைய திருமுழுக்குப் பெருவிழாவிலே இளவலைப் பங்குமக்கள் அனைவரோடும் இணைந்து ஆயரை வாழ்த்துவதில், வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன். இன்றைய விழாவுக்கு தாராள உள்ளத்தோடு உதவி நல்கிய புனித அன்னாள் ஆலய வெளிநாடு வாழ் அன்பர்கள் உள்ளூர் அன்பர்கள் மற்றும் நண்பர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதில் நிறைவடைகின்றேன். புதிய ஆயருக்கான கோலாகலமான இவ்வரவேற்பு நிகழ்வு பலரது உள்ளங்களில் இறையழைத்தலை ஊக்குவிப்பதாய் அமைய இறையருள் வேண்டி, இந்நிகழ்வுக்காக ஒத்துழைத்த ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

**அருட்பணி. சா.யோ.கு. ஜெயரஞ்சன்**
**இளவாலைப் பங்குத்தந்தை.**



### வாழ்த்துச் செய்தி

2015 கார்த்திகைத் திங்கள் 28ஆம் நாள் பேரருள்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ். ஆயராகப் பாப்பரசரால் நியமனம் பெற்றுப் பொறுப்பேற்ற நன்நாள் பேருவகை தந்ததொரு திருநாளாகும். அந்நாளில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கும் வாய்த்திருந்தது மகிழ்ச்சி தருகிறது.

நத்தார் பண்டிகை அதைத் தொடர்ந்து புத்தாண்டு கொண்டாட்டங்களோடு 2016 தைத் திங்கள் 10ஆம் நாள் இளவாலை புனித அன்னாள் ஆலய பங்கு மக்கள் யாழ் ஆயருக்கு உவகையுடன் வரவேற்பு விழா எடுக்கின்றனர். எமக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் இவ் விழாவில் நாம் அனைவரும் கலந்து சிறப்பிப்பது பெருமை தருகின்றது.

ஆயர் அவர்களை, இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி முதல்வராயிருந்த காலம்முதல் நான் நன்கு அறிந்திருக்கின்றேன்.

ஆயர் கல்வியல்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் மட்டுமல்ல உயர்ந்த ஒரு கல்விமானுமாவார். யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக அவையில் நீண்ட காலமாய் பணிபுரிந்தவர். யாழ். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபராகவும் விளங்கியவர். அவருடன் நிறைய பழகியிருக்கின்றேன்.

ஆயர் அவர்கள் மக்களுடன் மிக நெருக்கமாக மனம் நிறைந்து பழகும் பண்பாளராக மிளிர்ந்து வருபவர். ஆயர் அவர்கள் இறைபணியாற்ற உயர்ந்த தகைமை பெற்றிருப்பதுடன் அனைத்து மத நம்பிக்கையாளர்களுடன் மிகுந்த மதிப்புடன் செயலாற்றி வரும் தலைமைத்துவப் பண்பு நிறைந்தவர். அனைவரதும் பெரு மதிப்பைப் பெற்றவர்.

பேரருள் ஆயர் அவர்கள் மக்கள் ஆன்மீக விடுதலைக்காக மட்டுமல்லாமல் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகவும். விடிவுக்காகவும் அர்ப்பணித்து உழைக்கும் திடசங்கட்பங் கொண்டவருமாவார்.

இளவாலை இறைமக்கள் ஆயருக்கு வழங்கும் வரவேற்புப் பொருத்தமானதும் புத்தாண்டில் உவகை தருவதுமாயும் அமைகின்றது.

எம் இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**மாவை. சோ.சேனாதிராசா பா.உ.**



### வாழ்த்துச் செய்தி

அன்பு, அறிவு, ஆளுமை, அரவணைப்பு மிக்க ஆன்மீகத் தலைவர் அருட் பேராளர் யஸ்ரின் அடிகளாரை வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். இளவாலை மண்ணில் இப் பெருந்தகை ஆற்றிய பணிக்கு நன்றிக் கடனாக அன்பர்கள் எடுக்கும் விழா குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் முதல்வராகவும், ஆன்மீக குருவாகவும் விளங்கிய பெருந்தகையின் வளர்ச்சியில் இவ்வூர் மக்களின் ஆர்வம் என்பது தனித்துவம் ஆனது. அன்னாரின் பதவியேற்பு நாளில் இளவாலை மக்கள் திரண்டு வந்து சிறப்பித்தமையை யான் கண்டேன். ஆயர் பெருமகனாரின் பணி சிறக்க வரவேற்கும் அன்பர்களின் பண்பு கண்டு ஆனந்த மடைகின்றேன். தங்கள் மண்ணில் பணிசெய்த பெருந்தகையை வாழ்த்து வதில் அவர்கள் கொள்ளும் ஆர்வம் பெருமை தருகின்றது. உயர்ந்த பணியை ஏற்றிருக்கும் உத்தமரை வாழ்த்தி விழாச் சிறக்க இறையருளை வேண்டி அமைகின்றேன்.

**செஞ்சொற் செல்வர். கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தலைவர் - சிவபூமி அறக்கட்டளை-இலங்கை.**



### வாழ்த்துச் செய்தி

"அருட் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியாள் கண்ணும் உள" என்னும் பொய்யாமொழிப் புலவரின் பொன்மொழிக்கு இசைவாக, மூவொரு இறைவனின் அருளாசி பொழிந்திட, எம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்பொழிவு பெற்ற யாழ். ஆயர் அதிமேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கு வரவேற்பளிக்கும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துச்செய்தி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சம காலத்தில் எம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு விடையளிக்கும் விடிவெள்ளியாக உதித்த ஆயர் அவர்களின் தெரிவு, மகத்தானதும் தகுதியானதுமே. ஆயர் அவர்களை நான் நவசந்நியாச வாழ்வுக் காலத்திலிருந்தே அறிந்தவராக இருக்கின்றேன். இவரது அறிவுக்கும், ஆன்மீகத்துக்கும், ஆளுமைக்குமுரிய இயல்புகளை பலர் பல விதத்திலும் விதைந்துரைத்தாலும், இவருக்கே உரிய சிறப்பான பண்புகளில் இவருக்கு நிகர் இவராகவே இயங்குகின்றார் என்பது வெள்ளிடை மலை. எனது அனுபவத்திலும், இவருடனான நட்பிலும் நான் உய்த்துணர்ந்ததையும், முன்மாதிரியாக எடுத்துக் கொண்ட உயரிய பண்புகளையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தற்பாலதே. இவர் ஆழ்ந்த ஆன்மீக முதிர்ச்சியும் பல்துறைசார் அறிவும், தன்னிகரற்ற தலைமைத்துவமும், அன்பும் நன்றியும் மிகுந்த நட்புறவும், சிறந்த கடமையுணர்வும், எளியோரையும் வலியோராக்கும் செயல்திறனும் உடைய ஒரு முழுமையான ஆளுமையைக் கொண்டவராக விளங்கியுள்ளார். இத்தகைய நிலைகளே ஒருங்கிணைந்து இவரை ஆயர் நிலைக்கு உயர்த்தியதோ என எண்ணத் தோன்றுகின்றது. இவரது உயர் பண்புகள் எனது பல வளர்ச்சிப் படிகளுக்கு வழிகாட்டியாக விளங்கியுள்ளமை நான் இங்கு சிறப்பாகக் குறிப்பிடப் படவேண்டியதொன்றாகும். எனவே இவரது மேன்மையான ஆயர் பணிவாழ்வு எம் மறைமாவட்டத் திருச்சபைக்கும், தமிழ் இனத்திற்குமே உன்னதமான விடியலாகத் துலங்கவும், நீடிய ஆயுளைக் கொண்டதாக விளங்கவும் இறை ஆசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

"ஆண்டவர் உமக்கு ஆசி வழங்கி உம்மை காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உம் பக்கம் திருப்பி உமக்கு அமைதி அருள்வாராக! (எண் :6:25-26)

நிறைவுடன் வாழ்த்தி நிற்கும்
**அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை (அதிபர்)**
**யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி. - இளவாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After A/Level's UK DEGREE



## Higher Education for a Lowest Investment

PEARSON BTEC

# HND

Offered at JAFFNA CAMPUS 077 309 308

## IT/Software Engineering

Computing & System Development

- BEng (Hons) in Software Engineering
- BEng (Hons) in Computer Networking
- BSc (Hons) in Computing

## Business Management

- BA (Hons) in Business Administration
- BA (Hons) in Human Resource Management

## Engineering

- BSc (Hons) in Civil Engineering
- BEng (Hons) in Mechanical Engineering
- BEng (Hons) inElectronic & Communication Engineering

Investment **Rs.200,000**

### Why Choose ESOFT?

- Direct UK Degrees With Full Credit Transfers
- University Approved Lecturer Panel
- UGC Recognised
- Loans & Special Payment Plans Including HSBC 0% Interest offer
- Merit Based Scholarships
- State-of-the-art Facilities

ESOFT is proud to be recognized as a GOLD PARTNER
PEARSON edexcel

March Intake

# MBA

Master in Business Administration

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY

ESOFT

*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**
No.137, K.KS, Road, Jaffna
021 222 4142

LONDON METROPOLITAN UNIVERSITY · PEARSON · Microsoft IT Academy Program Member · ORACLE ACADEMY · intel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை தேடிக் களைத்துவிட்டீர்களா?

## கவலையை விடுங்கள்!

வேலை தேடுபவர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கு

## WINSTAR JOB BANK

(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

நீங்கள் விரும்பும் உங்கள் தகுதிக்கேற்ற தனியார் வேலையினைப் பெற்றுக்கொள்ள WINSTAR தொழில் வங்கியினை உடன் நாடுங்கள்

கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு !
WINSTAR ஐ நாடுவோர்க்கு வேலை வாய்ப்பு !

உங்கள் சுயவிவரக்கோவையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

10.00 am - 4.00 p.m * பதிவுக்கட்டணம் உண்டு

WINSTAR JOB BANK
106 தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
winstars1237@gmail.com
021 320 2789

# இறுதிச்சந்தர்ப்பம்

## CIMA-UK, ENGINEERING-USA
## BIT-University of Colombo

புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தோர். பல்கலைக்கழக மாணவர்கள். பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது.கற்கை நெறி முடிவில் அரச வேலையிலும். வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படவர். ஆகக்குறைந்தகல்வித்தகைமை. க.பொ.த (சா.த). புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் பெயர், கற்கைநெறி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு sms செய்யவும். மேலதிகவிபரங்கள் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள MCS வளாகத்தில்.

## MCS IT CAMPUS

## LAKELAND INTER - AMERICAN SCHOOL
## ADMISSION FOR MONTESSORI



முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:

- Dr.Maria Montessori இன் எண்ணக் கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
- இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
- மழலைகள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுதிறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் புத்திசாதுரியமாக வெளிக்கொணர்தல்.
- பாலர் முன்பள்ளியில் கல்வியிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் தமது ஆற்றல்களை பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைத்து, அறிவை பெருக்குதல்.
- பிள்ளைகளுக்குப் புத்திக்கூர்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, சுயமைபுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் புகட்டுதல்.

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.

உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter-American School. விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு.

வயதெல்லை 2½ - 5½.

விரையுங்கள் உங்கள் பதிவுகளுக்கு

பதிவு கட்டணங்களுக்கு 50% கழிவு

இச்சலுகை ஜனவரி 31 வரை மட்டுமே
(மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் மாத்திரம்)

~~20000/=~~ Now 10000/=

தொடர்புகளுக்கு:
No-154, Brown Road, Jaffna.
T.P No : 021 222 6242 acrolankajaf@gmail.com

உங்கள் வீடுகளின்

குளியலறை மற்றும் குளியலறை சாதனங்கள் கொமட், சலவை இயந்திரம் ஆகியவற்றில் கல்சியம் படிவடைந்து தொல்லை தருகின்றதா?

இவற்றுக்கு நிரந்தர உறுதியான தீர்வுகளுக்கு

A member of the IDOL family
## UV Water Solution
water science technologies
Right solution for water issues

தொடர்புகளுக்கு 0775092737
277 கச்சேரி நல்லூர் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

வவுனியா நகரில்

கல்வியுலகின் புதிய சகாப்தம்

## EDI
## Educational Development Institute

கவிஞர் பண்டிதர் ... சந்தி ... T.P : 076 - 8078451

### A/L - 2018 கணித விஞ்ஞானப் பிரிவு

| பௌதிகவியல் | இரசாயனவியல் | உயிரியல் | இணைகணிதம் |
|---|---|---|---|
| திரு.A.இந்திரலிங்கம் (MSc)<br>திரு.எஸ்.தவபாலன் (Bsc) | திரு.A.S.பரந்தாமன் (Bsc) | 25 வருட கால அனுபவமுள்ள ஆசிரியர் | திரு.N.சதீஸ் (Bsc) |

மட்டுப்படுத்தப்பட்ட 20 மாணவர்களைக் கொண்ட ஒரு பிரிவு மாத்திரமே இவ்வாண்டு நடைபெறும் ஆரம்பம் 10.01.2016 - காலை 9.00

### A/L - 2018 தொழில்நுட்பப் பிரிவு

| SFT BST | IT |
|---|---|
| திரு.எஸ்.தவபாலன் (Bsc) | திரு.பாலகலைஞன் (Bsc) |

(கணணி மூலமாக செய்முறை வகுப்புக்களின் விபரணத்துடன்)

தொழில்நுட்பப் பிரிவு 2016, 2017 மீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 10.01.2016 - மாலை 3.00

### A/L - 2018 கலைப்பிரிவு -01

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் | வரலாறு |
|---|---|---|---|
| திரு.சிவகஜன் (MA) | பண்டிதர் வீ.பிரதீபன் | திரு.S.T.சிவா (BA) | திரு.P.கெங்கன் (BA) |

### A/L - 2018 கலைப்பிரிவு -02

| இந்து நாகரீகம் | தமிழ் | புவியியல் |
|---|---|---|
| திரு.M.ரதிக்குமார் SplTrd (Hin) | திரு.A. ரஞ்சன் MA,M(Phil) | திரு.V.R.ஜெயந்தன் SplTrd(Geo) |

### A/L - 2018 வர்த்தகப்பிரிவு

| வணிகக்கல்வி | கணக்கீடு | பொருளியல் |
|---|---|---|
| திரு.P.ஹெஜி | திரு.S.சிவகுமார்<br>திரு.P.தர்மேந்திரா | திரு.A.சுதாகரன் |

கலைப்பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவில் ஒவ்வொரு ஆசிரியரின் வகுப்புகளும் 15 மாணவர்களை மட்டும் கொண்ட குழு வகுப்பாக நடைபெறும். A/L 2017 , 2016 பிரிவுகளுக்கான மீட்டலுடன் கூடிய வினா விடை வகுப்புக்கள் ஆரம்பம் 12.01.16 மாலை 3.00

## EDI உயர்தரப் பிரிவின் தனித்துவம்

* இறுக்கமான கட்டுக்கோப்புடைய நிர்வாக ஒழுங்கமைப்பு.
* எந்தவொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
* கணணி மூலம் செய்முறைப் பாடங்களின் விபரணம்.
* அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களின் இணைவில் பல்கலைக்கழகம் செல்வதற்கான வழிகாட்டல்.

மாணவர்களே,
உங்கள் கல்வி நிலையை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்று பல்கலைக்கழக ... தேர்வு வெற்றி. உங்கள் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்
M.R.Bala-Kannathasan (நிர்வாகி) T.P : 076 - 8078451

Olialakan Studio, British College of Beauty Studies
இணைந்து நடத்தும்
## Olialakan Award 2016
(அழகுக்கலை சார்ந்தவர்களுக்கும் புகைப்பட கலைஞர்களுக்குமான கௌரவிப்பு விழா)

- இந்த நிகழ்வன்று விஷேடமாக OA Advertising என்னும் விளம்பரப் புத்தகம் வெளியிட உள்ளோம்.
- இப் புத்தகத்தை நாடளாவிய ரீதியில் விநியோகிக்க உள்ளோம்.
- 3 மாதங்களுக்கு ஒருமுறை வெளியிட தீர்மானித்துள்ளோம்
- தொடர்ந்து விளம்பரங்கள் தருபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
- உங்களது ஸ்தாபனம் நாடளாவிய ரீதியில் பிரபல்யம் அடைய விரும்பினால் எம் விளம்பர புத்தகத்துடன் இணைந்துகொள்ளவும்.
- A4 Size Colour புத்தகம் - 36 பக்கங்கள்

30,000 அச்சு பிரதிகளை வெளியிட உள்ளோம் முற்றிலும் கலர் விளம்பரம்

- Full Page : - 10,000/=
- Half Page : - 5,000/=
- Cover in page : - 20,000/=

விளம்பரம் பிரசுரிப்பதன் நன்மைகள்

- அனைவருக்கும் இலவசமாக புத்தகம் விநியோகிக்கப்படும்
- பொது இடங்களில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

குறிப்பு: இப் புத்தகமானது (Canada, German, Norway, London, France, Singapore, India) போன்ற நாடுகளுக்கும் விநியோகிக்க உள்ளோம்.

விளம்பர தொடர்புகளுக்கு: 076 701 1645
Olialakan Studio
Adiyapatham Road, Thirunelvely.
British College of Beauty Studies
Palaly Road, Thirunelvely Junction
Thirunelvely, Jaffna

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வழக்குகள் தாமதத்தைத் தவிர்க்க சட்டத்தரணிகள் முற்படவேண்டும்

### சாவகச்சேரி நீதிவான் அறிவிப்பு

நீதிமன்றில் வழக்குகள் விரைந்து நடத்த ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க சட்டத்தரணிகளை முற்படுத்தவேண்டும். நிதி வசதி குறைந்தவர்கள் நீதிமன்றில் இயங்கும் சட்ட உதவி மையத்துடன் தொடர்பு கொண்டு சட்டத்தரணியை முற்படுத்தலாம். இவ்வாறு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி.ஸ்ரீநிதிநந்தசேகரன் கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றில் தெரிவித்தார்.

விசாரணைக்கு எடுக்கப்பட்ட பல வழக்குகளுக்குச் சட்டத்தரணிகள் முற்படாததால், திரும்பத் திரும்ப வழக்குகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டன.

அந்தவேளையிலேயே வழக்குகளைத் துரித கதியில் நடத்தி முடிக்க பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம். சட்டத்தரணியின் உதவியின்றி வழக்குகளை நடத்த முற்பட்டால் வழக்குகள் தாமதமடைவதுடன், பொதுமக்களுக்குக் கால விரயம் ஏற்படுகிறது.

இதனைத் தவிர்க்க வழக்குகளுக்கு வருவோர் சட்டத்தரணியின் உதவியுடன் வருமாறும், அவ்வாறு சட்டத்தரணியை முற்படுத்த வசதியில்லாதவர்கள் மன்றில் இயங்கும் சட்ட உதவி மையத்தில் உதவி கோரலாமெனவும் நீதிவான் அறிவித்தார். (த-ஐ-9)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரச அதிபர் தலைமையில் குழு

## நேரடியாகச் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.வடக்கில் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர். மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்வதற்காவே இந்த நேரடிப் பயணம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 479.98 ஏக்கர் நிலப் பரப்பு கடந்த மாதம் 30 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மீளக்குடியமர்வதற்காக இதுவரையில் 538 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இந்தப் பகுதியில் வனாந்தரமாக மாறியுள்ள பிரதேசங்களைத் துப்புரவு செய்வதில் மக்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். மீளக்குடியமரும் மக்களுக்கான உதவிகள் இன்னமும் வழங்கப்படவில்லை. இருப்பினும் மக்கள் தினந்தோறும் தமது காணிகளைச் சென்று பார்வையிடுவதுடன் துப்புரவு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக, மத்திய - மாகாண அரசுகள் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. அதற்காக திட்டங்களை முன்னுரிமைப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரன், வலி.வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் மீளக்குடியமர்ந்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (த-ஐ-5)

## லைசன்ஸ் பெறுபவர்களின் எண்ணிக்கை யாழில் வீழ்ச்சி



யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம்பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுபவர்களின் எண்ணிக்கையானது கடந்த 2013, 2014 ஆகிய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதன் பிரகாரம் கடந்த 2013 ஆம் ஆண்டில் குடாநாட்டில் 13 ஆயிரத்து 500 பேர் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றிருந்தனர். இருப்பினும் இந்த எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டில் 16 ஆயிரத்தையும் தாண்டியிருந்தது.

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டில் திடீர் வீழ்ச்சி அடைந்து மீண்டும் 13 ஆயிரத்தை அண்மித்துள்ளது.

இதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் 3 தடவைகளும் தோற்றிய நிலையில் சித்தி எய்த தவறியவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளது.

அதன்பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 417 பேர் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சையில் மூன்று தடவைகள் தோற்றியும் தேர்ச்சி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-ஐ-101)



நல்லாட்சி அரசின் ஓராண்டு பூர்த்தி நினைவாகப் பலாலி கட்டளைத் தலைமையகத்தில் சந்தன மரக்கன்று ஒன்று நடப்பட்டது. பிரிகேடியர் டி.எஸ். வீரமணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பயன்தரு மரக்கன்றுகளை கட்டளைப் பணியகத்தின் கீழ் உள்ள இராணுவச் சிப்பாய்கள் நட்டு வைத்தனர். (த-ஐ-107)

# அபிவிருத்தி அலுவலர் ஆளணியை பெப்ரவரியில் நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

வடக்கு மாகாணத்தில் வெற்றிடமாகக் காணப்படும் கிராம அபிவிருத்தி அலுவலர்களுக்கான ஆளணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் ஜே.ஜே.சி.பெலீசியன் தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்படவேண்டுமென அரசினால் அறிவிக்கப்பட்ட நிலையிலும், பல பிரதேச செயலகங்களில் கிராம அபிவிருத்தி அலுவலர் பதவிகள் வெற்றிடமாகவே காணப்படுகிறன.

இதனால் பிரதேச பொது அமைப்புகள் தமது தேவைகளுக்காகப் பதில் கடமை அலுவலர் வரும் வரை காத்திருக்கவேண்டிய நிலைகள் ஏற்படுகின்றன.

நிரந்தர அலுவலர் இல்லாததால் பொது அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பாகப் பல்வேறு கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுவதுடன், விளையாட்டு அலுவலர் மற்றும் கலாசார அலுவலர்களை நியமிப்பதில் ஆர்வம் காட்டும் மாகாண அமைச்சுக்கள், கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்படும் கிராம அபிவிருத்தி அலுவலர்களை நியமிப்பதில் காலதாமதம் காட்டுவது குறித்தும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

மேலும் ஒரு மாவட்ட பிரதேச செயலகத்தில் கடமை புரியும் கிராம அபிவிருத்தி அலுவலர் மற்றொரு மாவட்டத்தின் பிரதேச செயலகத்துக்குப் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளமையால் அந்த அலுவலர் எப்போது வருவார் என்பது பிரதேச செயலகத்துக்கே தெரியாமல் உள்ளது.

இந்த நிலையில் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொண்டபோது: மாகாணத்தில் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்படும் கிராம அபிவிருத்தி அலுவலர்கள் பதவிகள் நிரப்பப்படாதது குறித்து கவலை தெரிவித்து,பொது அமைப்புகளின் செயற்பாடுகளை துரித கதியில் நடத்த அலுவலர்களின் சேவை அவசியமாக இருக்கின்றபோதிலும் உரிய அலுவலர்கள் நியமனம் தொடர்பாக பிரதேச பொது அமைப்புகள் மாகாண சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென கருத்து வெளியிடுவது நியாயமானதே. இந்த ஆளணிப் பற்றாக்குறை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நிவர்த்தி செய்யப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான கோரிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம்.எனவே நிலவும் 12 பதவி வெற்றிடங்களுக்கான போட்டிப் பரீட்சை ஜனவரி மாத இறுதிப் பகுதியில் நடத்தப்பட்டு துறைசார் வல்லுநர்கள் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாகக் கூறினார்.(த-ஐ-ரி5,9)

## உதயநாளும் பரிசுத் தினமும்

வலி வடக்கு, ஐன.9

வாழ்வக நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத் தினமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் உள்ள செல்லா மண்டபத்தில் வாழ்வகத்தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைகள் பரீட்சைகள் மதிப்பீட்டுத் கிளையின் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் கே.எம்.கருணதிலக கலந்துகொள்வதுடன், சிறப்பு விருந்தினர்களாக சுங்கத்திணைக்கள பிரதி சுங்க அத்தியட்சகர் எஸ்.சக்திதரன், யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலைய அதிகாரி ரி.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சேவையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும், வாழ்வக மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (த-ஐ-86)

## சமாதான நீதிவானாக நியமனம்



யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.கச்சேரி வீதி சுண்டுக்குளியைப்பிறப்பிடமாககொண்ட வீரராஜன் ஜெயப்பிரியன் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வித்தியாலயம், யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் ஆவார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மாவட்ட நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் இவர் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (த-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் விசாரணை தாமதம்; ஆளுநர் செயலகம் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன.9

முல்லைத்தீவு முன்னாள் போராளி தீயினால் உயிரிழந்த சம்பவத்தில், 3 நாள்கள் தாமதமாகப் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் துரித விசாரணை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காகப் புகை போடும் நோக்கில், விறகுக்கு மண்ணெண்ணெய் ஊற்றித் தீப்பற்ற வைத்த கண் பார்வையிழந்த முன்னாள் போராளி தீப் பிடித்து எரிந்து உயிரிழந்தார்.

முல்லைத்தீவு கேப்பாபுலவுப் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் செல்வகுமாரி என்பவரே அவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த நவம்பர் மாதம் 12 ஆம் திகதி இரவு சகோதரனின் வீட்டில் இருந்த வேளையில் அவர் விறகில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டிய போது அவர் உடுத்தியிருந்த சேலையிலும் தீப் பிடித்துள்ளது.

அவர் கண்பார்வை இழந்திருந்ததால் தனது சேலையில் தீ பிடித்ததை அவர் கண்டிருக்கவில்லை. தீ பற்றிபோதே அவர் அதனை உணர்ந்துள்ளார். உடனடியாக அவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது கடந்த சனிக்கிழமை அவர் உயிரிழந்தார்.

> “தாமதத்துக்கான காரணம் என்ன? யாரில் தவறு நடந்துள்ளது. பொலிஸாரிடமா அல்லது ஏனைய நிர்வாகத்தில் இடம் பெற்ற தவறா?”

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்த போதும், முல்லைத்தீவுப் பொலிஸார் கடந்த 5 ஆம் திகதியே அது பற்றிய விசாரணைசெய்வதற்காக வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர்.

அந்தத் தாமதத்துக்கான காரணம் என்ன? யாரில் தவறு நடந்துள்ளது. பொலிஸாரிடமா அல்லது ஏனைய நிர்வாகத்தில் இடம்பெற்ற தவறா? என்பது தொடர்பிலும் அது பற்றிய தகவல்கள் எந்தெந்தத் திகதிகளில் பரிமாறப்பட்டுள்ளன என்பது தொடர்பாகவும் நேற்று ஆளுநர் செயலக அதிகாரிகள் விவரம்பெற்றதாக அறிய முடிகின்றது.

உயிரிழந்த பெண்ணின் கணவனும், அந்தப் பெண்ணின் சகோதரியின் கணவரும் அவர்களைக் கைவிட்டுச் சென்றுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனால் கடும் சிரமத்தின் மத்தியில் அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4-101)

# நெற்பயிர்களில் நோய்த் தாக்கம்

## கிளிநொச்சி விவசாயிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.9

கடந்த சில நாள்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கைகளில் பல்வேறு வகையான நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகக்கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு பாதிப்புக்களை மக்கள் எதிர் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற் செய்கையில் பல்வேறு வகையான நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. பயிர் செய்கைகளின் ஆரம்பத்தில் எரிபந்தம் மற்றும் பங்கஸ் நோய்களின் தாக்கங்கள் காணப்பட்டன.

தற்போது நெல் அறுவடைக்கு அண்மித்து வருகின்ற நிலையில் மடிச்சுக் கட்டி தத்தி என்னும் நோய்த்தாக்கத்துடன் எரிபந்தம் உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்களின் தாக்கங்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நாசினிகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

விவசாய இரசாயனங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களது ஆலோசனைகளின் பிரகாரமே இவ்வாறு கிருமி நாசினிகளை பயன்படுத்துவதால் உரிய நோய்களைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாகக்கிளிநொச்சி மாவட்ட விவசாய ஆராய்ச்சித்திணைக் களத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

ஏரிபந்தம், பங்கஸ் என்னும் நோயானது ஆரம்பத்தில் நெற் பயிர் களைத் தாக்கியிருந்து. எனவே அவற்றை ஒழிப்பதற்கான ஆலோச னைகள் விவசாயிகள் மட்டத்திலே ஏற்படுத்தபட்டது. தற்போதும் குறித்த நோய்கள் உட்பட பல நோய்கள் பரவியிருக்கின்றன. இவை மப்பும் மந்தாரமான கால நிலையிலேயே பரவக்கூடியவை. எனவே அவற்றுக்கான விளக்கங்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் முகமாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்தோடு இது தொடர்பாக விழிப்புணர்வுச்செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட உள்ளததாகத் தெரிவித்தனர். (த-ஐ-21)

# குரங்குகளால் வவுனியாவில் விவசாயிகளுக்கு பெரு நட்டம்

வவுனியா,ஜன்.9



வவுனியாவில் பல்வேறு பகுதிகளிலும் குரங்குகளால் விவசாயிகளும்,பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வவுனியா நகரில் வெளிவட்டவீதி, உள்வட்டவீதி, பூந்தோட்டம்,செட்டிக்குளம்,ஓமந்தை, தாண்டிக் குளம், பூவரசங் குளம், இராசேந்திரங்குளம் உட்பட பல்வேறு இடங்களில் காணப்படும் விவசாயத் தோட்டங்களில் காணப்படும் பயிர்களைக் குரங்குகள் நாசம் செய்வதுடன், சோளம், பழங்கள், தானிங்களை உண்பதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்ததை எதிர்கொள்கின்றனர். இந்தக் குரங்குகள் பயிர்களை மட்டுமல்ல, தொலைபேசி வயர்கள், வீடுகள், பாடசாலைகளின் ஓடுகளையும் சேதப்படுத்துவதுடன், ஆள் நடமாட்டம் குறைந்த கிராமப்புறங்களில் வீதியால் செல்லும் பெண்களை மற்றும் பாடசாலை மாணவர்களை அச்சுறுத்துவது மற்றும் கடிப்பதால் அவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்தக் குரங்குகளைக் கட்டுபடுத்த சீன வெடி கொளுத்தப்பட்டால் குறித்த நேரத்துக்குள், அந்த இடத்தை விட்டு அகன்று விடுகின்றன. சற்றுநேரம் செல்ல மீண்டும் வந்து தமது அட்டகாசத்தை அவை தொடங்கி விடுகின்றன. இத னால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ள னர். இந்தக் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் உதவவேண்டும் எனவும் பாதிக் கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-402)

# மன்னார் நகர சபைப் பகுதியில் அபிவிருத்திக்கு ரூ.3 மில்லியன்

மன்னார்,ஜன. 9

கடந்த டிசெம்பர் மாதம் மன்னார் நகர சபையால் கேள்வி கோரல் முறையில் வழங்கப்பட்ட பண்டிகைக் கால விற்பனை நிலையங்கள் மூலம் 5 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றது.

இதில் எஞ்சியுள்ள சுமார் 3 மில்லியன் ரூபா நிதியின் மூலம் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மன்னார் நகர சபையில் இடம் பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையினால் கடந்த பண்டிகைக் காலங்களில் குத்தகையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 5 மில்லியன் ரூபா நிதியில் 2 மில்லியன் ரூபா பாதீட்டில் உள்ளடங்கப்பட்ட வேலைகளுக்காகவும், எஞ்சிய 3 மில்லியன் ரூபா வருமானத்தைக்குறை நிரப்பு வரவு-செலவுத் திட் டம் மூலம் 15 கிராம சேவகர் பிரிவுக்கும் தலா 0.2 மில்லியன் ரூபா வீதம் குறித்த பிரதேசங் களின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் வீதி வேலைகளை மேற்கொள்ளச் சபையால் உத்தேசிக் கப்பட்டது.

அதன் அடிப்படையில் மக்களின் அபிப்பிராயங்கள், மற்றும் ஆலோசனைகளைப் பெறும் வகையில் குறித்த அவசர கலந்துரையாடல் மேற் கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் வகையில் மன்னார் நகர சபையின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், 15 கிராம சேவகர் பிரிவுகளையும் சார்ந்த கிராம சேவகர்கள்,



அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சமூக மட்ட அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அதன் பிரகாரம் மன்னார் நகரத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட பலர் கலந்து கொண்டனர்.

முதலில் நகர சபையின் செயலாளரினால் சபையின் நிகழ் கால, எதிர்காலச் செயற் திட்டங்களுடன் குறித்த கலந்துரையாடல், ஏற்பாடு செய்யப்பட்டதன் நோக்கம் பற்றியும் விவரிக்கப்பட்டதுடன் கிடைக்கப்பெற்ற வருமானத்தில் மேற்கொள்ள வேண்டிய பொது மக்களின் தேவைகளை முன்வைக்குமாறும் அவரால் கோரப்பட்டது.

இதற்கிணங்கப் பல வகை கிராமங்களையும் சேர்ந்த மக்களினால் பலதரப்பட்ட தேவைகள் முன்வைக் கப்பட்டபோதிலும், அவை பொதுவாக நகரப்பிரதேசத்தின் பொதுத் தேவைகளாகவே காணப்பட்டன.

அந்த வகையில் விளையாட்டு மைதானப் புனரமைப்பு, நகரத்துக்கான மணிக்கூட்டுக் கோபுரம், வடிகாலமைப்பு மற்றும் வைத்தியசாலையும் - தலைமன்னார் வீதியும் இணையும் இடத்தில் சுற்றுவட்டம், வீதி அமைப்பு, வீதி விளக்குப்பொருத்துதல் போன்ற தேவைகளும் முன் வைக்கப் பட்டன.

இதற்கமைவாகச் சீரற்ற வகையில் காணப்படுகின்ற மன்னார் பொது விளையாட்டரங்கு முதலில் புணரமைக்கப்படவும், நிதி மீதி காணப்படுமாயின் மன்னார் நகரப்பகுதியை அடையாளப் படுத்தும் வகையில் நகரின் மத்தியில் மணிக் கூட்டுக் கோபுரம் அமைக்கவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்திட்டங்களை நகர சபையுடன் இணைந்த வகையில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக 7 உறுப்பினர்களைக்கொண்ட செயற்திட்ட குழுவொன்றும் கலந்து கொண்டோர் மத்தியில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசுக்குச் செல்லும் வடக்கின் பல மில்லியன்கள்

## போக்குவரத்து நியதிச் சட்டம் உருவாக்கப்படாததால்

யாழ்ப்பாணம், ஜன.9

வட மாகாண சபையில் போக்குவரத்து நியதிச் சட்டம் உருவாக்கப்படாத காரணத்தால் பல மில்லியன் ரூபா நிதி மத்திய அரசின் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்குச் சென்றடைந்துள்ளது.

வட மாகாண சபையின் போக்குவரத்து நியதிச் சட்டம் இன்று வரை உருவாக்கப்படாத காரணத்தால் பல மில்லியன் ரூபா பணம் திரும்பிச் சென்றுள்ளது.

வடக்கின் ஐந்து மாவட்டத்திலும் உள்ள பஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்கான வழித்தட அனுமதிகளை மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பெறுகின்றபோது, செலுத்தப்படும் பணம் மாவட்டச் செயலகங்களில் தேங்கிக் கிடந்தன.

இவ்வாறு தேங்கியிருந்த பணத்தில் வடக்கின் பணம் மட்டும் சுமார் 130 மில்லியனை அண்மித்துள்ளது. வடக்கு மாகாண சபையில் போக்குவரத்து நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பின் இந்தப் பணத்தின் பெரும் பகுதி வடக்கின் போக்குவரத்து அபிவிருத்திக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும்.

இருவருடகால இடைவெளிக்குள் சட்டம் உருவாக்கப்படாத காரணத்தால் பல மில்லியன் ரூபா பணம் மத்திய அரசின் தேசிய போக்கு வரத்து ஆணைக் குழுவுக்குச் சென்றடைந்துள்ளது.

குறிப்பாக வடக்கின் ஐந்து மாவட்டச் செயலகங்களில் நான்கு மாவட்டச் செயலகங்கள் நிலுவையைப் பேணி வந்த போதிலும் ஒரு மாவட்டச் செயலகம் வருடந் தோறும் நிதியை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளது. ஏனைய நான்கு மாவட்டச் செயலகங்களிலும் 130 மில்லியன் ரூபா பணம் கையிருப்பில் இருந்தது.

இருப்பினும் குறித்த பணத்தில் இரு மாவட்டச் செயலகங்களின் பணம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குத் திருப்பப் பட்டுள்ளது.

ஏனைய இரு மாவட்டங்களினது நிதிகளும் விரைவில் திரும்பும் நிலையில் உள்ளன. எனவே வட மாகாண வாகன உரிமையாளர்களால் செலுத்தப்பட்ட குறித்த நிதியை மாகாணத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பஸ் உரிமையாளர் சார்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-101)

# சிவத் தமிழ் விருது இம்முறை ஐவருக்கு




வலி.வடக்கு, ஜன. 9

அமரர் அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 91 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடை பெற்றது.

இதில் சிறப்பு நிகழ்வாக சிவத் தமிழ் விருது வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதில் ஐவர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கனடா சைவசித்தாந்த மன்ற நிறுவுநரும் இளைப்பாறிய ஆசிரியர்களுமான விசுவலிங்கம் வடிவழகாம்பாள் தம்பதிகளும், சிறப்பு விருந்தினர்களாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, தீவக வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோரும் கலந்துகொண் டனர்.

துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சிவத் தமிழ் செல்வி நினைவாலயத்தில் வழிபாடுகள் இடம் பெற்று திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வழிபாடுகள் இடம் பெற்றன.

ஆசியுரைகளை ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், இணுவில் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய அறங் காவலர் சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞான சம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கினார்கள்.

அன்னையின் பிறந்தநாள் அறக் கொடையாக யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கு உரிய நிதி யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரிடமும், தீவக கல்விவலயத்துக்கான சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம் தீவக கல்விப் பணிப்பாளரிடமும் கையளிக்கப்பட்டன.

வருடாந்தம் சான்றோர்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் சிவத் தமிழ் விருது கரவெட்டியைச் சேர்ந்த மூதறிஞர் இளைப்பாறிய ஆசிரியர் க.கணபதிப்பிள்ளை, மயிலிட்டியைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் கலாபூசணம் க.ப.சின்னராசா, மல்லாகம் இளைப்பாறிய ஆசிரியரும் முன்னைநாள் பிரதேச சபைத்தலைவரும் துர்க்கா பெண்கள் தொண்டர் சபைத்தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன், மானிப்பாய் இளைப்பாறிய நூலகர் செல்வி இராஜேஸ்வரி சுப்பையா பிள்ளை, மூத்த பெண் எழுத்தாளர் இலக்கிய வித்தகி கலாபூசணம் திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

(த-86)

# மக்களுக்கானதே அரச வேலைகள்

## நியமனம் வழங்கும் நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.9

அரச உத்தியோகம் மக்களுக்காகவே அன்றி ஒவ்வொருவருடைய பிரத்தியேகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கானது அல்ல. -இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பட்டதாரிப் பயிலுநர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், சாரதிகள் ஆகியோருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் கல்வியற் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது–

இன்று அரசு மட்டும் ஒரு நாட்டில் தனித்து இயங்குவது என்பது கடினமானது. தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பலவும் அரசுகளுக்கு ஒத்திசைவாக நடந்து சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய நிலை வந்துள்ளது.

40, 50 வருடங்களுக்கு முன் அனைத்து நியமனங்களும் மத்திய அரசினாலேயே வழங்கப்பட்டன. நியமனம் வழங்கப்படுகின்ற இடத்துக்குச் சென்றேயாக வேண்டிய நிலைமை. மேன் முறையீடு எதுவும் செய்ய முடியாது.

நியமனங்கள் வழங்கப்படுவது அரச அலுவலகங்களில் உள்ள கடமைகளை முறையாகவும் பொறுப்புடனும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கேயாகும். அதை விடுத்து உங்கள் பிரத்தியேகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அல்ல என்பதை முதலில் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு வழங்கப்பட்ட கடமை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டு மிகவும் வினைத்திறனுடனும் விரைவாகவும் நேர்மையுடனும் உங்கள் கடமைகளை ஆற்றப் பழகிக் கொள்ளுங்கள். காரியாலயங்களில் வழ, வழவென்று சக அலுவலர்களுடன், ஊழியர்களுடன் சதா பேசிக் கொண்டிருப்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளாதீர்கள். வேலையில் இருக்கும் போது அரசியல் பேசுவதை ஒரு பழக்கமாக்காதீர்கள்.

உங்களை நாடி வருகின்ற பொது மக்கள் மீது எரிந்து விழாது அவர்களைப் பரிவுடன் அணுகித் தேவைகளை நிறைவு செய்யப் பழகுங்கள். சாதி, சமயம் பார்க்கப் போகாதீர்கள். சகலரும் மனித இனத்தவரே என்பதை மனதில் நிறுத்தி கடமைகளில் ஈடுபடுங்கள். சட்டத்திற்கு அமைவாக வேலை செய்யப் பழகுங்கள் - என்றார்.

(ற-ஜ-5)

# சுரேஸின் குற்றச்சாட்டு முழுக் கட்டுக்கதையே

## சி.வி.கே. சிவஞானம் பதிலடி

யாழ்ப்பாணம், ஜன 9

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற செய்தி ஒரு கட்டுக்கதை என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித் தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஊடகவியலாளர் சந்திப்பில், வடக்கு முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஒரு கட்சி முயல்வதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, வடக்கு மாகாண அவைத் தலைவர் மேற்கண்டவாறு பதிலடி வழங்கியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்வரும் 12 ஆம் திகதி சபைக்கு வருவதாகத் தெரிவிக்கப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனெனில் மாகாண சபையின் 12 ஆம் திகதி நிகழ்ச்சி நிரல் தயாராக்கப்பட்டுச் சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாறான ஒரு பிரேரணை எந்தவொரு மாகாண சபை உறுப்பினராலும் அவைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது வேண்டும் என்றே கட்சிக்கும் மாகாண சபைக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் வெளியடப்பட்ட செய்தி-என்றார்.

(த-101)

# தமிழ் மக்கள் பேரவைக்கு முற்போக்குக் கட்சி ஆதரவு

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவளிப்பதாக முன்னாள் மாநகர சபை உறுப்பினரும் முற்போக்குத் தமிழ்த் தேசி யக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எஸ்.விஜயகாந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது-

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுக்காக ஜன நாயக ரீதியாகப் போராடித் தோற்றுப் போன நாம் தென் இலங்கைப் பேரினவாத அரசிடம் இருந்து எமது உரிமைகளை வென்றெடுக்க ஆயுத ரீதியான போராட்டத்தைத் தொடங்கினோம்.

ஆனால் அந்த ஆயுத ரீதியான போராட்டத்துக்கும் ஈடுகொடுக்க முடியாமல் பல உலக நாடுகளின் உதவியுடனும் சூழ்ச்சி செய்து சிங்கள அரசு உக்கிரமான போரை நடத்தி முடித்தது.

2015 ஜனவரி மாதம் நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒரு ஜனநாயக ரீதியான வாக்கு என்ற ஆயுதம் ஏந்தி போர் ஒன்றைச் செய்து சிங்களப் பேரினவாதிகளுக்கு சக்கை அடி கொடுத்து, நாட்டைச் சுமுகமான நிலைக்குக் கொண்டு வந்தது மட்டுமல்லாது இரண்டு பெரும்பான்மை கட்சிகளையும் ஒன்றிணைத்து ஆட்சி நடத்தக் களம் அமைத்தும் கொடுத்தோம்.

இலங்கை மட்டும் அல்லாமல் உலக நாடுகளிலும் எமது ஆதங்கங்களை அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப வெளிப்படுத்தி வந்த வேளையில் வட மாகாண முதலமைச்சரை இணைத் தலை வராக ஏற்று ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிர சாதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியில் இருந்த விஜயகாந் பின்னர் தனிக்கட்சி ஆரம்பித்திருந்தார். தமிழ் முற்போக்கு கட்சியின் தலைவரான எஸ்.விஜயகாந், கொள்ளையடித்த நகைகளை அடைவு வைப்பதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் கைதாகிப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் இவர் மீது வழக்கும் பதியப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கி வந்த இவர், கடந்த ஜனாதிபதித் தேர்தலோடு தனது ஆதரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்ட பின்னர், முழு அடைப்புப் போராட்டத்தின் போது யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற் கொள்ளப் பட்டிருந்தது. தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் எஸ்.விஜயகாந் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தவராவார்.

(ற-ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்களுக்கு ஒரு தொகுதி தரமான
உடல் ஆரோக்கிய உபகரணங்கள் (Orthopedic & Healthcare Items)
வந்துள்ளது உங்கள் தேவைகளுக்கு தயவு செய்து எம்மை அணுகுங்கள்

| | | |
|---|---|---|
| WALKERS - S/S High Quality 0 Single Bar | 4186 | 00 |
| WALKERS - S/S High Quality - Double Bar for long Durability | 4515 | 00 |
| Walkers - Gold Color - Highly elegant | 5290 | 00 |
| Wheel Chairs Full Chromium Plated | 9960 | 00 |
| Commod Wheel Chair | 14900 | 00 |
| Commod EWheel Chair - Wheel with Tyres | 14900 | 00 |
| Walking Aids - Quad Cane S/S- Adjustable | 1600 | 00 |
| Walking Aids - Tripod S/S -Adjustable | 1400 | 00 |
| Walking Sticks - Many Varieties from Rs. 550.00 | | |
| ELBOW Crutches - Hight Adustable | 1111 | 00 |
| Under Arm Crutches Pairs - Hight Adjustable | 2375 | 00 |

நாங்கள் என்றும் உங்களுடன்
வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 0077, Fax: 222 2445
Office Mob: 077 44 22 367 Email vanisurgi@sltnet.lk

Yarl Beauty Academy
YARL BEAUTY ACADEMY
அழகுக்கலை பயிற்சிகள்
தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்



- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில்
முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்
வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு
Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)
இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

March 19 th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்



March 19 th இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 வரை நடைபெறும்.
அன்றாடு வகுப்புகள் நடைபெறுகின்றன

THIS IS NOT CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

IELTS

IELTS பாடங்களை படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.

இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Course Schedule
Mon, Tues, Wed, Thur
10 Week
8.30 - 10.30, 5.00 - 7.00
Saturday & Sunday
Duration 10 Week
Time 8.30 - 11.00

IELTS
LIFE SKILLS A1
"IELTS Registration Center for British Council"
British College of English
No.192, Navalar Road Jaffna.(பெருமாள் கோயிலுக்கு சமீபமாக)
Tel: 021 222 0384, 0778803887

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English
Veta Fluency Diploma
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, Fri 9.30 a.m.<br>Mon, Fri 3.30 a.m. | Tue, Thu 11.30 a.m.<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m.<br>Tue, Thu 3..30 a.m | Mon, Wed, Fri<br>1.30 p.m. . | Sat, Sun<br>8.00 a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
DMI COMPUTER EDUCATION
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுயம்பு ஹோம் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

B.B.C யின் புதிய கிளைகள் ஆரம்பம்
K.K.S. வீதியில், சுன்னாகத்திலும்,
பருத்தித்துறை வீதியில்,
நீர்வேலியிலும்...
British BUSINESS COLLEGE
Where Students Come First





UK
STUDENT VISA
ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் UK கனவை நனவாக்கினோம்
UGC APPROVED DEGREE

INFORMATION TECHNOLOGY
Software Engineering, Computer Science, Multimedia
MANAGEMENT
Accounting & Finance, Business & Management, Professional Development, Economics
ENGINEERING
Civil, Architecture & Constrction, Electrical, Mechanical
SCIENCE
Biomedical, Biosciences, Forensic, Pharmaceutical
Law, Statistics

கடந்த 15 வருடமாக இலங்கை மாணவர்களுக்கு விசாவினை பெற்றுக்கொடுப்பதில் முன்னோடியான நிறுவனம்.

சரியான ஆவணங்கள் சமர்பிக்கப்படின் குறுகிய காலத்தில் UK பயணிக்க முடியும்.

இலவச ஆலோசனை யாழ். கிளை வாரநாள் 9 - 5 மணிவரை வார இறுதி 9 - 2 வரை

STUDY IN LATVIA WITH WORK PERMISSION (EUROPE)
யாழ். மாணவர்களே! அரிய சந்தர்ப்பம்

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்
- Sehengen Visa (26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்.)

021 7538395 | IELTS கற்கைநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது

EXPONET Overseas Consultants www.expogroup.lk
No. 197, Arasady Road, Jaffna. 021 7538395 | 071 4150995 Email: expojaffna@yahoo.com
No. 379-1/2 Galle Road, Col -06. Hotline: 011 7555511/14/18 E-mail: nimal@expogroup.lk

தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்
BBC 14 அது வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி
ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet
* English Day Concert
* முத்தமிழ் விழா
* Art & Craft Exhibition
* Carols
* Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்
NEW SYLLABUS
*Dr. Maria Montessori Method
*Canadian ECE Method
*German LKG, KG, UKG System
எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்
*கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆனைச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி | Dr. சுபரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | பருத்தித்துறை வீதி நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | [illegible] | [illegible] |

British BUSINESS COLLEGE
Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆவது ஆண்டு நிறைவில் உமது நினைவுகளுடன் நாம்



(ஓவியர் திலகம் , வர்ணவாரிதி)
அமரர்
**இரத்தினம் கனகராஜா**
(கலைவாணி கலையகம்)
திதி - சதுர்த்தசி

**மண்ணுக்கு**
15.02.1950

**விண்ணுக்கு**
24.12.2000

விஸ்வகுலதிலகமாய் விளங்கிய செம்மல் நீர்
ஓவியக்கலையை நன்றே பயின்றதுடன்
ஆலயம் தோறும் ஓவியமும் படைத்து
சரித்திரமாக காவியமும் படைத்தீர்

குடும்பத்தின் மூத்தவனாய்
குலவிளக்காய் விளங்கிய நீர்
பிள்ளைகளின் வாழ்வுக்காய்
அயராது உழைத்தும் நின்றீர்

யாழ் முதல் கொழும்பு, மலையகம் ஈறாய்
உமது கைவண்ணம் இன்றும் தெரிகிறது
திருமலை மண்ணில் கலைவடிக்கையில்
காவியமானது உமது வாழ்வு.

உமது நினைவுகளுடன்
அன்பு மனைவி க.புஸ்பராணி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

கலைவாணி கலையகம்,
அரசடி லேன்,
திருநெல்வேலி.

(67449) (11.15)

# 2015 இல் அதிகளவில் உயிரை மாய்த்துக் கொண்ட ஆண்கள்

இலங்கையில் கடந்த வருடம் 2 ஆயிரத்து 375 பேர் தம்முயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். அவர்களில் பெண்கள் 519 பேர். மிக அதிகளவாக ஆண்கள் ஆயிரத்து 856 பேர் அவ்வாறு உயிரை மாய்த்துள்ளனர். 2014 ஆம் ஆண்டில் தம்முயிரை மாய்த்தவர்களில் ஆண்களே அதிகம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:
கடந்த வருடம் செப்ரெம்பர் இறுதி வரையான காலப்பகுதி வரை இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளது.
2014 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 144 பேர் தம்முயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். அவர்களில் பெண்கள் 660 பேராக இருக்க, ஆண்களே அதிகளவாக 2 ஆயிரத்து 484 பேர் உயிரை மாய்த்துள்ளனர். அதன்படி இரண்டு வருடங்களிலும் தம்முயிரை மாய்த்தவர்களில் ஆண்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது.
அது மட்டுமன்றி உயிர் மாய்ப்பு எண்ணிக்கை கடந்த வருடம் மாதாந்தம் சுமாராக 263 பேராகப் பதிவாகியுள்ளது -என்றார். (த-4-22)

## மரண அறிவித்தல்

**நாகலிங்கம் மனோரஞ்சிதம்** (ரஞ்சிதம்)



திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மனோரஞ்சிதம் (ரஞ்சிதம்) நேற்று (08.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
சங்கானை.

தகவல்.
குடும்பத்தினர்.

தொடர்பு:- 021 491 2176

# 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சின்னப்பொடி திரவியம்**



திதி: அமாவாசை
மண்ணில்
01.01.1944

விண்ணில்
18.12.1998

எங்கள் வாழ்வில் இன்பத்தைப் பெருக்கி இன்னலைக் களைத்திட
எமக்கு இறைவனால் பரிசளிக்கப்பட்டவர் நீங்கள், உங்களுக்கு நாம் பட்ட
கடன் எத்தனை பிறவி எடுத்தாலும் தீர்க்க முடியாதப்பா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால்.

குடும்பத்தினர்.

# நீங்காத நினைவலைகள்...

**25 ஆம் ஆண்டு நினைவு**

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்**





**அமரர் S.M. அப்பாத்துரை**

தோற்றம் 22.02.1921 மறைவு 20.02.1991

**அமரர் தங்கம்மா (பசுபதி) அப்பாத்துரை**

தோற்றம் 12.02.1926 மறைவு 10.12.2015

கடந்த 10.12.2015 சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு தங்கம்மா அப்பாத்துரை அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.01.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரும் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(66767)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**பரமேஸ்வரி நல்லதம்பி**



அன்னை மடியில்
27.05.1943

இறைவன் அடியில்
23.12.2011

எங்கள் பாசத்தின் உறைவிடமே
எமைச் சுமந்து ஆராதித்து வளர்த்த தாயே!
நயினை நாகபூசணி அம்பிகையின்
பாதாரவிந்தங்களில்
ஆத்ம சாந்தி அடைவீர்கள் அம்மா!

கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை ஆட்சியில் அமர்த்தச் சிலர் முயற்சி

## அமைச்சர் மங்கள குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.9
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தொடர்ந்தும் ஆட்சியில் அமர்த்திக் குற்றச் செயல்களை- மோசடிகளை மேற்கொள்ள சில தரப்பினர் முயற்சித்து வருவதாகவும், இனி அதற்கு இடமில்லை எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்அங்குதொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

பெரும் மோசடிகளில் ஈடுபட்டவர்களை எளிதில் பிடித்துவிட முடியாது. பெரிய திட்டங்களைத் தீட்டிக் கொள்ளையிட்டவர்களை, பிக்பொக்கட்காரர்களைக் கைது செய்வது போன்று கைது செய்ய முடியாது.

சிலர் எம்மிடம் கேட்கின்றனர் "எங்கே நீங்கள் பிடித்த கள்வர்கள்?" என்று. கடந்த அரசின் ஒரு ஊழல் மோசடி குறித்து விசாரணை நடத்த நான்கு நாடுகளுக்குச் செல்ல நேரிட்டது. இவ்வாறு விசாரணை நடத்த சில காலம் தேவைப்படும். இன்னமும் சில வாரங்களில் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சிலர் கைது செய்யப்பட உள்ளனர்.எமது தரப்பில் உள் ளவர்கள் எவரும் கள்வர்களுடன் தொடர்பு கொள்வதில்லை. குற்றச் செயல்களில் ஈடுபட்ட அனைவருக்கும் சட்டத்தின் அடிப்படையில் தண்டனை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-10)

> " பெரும் மோசடிகளில் ஈடுபட்டவர்களை எளிதில் பிடித்துவிட முடியாது. பெரிய திட்டங்களைத் தீட்டிக் கொள்ளையிட்டவர்களை, பிக்பொக்கட்காரர்களைக் கைது செய்வது போன்று கைது செய்ய முடியாது. "



# தமிழரின் உரிமைகளை அடைய இளைஞர்களை ஒன்று திரட்டுக

## கூட்டமைப்பிடம் கோருகிறார் ராஜாராம்



கொழும்பு, ஜன.9
தமிழர்களின் உரிமைகளுக்காகவும் அவர்களின் முன்னேற்றத்துக்காகவும் மலையக இளைஞர் யுவதிகளையும், வடகிழக்கு இளைஞர் யுவதிகளையும் இணைத்து சாத்வீகப் போராட்டம் ஒன்றுக்காக அனைவரும் தயாராக வேண்டும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் ராசாராம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மலையகத்துக்குப் பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுடனான கலந்துரையாடல் ஒன்று ஹற்றன் நகரில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் நிலவிய உள்நாட்டுப் போர்காரணமாகநாம் இணைந்து செயற்பட முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. எமது மக்கள் மீது சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற ஒரு நிலை அன்று இருந்ததன் காரணமாக நாங்களும் மிகுந்த பயத்துடனேயே வாழ வேண்டிய ஒரு நிலைமை இருந்தது.

ஆனால் தற்பொழுது அந்த நிலைமை மாறியுள்ளது. எனவே இந்தச் சூழ்நிலையை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மலையக இளைஞர், யுவதிகளையும், வடக்கு-கிழக்கு இளைஞர் யுவதிகளையும் ஒன்றிணைத்து ஒரு சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுத்து அதன் மூலம் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

மலையக இளைஞர்களுடைய பிரச்சினையும் வடகிழக்கு இளைஞர் யுவதிகளுடைய பிரச்சினைகளும் வெவ்வேறுபட்டவை. ஆனாலும் நாம் அனைவரும் இணைந்து ஒற்றுமையாகச் செயற்பட்டால் அனைத்து விதமான விடயங்களையும் வெற்றி கொள்ள முடியும்.

எனவே நாங்கள் தற்பொழுது சமூக ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படுகின்ற நிலைமை உருவாகியுள்ளது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதற்கு மலையக இளைஞர்களை ஒன்றிணைக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மலையகத்தைப் பொறுத்தவரை எமக்குக் கல்வி ரீதியாகப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே அவ்வாறான விடயங்களில் வடக்கு-கிழக்கில் இருந்து எமக்கு உதவி செய்ய முடியும்.

இந்த நாட்டில் நாம் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டால் மாத்திரமே எமது இலக்கை அடைய முடியும். மலையகத்தில் நீண்ட இடைவெளியின் பின்னர் தற்பொழுது ஒரு அமைப்பாக அதாவது தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற அமைப்பை ஏற்படுத்திச் செயற்பட்டு வருகின்றோம்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஏனைய தமிழ் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் கனிந்து வருகின்றது. அதனையே மக்களும் எதிர் பார்க்கின்றனர்-என்றார். (ஐ-10)

# பொதுபல சேனாவின் கருத்துக்கு அரச ஊழியர் சங்கம் கண்டனம்

அம்பாறை,ஜன.9
புனித அல்குர் ஆனை இலங்கையில் தடை செய்யவேண்டுமென பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அண்மையில் முன்வைத்த கருத்துக்கு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வன்மையான கண்டனத்தைத்-தெரிவித்துள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் ஞானசாரதேரரின் மேற்படி கருத்தை வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் நல்லாட்சி மலர்ந்ததைத் தொடர்ந்து சற்று மெளனித்திருந்த பொதுபல சேனா சிறுபான்மை மக்கள் மீதான குறிப்பாக முஸ்லிம்கள் மீதான விசக் கருத்துக்களை மீண்டும் கக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த மகிந்த ஆட்சியின்போது தமது இனவாத,மதவாத செயற்பாடுகளை முன்னிறுத்திக் கோரத் தாண்டவமாடிய பொதுபல சேனாவின் செயலை நல்லாட்சியிலும் தொடரஇடமளிக்கப்பட்டிருப்பதுதான் கவலையளிப்பதாகவுள்ளது.

முஸ்லிம்களுக்கெதிரான பரப்புரைகளையும் வழமையான பாணியில் முடுக்கிவிட்டுள்ள பொதுபல சேனாவின் ஞானசாரதேரர், தமது உச்ச வெளிப்பாடாகப் புனித திருக்குர் ஆனை இலங்கையில் தடைசெய்ய வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

வாழ்வின் விமோசனத்துக்கும் சுபீட்சத்துக்கும் நேர் வழிகாட்டும் புனித குர்ஆனை இலங்கையில் தடை செய்யவேண்டுமென அவர் கோருவது இந்த நாட்டு முஸ்லிம்களின் மனதில் ஆறாத் துயரை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை முஸ்லிம்களை மட்டுமன்றி உலக முஸ்லிம்களின் கவனத்தையும் ஈர்த்திருக்கும் ஞானசார தேரரின் இந்தக் கருத்து வன்மையாகக் கண்டிக்கத்தக்கதும் பெரும் விசனத்துக்குரியதுமாகும்.

எனவே இன்றைய நல்லாட்சியில் இனவாத மதவாத செயற்பாடுகளை முன்னெடுக்கும் இத்தகைய அமைப்புகள் மீதும் அதன் சூத்திரதாரிகள் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-30)

# போர் விமானங்கள் கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன.9
சீனாவின் தொழில்நுட்ப உதவியுடன் பாகிஸ்தான் தயாரித்துள்ள ஜே.எப் 17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது என வெளியாகியுள்ள தகவலை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

பாகிஸ்தானிமிருந்து போர் விமானம் வாங்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. இது பற்றிப் பேச்சு நடத்தப்படக்கூட இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான அந்நாட்டுக் குழுவினருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கைக் குழுவினருக்குமிடையில் இருதரப்புச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு வர்த்தகம், விஞ்ஞானம்,தொழில்நுட்பம் சார்ந்த எட்டு உடன்பாடுகள் கை யெழுத்திடப்பட்டுள்ளன. இதில் இலங்கைக்கு முதல் கட்டமாக எட்டு ஜே.எவ் 17 போர்விமானங்களைப் பாகிஸ்தான் வழங்கும் என்றுபாகிஸ்தான் பிரதமரின் குழு வில் இடம்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி டெய்லி ரைம் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய, பாகிஸ்தான் ஊடகங்களும் இவ்வாறு செய்தி வெளியிட்டிருந்தன.

பாகிஸ்தானிடம் போர் விமானங்களை வாங்க இலங்கை திட்டமிட்டுள்ளது எனச் செய்திகள் வெளியாகியிருந்தபோது அதற்கு இந்தியத் தரப்பில் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே அந்த எதிர்ப்பையும் மீறி இஸ்லாமாபாத்திடமிருந்து விமானங்களைக்கொள்வனவு செய்வதற்கு கொழும்பு பச்சைக்கொடி காட்டியுள்ளது என்றும் தகவல் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், இதுவிடயம் பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் வினவப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே இது பற்றி பேச்சுக்கூட நடத்தப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, போர்விமானக் கொள்வனவு தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. இது பற்றி விமானப் படைக்கு இன்னமும் அறிவிக்கப்படவும் இல்லை என்று விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் சந்திம அல்விஸ் தெரிவித்தார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்களுடன் 76,492 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜன. 9

நாட்டில் கடந்த வருடம் வெவ்வேறு சம்பவங்களிலிருந்து 46 கிலோ 51 கிராம் 280 மில்லிகிராம் அளவான ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளதாகவும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 26 ஆயிரத்து 492 பேர் கைது செய்யப் பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். பொலிஸ்தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதான போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் போதைப் பொருள் கடத்தப்படும் வழிகள் தொடர்பில் அறிந்துகொண்டமை காரணமாகப் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் நச்சுப் போதைப் பொருள்களை இலங்கைக்கு எடுத்துவரும் சர்வதேச வலையமைப்புக்களை இனங்கண்டு அவற்றுடன் தொடர்புடைய இலங்கையர்களான வர்த்தகர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்யும் படலத்தை ஆரம்பிக்கக் கடந்த வருடமே தமக்குச் சந்தர்ப்பம் அமைந்திருந்தது. அதனால் அந்த வலையமைப்பு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர கடந்த வருடம் 6 ஆயிரத்து 569 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதோடு அதனுடன் தெடர்புடைய குற்றச்சாட்டில் 50 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். கொக்கேயின், அபின் போதைப்பொருள்கள் 230 கிலோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கடந்த வருடம் குறித்த தொகை கைப்பற்றப்பட்டபோதும் அதற்கு முன்னைய 2014 ஆம் ஆண்டு, 313 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 23 ஆயிரத்து 331 பேர் கைது செய்யப்பட்டனர்–என்றார். (து-4-22)

# கடந்த வருடத்தில் 1,854 வன்புணர்வு

## அதில் 80 வீதமானோர் சிறுமிகள்
## பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 9

நாட்டில் கடந்த வருடம் ஆயிரத்து 854 வன்புணர்வுச் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் சிறார்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களே மிக அதிகளவாக, 80 வீதமாகப் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்புணர்வுச் சம்பவங்களில் ஆயிரத்து 501 சம்பவங்கள் 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் மீதானதாகப் பதிவாகியுள்ளன. அவற்றில் 1,209 சம்பவங்கள் அவர்களின் விருப்பத்துடனேயே இடம்பெற்றுள்ளன என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண்கள் மீதான வன்புணர்வு தொடர்பில் 2014 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 8 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில், ஆயிரத்து 911 சம்பவங்களில் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன. ஏனைய சம்பவங்கள் தொடர்பில், விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஆயிரத்து 854 வன்புணர்வுச் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளபோதும் அவற்றில் ஆயிரத்து 714 சம்பவங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 80 சதவீதமானவை 16 வயதுக்கு குறைந்தவர்களுக்கு எதிரான சம்பவங்கள்.

16 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறுவர் என்ற பிரிவில் அடங்குவதால் அவர்கள் விரும்பிப் பாலியல் உறவில் ஈடுபட்டாலும் அவை சட்டத்தின்படி வன்புணர்வு என்றே கருதப்படும். அதன்படியே வழக்குத் தொடுக்கப்படும். இந்தச் சம்பவங்களில் பெரும்பாலானவை அவர்களின் காதலர்களால் செய்யப்பட்டவை . குறித்த வயதுப் பிரிவினர் பாடசாலை மாணவர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கும்போது அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

எவ்வாறாயினும் இதற்குக் குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் ஆசிரியர்கள், சமூகம் என அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் உள்ளனர்–என்றார். (து-4-22)

# 2015 இல் 441 கொலை

நாடுமுழுவதுமாகக் கடந்த வருடம் 441 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் 390 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2015 ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான பதிவை ஆதாரமாகக் கொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி கடந்த வருடத்தின் 11 மாதங்களில் இந்தக் கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள் ளன. அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விகிதாசாரம் 88 வீதம் நடந்தேறியுள்ளது.

சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவை தவிர ஏனையவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புங்குடுதீவு மாணவி கொலை, கொட்டதெனியாவ சிறுமி கொலை போன்ற சம்பவங்களின் பின்னர் – பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின் காரணமாக இவ்வாறான கொலைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 2014 ஆம் ஆண்டு 548 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 477 கொலைச் சம்பவங்களின் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

# ஸ்மார்ட் மீற்றரினால் உயருமா மின் கட்டணம்?

கொழும்பு, ஜன. 9

ஜனவரி 9ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஸ்மார்ட் மீற்றர் மூலம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் என்பது தொடர்பில் தற்போதே கருத்துத் தெரிவிக்க முடியாது என மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஜனவரி 9ஆம் திகதி முதல் மின்சாரசபையால் பல்வேறு புதுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அதற்கமைய வீடுகளின் மின்சார பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக ஸ்மார்ட் மீற்றர் எனும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் மின் கட்டணம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

வீடுகளில் இரவு 7 மணிமுதல் 10 மணிவரையிலேயே அதிக மின் பாவனை மேற்கொள்ளப்படுகின்றது. மின் அழுத்தி, , சலவை இயந்திரம் உள்ளிட்ட காலை மாலை வேளைகளில் பயன்படுத்த முடியுமான பொருள்களும் இரவு வேளைகளில் பயன்படுத்தப் படுகின்றன.

இதனால் இக்காலநேரத்தில் பெரும் மின்வலு எமக்குத் தேவைப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இதனை எம்மால் சரியான முறையில் வழங்கமுடியாதும் போகலாம். இதனைக் கட்டுப்படுத்த மக்களது மின்பொருள் பாவனைக்கான நேரங்களை ஒதுக்கி அதனை அளவீடுசெய்வதற்கு மீ ற்றர் கருவி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதனை மீறிச் செயற்படும் சந்தர்ப்பத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படுவது தொடர்பில் எவ்வித தீர்மானங்களும் இன்னமும் இல்லை. இந்தத் திட்டம் தொடர்பில் மேலும் கலந்துரையாடி வருகின்றோம் எனத் தெரிவித்தார். (து-சி)

# இலங்கையை ஆக்கிரமிப்பதற்காகவே அனுமன் பாலம் அமைக்கிறது டில்லி

## உதய கம்மன்பிலவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, ஜன. 9

இராமரும், அனுமனும் அன்று இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பலவந்தமாக பாலம் அமைத்து இலங்கையை ஆக்கிரமித்தனர். மீண்டும் இவ்வாறானதொரு ஆக்கிரமிப்புக்காகவா அனுமன் பாலம் அமைக்கப்படுகின்றது? என்று சந்தேகம் எழுப்பியுள்ளது மகிந்த ஆதரவு அணி.

கூட்டு எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணியினர் கொழும்பிலுள்ள என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே புதிய ஜாதிகஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அனுமன் பாலம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த எனக்கு எதிராக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.



இலங்கையுடன் பேச்சு நடத்தப்பட்டு குறித்த பாலம் அமைக்கப்படும் என்று இந்திய அமைச்சர் ஒருவர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். இதைத் தான் நான் சுட்டிக்காட்டினேன். ஆனால், இப்படியொரு பாலம் அமைக்கப்படாது. இதுபற்றி பேச்சு நடத்தப்படவில்லை. இலங்கைப் பிரதமரை நம்பாது கம்மன்பில இந்திய அமைச்சரை நம்புவது ஏன்? என்று லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய அமைச்சர் ஒருவர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உறுதிமொழி வழங்கினால் அது மீறப்படாது. ஆனால், இங்கு அப்படியில்லை. நாடாளுமன்றத்தில் பொய் கூறுவதை எமது பிரதமர் வழமையாகக் கொண்டுள்ளார். 100 நாள்களுக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படும் எனக் கூறியிருந்தார். நடத்தப்பட்டதா? பட்ஜெட்டில் பல திருத்தங்களை முன்வைத்தார். அவை நடைமுறைப்படுத்தப்பட்டனவா? இறுதியில் ரவியின் பட்ஜெட் அப்படியே நிறைவேற்றப்பட்டது. அனுமன் பாலத் திட்டப் பணி மார்ச்சில் ஆரம்பமாகும் என்றும், இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் கோரப்பட்டுள்ளது என்றும் இந்திய அமைச்சர் கூறியுள்ளார். சுற்றாடல் அறிக்கையில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இல்லாவிடின் பாலம் அமைக்கும் பணி இப்போது ஆரம்பமாகியிருக்கும்.

பாலம் அமைப்பது பற்றி பேச்சு நடத்தப்படவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுவது உண்மையாக இருந்தால் சரி. அது பொய்யாக இருந்தால்தான் பிரச்சினை. காரணம், இலங்கையுடன் பேச்சு நடத்தாது, எந்தவித முன்னறிவித்தல்களையும் விடுக்காது இந்தியா பாலம் அமைக்க முயற்சிக்கிறது என்பது அதன்மூலம் புலனாகும். இதை இந்தியாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது.

இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் இற்றைக்கு 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இராமரும் அனுமனும் இணைந்து இலங்கைக்குப் பலவந்தமாக பாலம் அமைத்தனர். அந்தவழியாக வந்துதான் இராமர் இலங்கையை ஆக்கிரமித்தார். தனது விசுவாசியான விபூசணனுக்கு ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

வாலில் தீமூட்டிக்கொண்டு இந்தப் பாலத்தினூடாக வந்துதான் அனுமன் இலங்கைக்குத் தீ வைத்தார். எனவே, மீண்டுமொரு இராமாயணத்தை எமக்கு நினைவூட்ட விரும்புகிறார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல– என்றார். (து-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களுக்குத் தேவை சம உரிமை வாழ்வே.....

அடே அப்பா! நாட்டின் புதிய அரசுக்கு 'நல்ல ஞானம்' பிறந்திருக்கிறது! நோர்வே நாட்டின் அமைச்சர் ஒருவர் இங்கு வந்திருக்கும் வேளையில், தனது ஞானத்தின் பாற்பட்டு--

போரின்போது இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித குலத்துக்கு எதிரான கொழும்பு அரசின் குற்றங்கள் தொடர்பில், பொறுப்புக் கூறுவதற் கான செயல்முறையை அடுத்த வாரத்தில் ஆரம் பிக்க உள்ளது அரசு.

போர் உச்சக் கட்டத்தில் இருந்தவேளைகளில்--

அரசும், விடுதலைப் புலிகளும் இராணுவச் சம நிலையில் இருந்தபோதும் சரி--

விடுதலைப்புலிகள் மேல் உயர்ந்து நின்ற போதும் சரி--

பல்வேறு சந்தர்ப்பங்களில் நோர்வேயின் உதவி அரசுக்கு மிகப்பெரிய அளவில் தேவைப்பட்டது.

ஆனால், விடுதலைப்புலிகள் பலவீனம் அடையும் போதெல்லாம், நோர்வேயை சிறிதளவும் கணக்கில் கொள்ளாமல், பொருட்படுத்தாமல் வேண்டாப் பெண்டாட்டியாகக் கருதிய காலமும் உண்டு.

இப்பொழுது, நோர்வே நாட்டின் பிரதிநிதியாக, அதன் வெளிவிவகார அமைச்சர் போர்க் பிரண்டே கொழும்பு வந்திருக்கும் வேளையில், பேச்சு நடத்தி--

போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து, பொறுப்புக் கூறலுக்கான உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்க--அவரது ஆலோசனைகளைப் பெறுவதற்குக் கொழும்பு அரசு முடிவு செய்திருக்கிறது. அதனை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில், நோர்வே நாட்டுக்கு நீண்ட காலமாக, அழிக்க முடியாத பட்டறிவும், கொழும்பு அரசின் சுத்துமாத்துப் போக்கும் தண்ணீர் பட்டபாடு.

தமிழ் மக்களுக்குரிய அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த இலங்கை அரசுகள், காலால் உழக்கித் துவம்சம் செய்யும் ஜனநாயக விரோதப் பாதையிலேயே ஊன்றிக்கால் பதித்தன. அது இப்போது வரலாறு என்றாகி விட்டது.

இன்று சனிக்கிழமை ஒன்பதாம் திகதி, நாடாளு மன்றம், அரசமைப்புச் சபையாக மாற்றப்பட உள்ளது. அதன்போது மக்களின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனோடு மக்களின் எதிர் பார்ப்புக்களை புதிய அரசமைப்புப் பிரதி பலிக்கும் என்றும் நம்பப்படுகிறது.

எதற்கும், நல்லாட்சி அரசை உருவாக்குவதற்கு உதவிய, புதிய ஜனாதிபதியை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதில் அதீத ஆதரவை நல்கிய, இலங்கை வாழ் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை, வெறும் போசைக்கைக்குக் காட்டாமல், நுள்ளிக் கிள்ளி வழங்க முற்படாமல், தமிழ் மக்களை சரிசமமாக--சகோதரப் பிரசைகளாக வாழ்வதற்கான சமஉரிமைகள் வழங்குவதற்கு இதுவே நல்ல தருணம்.

சிறிசேன-ரணில் அரசு நிலைத்து நிற்பதற்கு, அது தவிர்க்க முடியாத பெரும் கூறு என்பதை ஒரு கணமேனும் மறந்து விடலாகாது. அது மட்டுமே நன்றிக் கடனுக்குக் கைம்மாறாக அமையும்.

# ஒன்பது உயிர்களைக் காவுகொண்ட தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள்

**அதன் 42 ஆவது நினைவு தினம் நாளை**

மு.ஈழத்தமிழ்மணி

நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு1974ஆம் ஆண்டு ஜன வரி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. அப்போதைய பிரதமரான சிறிமாவோவின் தலைமையிலான அரசு யாழ்ப் பாணத்தில் மாநாடு நடத்துவதை விடுத்து கொழும்பில் நடத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. தமிழுக்கு விழா எடுப்பதற்கு நாளும் குறிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடங்கி 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தி லேயே மாநாட்டை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. அதன்படி மூன்றாம் திகதி மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வணபிதா தனிநாயகம் அடிகளார் தலைமையில் ஆரம்பமாகியது.

முதல்நாள் நிகழ்வில் உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்ற கருப்பொருளோடு தொடங்கிய முதல் நாள் மாநாட்டு நிகழ்வில் வெளிநாட்டிலிருந்து மாநாட்டுக்கு வருகை தந்திருந்த தமிழ்ப் பேரறிஞர்களால்தமிழின்பெருமை பற்றி உரையாற்றப்பட்டது.

### தமிழுக்கு விழா

நாங்கள் தமிழர்கள், தமிழுக்கு விழா என்றால் அது இந்திரலோகத்து விழா போன்று இருக்க வேண்டும் என்ற உணர்வு அனைவரிடமும் காணப்பட்டது. யாழ்.மா நகரம் தென்னை, மாமரங்கள், பனை மரங்கள், வாழை மரங்கள், மூங்கில்கள், சவுக்கு மரங்கள் என மரங்களால் அலங்கரிக்கப்பட் டது.

சந்திக்குச் சந்தி மூலை முடுக்குகளில் எல்லாம் இளைஞர் கூட்டம் கூட்டமாக ஒன்றுதிரண்டு எவரும் வழிகாட்டாமலே சகலவற்றையும்செய்துதமிழுக்கு அணிகலன் சேர்த்தார்கள்.

யாழ்ப்பாணக் குடாவின் தெற்கு நுழைவாயில் ஆனையிறவு; மேற்கு நுழைவாயில் ஊர்காவற்றுறை. ஆனையிறவு தொடக்கம் ஊர்காவற்றுறை வரை இருமருங்கிலும் தோரணங்கள் வாழைகள் கட்டப்படாத வீதிகள், ஒழுங்கைகள் இருக்கவில்லை. அலங்கரிக்கப்படாத பொதுஇடங்கள் காணப்படவில்லை.

### அலங்கார வளைவுகள்

அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டன. வருக... வருக.. என்ற எழுத்து வடிவங்களோடு அவை காணப்பட்டன. பேரறிஞர் அண்ணாவும், ஆறுமுகநாவலரும் சிலையாகவும், திருவுருவப்படமாகவும் உயர்ந்து நின்றனர். மின்சாரமில்லாத ஊர்கள், சந்திகள் தனியாரின் மின்சார சாதனங்கள் மூலம் இரவு முழுவதும் மின்ஒளி அலங்காரங்களைப் பெற்றிருந்தன.

தமிழறிஞர்களின் உரைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, நகர் முழுவதும் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் மூலம் மக்கள் கேட்கக்கூடியவாறாக ஒலிபரப் பப்பட்டன. இந்த நாள்களில் பகட்டான ஒளியும், ஒலியும் காட்டி அலங்காரம் செய்து கொள்ளமுடியாத பணத்தால் என்ன பயன்? என்று எண்ணிய வர்த்தகர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஒருவரையொருவர் நீ, நான் என முந்திக்கொண்டு பணம் செலவு

> தமிழறிஞர்களின் உரைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, நகர் முழுவதும் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் மூலம் மக்கள் கேட்கக் கூடியவாறாக ஒலி பரப்பப்பட்டன.

செய்து யாழ்.நகரை அழகூட்டினர். மாநாட்டையொட்டி மூன்று அரங்குகளில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியிருந்தன. இவை போதாதென்று வணிகர்கள் பலர் பஸ் நிலையத்தின் முன்னே 24 மணிநேரமும் இடைவிடாத மேளக் கச்சேரிகளைத் தொடர்ந்து சில நாள்கள் வரை நடத்தினர். மாறிமாறி இசைக் கலைஞர்கள் நாதஸ்வர, மேள இசை பொழிந்தனர்.

நாள்கள் நெருங்க நெருங்க மக்கள் அலை அலையாக முற்ற வெளி நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தனர். இறுதி நாள் நெருங்கிவந்து கொண்டிருந்தது. இளைஞர்கள் தங்களுக்கென அரசு இல்லையே என்ற ஆதங்கத்துடன் நாங்களும் ஆண்ட பரம்பரை இதோ எங்கள் ஈழத்தை ஆண்ட அரசர்களைப் பாருங்கள் எனக்கூறி அந்தப் பெருமிதத்தோடு பண்டாரவன்னியன், சங்கிலியன், தமிழ் நாட்டை ஆண்ட கட்டப்பொம்மன் போன்றவர்களினது திருவுருவங்களை சித்திரமாகப் பதித்து நகரில் காட்சிப் படுத்தியமை சிங்கள அரசுக்கும் அதன் அடிவருடியாக தமிழ் மக்களால் இன்றுவரை கூறப்பட்டு வருகின்ற மறைந்த முன்னை நாள் யாழ்.மாநகர மேயரான அல்பிரட் துரையப்பாவுக்கும் பேரெரிச்சலை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் மாநாட்டைத் திட்டமிட்டுக் குழப்பவேண்டுமென்ற நயவஞ்சக எண்ணமும் அவர்கள் மனதில் எழுந்தது. இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாக முன்னரே தமிழ் மக்கள் திரண்டபடியிருந்தனர். மாலை சாய்ந்து சூரியன் மறைந்து கொண்டதும் யாழ்.முற்றவெளி வளாகம் முழுவதும் இருளாகவில்லையே என்று சிந்திக்கின்ற வகையில் பகல்போல் மின்ஒளி பாய்ச்சப்பட்டிருந்தது. வர்ண மின்குமிழ்கள் நட்சத்திரக் கூட்டங்கள்போல ஒளியேற்றிக் கொண்டிருந்தன.

தமிழ்மக்களின் அலையில்மிதந்த முற்றவெளியில் இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாதவாறு இருந்தமையால் மண்டபத்துக்கு வெளியே நிகழ்வுகளை நடத்துமாறு திரண்டிருந்த மக்கள் குரல் எழுப்பினர். ஏற்பாட்டாளர்கள் மக்களின் குரலுக்குச் செவிமடுத்து மண்டபத்துக்கு வெளியே மேடை அமைத்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்தனர்.

### 50 ஆயிரம் மக்கள் திரண்டனர்

ஏறக்குறைய ஐம்பது ஆயிரம் மக்கள் முற்றவெளி முழுவதும் திரண்டிருக்க தமிழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் நைனார் முகம்மது கொஞ்சு தமிழில் அழகாய் முத்து முத்தாய் தமிழ்ச் சொற்களால் தேன் மதுரத் தமிழின் பெருமை பற்றி உரையாற்றிக் கொண்டிருக்கின்றார். மக்கள்

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மெய்மறந்து தமிழின் சிறப்புப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கின்றபோது இரவு 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இரண்டு காவல்துறையினர் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வீதி எங்கும் சனத்திரளாக இருந்தமையால் அவர்களுக்கு வழியேற்படுத்திக் கொடுக்க மக்கள் மறுத்து விட்டனர். காவல் துறையினர் வேறு வழியின்றித் திரும்பி விட்டனர்.

**காவல்துறையினரின் அராஜகம்**

பின்னர் ஆயுதம் தாங்கியவாறு பலர் வாகனத்தில் மக்கள் திரண்டிருந்த பகுதியை நோக்கி வந்தனர். வழியை விட்டுத் தருமாறு கேட்கவே மக்கள் அதனை கேட்காதவாறு இருந்தனர். பலாத்காரமாக மக்களை அப்புறப்படுத்தி விட்டு வாகனத்தை கொண்டு செல்ல முற்பட்டனர். மக்கள் அதற்கும் மறுத்து விட்டனர். அந்த இடத்தில் சலசலப்பு ஏற்பட்டது. கற்கள் வீசப்பட்டன. காவல் துறையினரால் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.
மக்கள் நாலாபுறமும் அங்குமிங்குமாகச் சிதறி ஓடினர். காவல் துறையினரும் ஓடிய மக்களைத் துரத்தித் துரத்தி குண்டாந் தடிகளால் தாக்கினர். முப்பதுக்கு மேற்பட்ட மக்கள் படுகாயங்களுக்குள்ளாகினர். மக்களைக் கலைக்கவும், மாநாட்டைக் குழப்பவும் காவல்துறையினர் கண்ணீர்ப் புகையை ஏவினர். மக்கள் என்ன செய்வதென்று அறியாத நிலையில் சமீபமாகவுள்ள குளம், சேறு சகதிமிக்க வாய்க்கால்கள், அகழிகள், கிணறுகள் என்று எதையும் பாராது மரண பயத்துடன் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர்.

**அறுந்தன மின்சாரக் கம்பிகள்**

இந்த வேளையில் திட்டமிட்டு மின்சாரக் கம்பிகள் அறுத்து வீழ்த்தப்பட்டன. மின்சாரக் கம்பிக்குள் அகப்பட்டு ஒன்பது மக்கள் உயிரிழந்தனர். மின்சாரம் நிறுத்தப்பட்டபோது. ஒருசிலரின் சடலங்கள் அகழிக்குள்ளிருந்து எடுக்கப்பட்டன. தமிழகத்தின் பிரமுகரான இரா.ஜனார்த்தனனும் காயமடைந்திருந்தார். வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பலர் காயமின்றித் தப்பினார்கள். மாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவரான கோபாலபிள்ளை மகாதேவாவும் கண்ணீர்ப் புகைக்கு இலக்கானார்.

காவல்துறையினரின் தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை வீச்சினால் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள்

> **மக்கள் நாலா புறமும் அங்கு மிங்குமாக சிதறி ஓடினர். காவல் துறையினரும் ஓடிய மக்க ளைத் துரத்தித் துரத்தி குண்டாந் தடியால் தாக்கினர் . முப்பதுக்கு மேற்பட்ட மக்கள் படுகாயங்களுக்குள் ளாகினர்.**

பாதிக்கப்பட்டனர். ஆத்திரம் கொண்ட மக்கள் பஸ் நிலையத்தில் தரித்திருந்த இரண்டு பஸ்களை எரித்தனர்.
ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைக்கிள்கள், வாகனங்கள் உட்பட வீரசிங்கம் மண்டபமும் சேதமாகியது. இறுதிநாள் நிகழ்வுகள் தமிழர்களுக்கு சோகத்துக்குரியதாகின. தமிழ்மொழி, தமிழர் ஆட்சி பற்றியனவற்றையும் எதிர் காலத்தில் கூறிப்பெருமைப் படவும் கூடாது. அடுத்த தலை முறையினருக்கு தமிழுணர்வுகளை விதைக்கவும் கூடாது என்றவாறு சிறிமாவோ அரசும், படையினரும் வன்முறையை ஏற்படுத்தி ஒன்பது உயிர்களைப் பறித்து தமிழர்களை அடக்க நினைத்தனர்.
எந்த விதமான அரசியல் கலப்பும் இல்லாத வகையில் யாழ்ப்பாணத்தில் நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை வெகு சிறப்பாக மக்களின் கரைகாணாத உணர்ச்சிப்பெருக்குடன் நடைபெற்றிருந்தது.
சிறிமாவோ அரசும், அப்போதைய யாழ்ப்பாண மாநகர மேயரும் சேர்ந்து மாநாட்டை நடத்துவதற்குப் பல இடையூறுகளை ஏற்படுத்திய நிலையில் மாநாடு சிறப்பாக நடந்தது.
இறுதி நாளின்போது மாநாட்டை திட்டமிட்டு குழப்பியேயாக வேண்டும் என்ற சதி நோக்கோடு வன்முறைகளைக் காவல் துறையினர் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். காவல்துறையினர் எந்தவித காரணமுமின்றி தமிழ்மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்து ஒன்பது தமிழர்களின் உயிர்களைப் பறித்தது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு தமிழ் மக்களாலும், சிறிமாவோவின், அரச தரப்பின் ஆதரவாளர்களாலும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.
முன்னாள் மேற்றிராணியார் ஒருவரும், இரண்டு முன்னாள் நீதியரசர்களும் கொண்ட விசாரணைக்குழுவினர் விசாரணையை நடத்தியிருந்தனர். காவல்துறையினரின் திட்டமிட்ட செயலே வன்முறைக்கும் ஒன்பது தமிழர்களின் உயிரிழப்புக்களுக்கும் காரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை சிறிமாவோவின் அரசு உதாசீனம் செய்தது.

**உயிர்களைக் காவுகொண்ட மாநாடு**

தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கவும், ஆய்வு செய்யவும் நடத்தப்பட்ட நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு ஒன்பது உயிர்களைக் காவு கொண்ட மாநாடாக சிறிமாவோ அரசால் மாற்றப்பட்டது என்பது தமிழர்களின் போராட்ட வரலாற்றில் என்றுமே அழிக்கமுடியாத பதிவாகும்.

## வீதிப்புனரமைப்பு பாதியில் நிறுத்தப்பட்டதேன்?

சங்கானை பஸ்நிலையத்துக்கு முன்பாக பிரதான வீதியிருந்து சங்கரத்தை, துணைவி, செட்டியார்மடம், அராலி வரையுள்ள வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குரியதாகும். இந்த வீதி கடந்த வருடம் இந்த திணைக்களத்தினால்புனரமைப்புச் செய்யப்பட்டது. ஆனால் சங்கானை வரை புனரமைப்புச் செய்யப்படாது இடைநடுவில் திருத்த வேலைகள் கைவிடப்பட்டுள்ளது. இந்த விடயம் பற்றி ஏற்கனவே வாசகர் திருமுகத்தில் பிரசுரிக்கப்பட்டது.
சங்கானையில் தற்போது அரச, தனியார் வங்கிகள், சந்தை போன்றவற்றுக்கும் வட்டு மத்திய கல்லூரி, சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, சரஸ்வதி வித்தியாலயம், சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் மற்றும்துறட்டிப்பனை அம்மன் கோயிலுக்கும் தினமும் செல்லும் மாணவர்கள் உட்பட பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். குண்டும் குழியுமாக இருக்கும் இந்தப் பாதையில் மழை காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் வாகனங்கள் உட்பட ஏனையவர்களும்சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த வருடமாவது இந்த வீதியின் மிகுதிப் பகுதி சீர் செய்யப்படுமா? என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மு.சந்திரகுமார்

## பிரதேச ரீதியாக நிகழ்வுகள்

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தின் வடமாகாண அமைப்பால் நடத்தப்படும் கலந்துரையாடல்கள் சொற்பொழிவுகள் யாழ்ப்பாண சென். ஜோன்ஸ் அம்பியூலன் மண்டபத்தில் கடந்த இரு மாதங்களாக இடம் பெற்றமை யாவரும் அறிந்ததே. இங்கு வைத்தியர்களின் ஆலோசனைகள் அடங்கிய கருத்துரையாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவை இடம்பெற்று வருகின்றது.
கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் இவ்வாறான ஒன்று கூடல் இடம்பெற்று மருத்துவர்கள் சிறப்புரை ஆற்றியதாகவும் அறிய முடிந்தது.
இவ்வாறான நிகழ்வுகள் முதியோர்களுக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் மிகப்பயன்தரக் கூடிய விடயமாகும்
இவ்வாறான நிகழ்வுகளை வட மாகாண சுகவாழ்வுக்கழகம் பிரதேச செயலக ரீதியாக நடத்தி முதியோர்கள் நன்மை பெறக் கூடியதாக உதவிடல் வேண்டும் எனக் கோரப்படுகிறது. தொடர்ந்து யாழ்ப்பாண நகரத்தை மையமாக வைத்து செயற்படாமல் குடா நாட்டிலுள்ள முதியோர் பலரும் பயனடையக் கூடிய விதத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு குறிப்பிட்ட சங்கம் முன்வர வேண்டும்.

எஸ்.அருணாச்சலம்

## சென். பற்றிக்ஸ் வீதி விரைந்து திருத்தப்படுமா?

குருநகர் சென் பற்றிக்ஸ் வீதியின் ஒரு பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இந்த வீதியினூடாகப் பயணிப்போர் போக்குவரத்துக் கஷ்டங்களை நாளாந்தம் அனுபவித்து வருகின்றார்கள். இச் சேதமடைந்த பகுதி குருநகர் மத்திய கிழக்கு வீதியில் இருந்து ஆரம்பித்து குருநகர் கடற்கரை வீதிவரை அமைந்துள்ளது. இந்த வீதியின் அருகில் குருநகர் பிரதேச வைத்தியசாலை அமைந்துள்ளது. இந்த வீதியைத் திருத்தும் நோக்குடன் யாழ்.மாநகர சபை வேலைப் பகுதியால் வீதியின் இருமருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டு சுமார் ஒரு வாரம் கழிந்துள்ள போதிலும், வேலை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை . எனவே வீதி திருத்தும் பணியை யாழ்.மாநகர சபை விரைந்து மேற்கொண்டு, இந்தவீதியூடாக மக்கள் போக்குவரத்தைச் சீர் செய்ய வேண்டுமென குருநகர் பகுதி குடியிருப்பாளர்கள் கோரியுள்ளனர். யாழ்.மாநகரசபை விரைந்து செயற்படுமா?

திலீப் குருநாகர்.

## வானில் தோன்றிய அரிய காட்சி

இரவு வானில் தோன்றும் லட்சக்கோடி நட்சத்திரங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே பன்னிரண்டு இராசிகளாகவும் இருபத்தியேழு நட்சத்திரங்களாகவும் பிரிக்கப்பட்டு அதன்மேல் ஒன்பது கோள்கள் - கிரகங்கள் என்பனவும் அறியப்பட்டு உள்ளன. நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியிலிருந்து கிழக்கு வானில் சுக்கிரனும், சந்திரனும் சம சப்தமத்தில் (ஒரே டிகிறியில்) தோன்றிய காட்சியைக் காணமுடிந்தது. இந்த விடயம் பஞ்சாங்கம் கணிக்கும் சோதிட வல்லுநர்களுக்கும் வானிலை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞான வல்லுநர்களுக்கும் தெரிந்த ஒன்றேயாகும்.
ஆனால் அவர்கள் ஊடகங்கள் மூலமாக இதனை முன் கூட்டியே மக்களுக்குத் தெரியப் படுத்தியிருந்தால் இந்த அரிய காட்சியை ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்திருப்பார்கள் என்பது திண்ணம். இதனைக் கூடச் செய்யாதவர்கள் வேறு எதனைச் சாதிக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. சோதிடம் சோபிக்குமா? விஞ்ஞானம் விழித்தெழுமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சி.ஜெயகணேசன்,
ஆசிரியர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி பரப்புரையில் மீண்டும் தென் கொரியா



சியோல், ஜன.9
அணு குண்டைவிட ஆயிரம் மடங்கு அழிவுச் சக்தியான ஹைட்ரஜன் குண்டை வெடித்து உலக நாடுகளின் பகையைச் சம்பாதித்துக் கொண்ட வடகொரியாவுக்கு எதிராக நேற்று தென் கொரியா மீண்டும் தனது ஒலி பெருக்கிப் பரப்புரையைத் தொடங்கி யுள்ளது.
கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அங்கு படைகள் இல்லாத பிரதேசத்தில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் தென் கொரிய வீரர்கள் 2 பேர் காயம் அடைந் தனர். அதையடுத்து வடகொரிய எல் லையில் அந்த நாட்டுக்கு எதிராக தென்கொரியா ஒலிபெருக்கிப் பரப் புரை நடத்தியது.
வடகொரியாவுக்கு இது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தென்கொரியாவைக் குறிவைத்து வடகொரியா பீரங்கித் தாக்குதல் நடத்த, தென்கொரியாவும் பதிலடி கொடுத்தது. இதனால் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பும் சமரசப் பேச்சு நடத்தினர். அதில் அப் போது உடன்பாடு எட்டப்பட்டது.
இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அணு குண்டைவிட ஆயிரம் மடங்கு அழிவுசக்தியான ஹைட்ரஜன் குண்டை வெடித்துப்பரிசோதித்தவடகொரியாவின் அடாவடித்தனத்தை, தனது நாட்டுக்கு விடப்பட்ட சவாலாகக் கருதும் தென் கொரியா, நேற்று வடகொரியா எல் லையில் அந்த நாட்டுக்கு எதிராக மீண் டும் ஒலிபெருக்கிப் பரப்புரையைத் தொடங்கியுள்ளது.
எல்லைப்பகுதியில் மிகப்பெரிய ஒலிபெருக்கிகளைக் கட்டிவைத்து, 'வடகொரிய அதிபரின் அணு ஆயுத மோகம் அந்த நாட்டு மக்களை கடுமை யான பொருளாதாரச் சீர்குலைவில் நிறுத்திவிடும்' என்று அந்த ஒலி பெருக்கிகளின் மூலம் பரப்புரை செய் யப்பட்டு வருகின்றது.
இதற்கிடையில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே வட கொரியாவின் செயல் எமது நாட்டின் பாதுகாப்புக்கும் பங்கம் விளைவிக்கும் செயலாகும். இதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.
தேசிய பாதுகாப்புச் சபையுடன் இணைந்தஉறுதிப்பாடான நிலையுடன் இந்தச் சூழ்நிலைக்கு முகம் கொடுக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி4)

# வடகொரியா மீது பெ

## ஐ.நா. பாதுகாப்புச் ச

> வடகொரியாவை எச்சரிக் கும் வகையில் அமெரிக்காவின் அணுஆயுதங் களைக் கொரிய தீபகற்பத்தில் நிலை நிறுத்த வேண்டும் என தென்கொரிய அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நியூயோர்க், ஜன.9
ஹைட்ரஜன் குண்டைவெடித்தவடகொரியாமீது புதியபொருளாதாரத் தடை விதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.
வடகொரிய விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நியூயோர்க் நகரில் அவசர அவசரமாகக் கூட்டப்பட்டது.
மூடிய அரங்கில் நடந்த இந்தக் கூட்டத்தில் வடகொரியாவின் ஆத்திர மூட்டும் நடவடிக்கைக்குச் சீனா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய வல்லரசு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.
இந்த நாடுகள் கூட்டாகக் கூறும் போது, வடகொரியாவின் செயல், ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை மீறிய செயல் என்பது தெளிவானது என்றனர்.
மேலும் வடகொரியாவுக்கு தண்டனை விதிக்கும் வகையில் புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் இந்தக் கூட்டத்தில் பரிசீலிக் கப்பட்டது.
இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைவர் எல்பியோ ரோசெல்லி விடுத்துள்ள அறிக்ன தண்டனை விதிக்கும் வகையில் உடனடியாகத் தொடங்குகிறது என இதேவேளை ஹைட்ரஜன் வெடி

# அமெரிக்காவில் அகதி

வொஷிங்டன், ஜன.9
அமெரிக்காவுக்கு அகதிகளாகச் சென்று அங்கு வசிப்பவர்களில் இருவருக்கு தீவிரவாதத்துடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.
கலிபோர்னியா மற்றும் ரெக்சாசில் வசிப்பவர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். ஒருவர் அமெரிக்காவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகவும், மற்றவ ஐ.எஸ். அமைப்பினருடன் தொடர்பு வைத்தி ருந்ததாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
இதேவேளை 2014 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 75 பேர் போராட்ட அமைப்புக்கு ஆதரவு வழங் கிய குற்றச் சாட்டுக்காகவும், சதித்திட்டத்துக்காகவும்

# புதிய நட்சத்திரங்கள் கண்டுபிடிப்பு

வொஷிங்டன்,ஜன.9
வேறு பால்வெளி மண்டலங்களில் புதிதாக 5 பெரு நட்சத்திரங்களை (சூப்பர்ஸ்டார்) நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
பூமியிலிருந்து 10 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள, மிக அதிக ஒளியை உமிழக்கூடிய எடாகரினே நட்சத்திரத்தைப்போன்று புதிதாக கண்டு பிடிக்கப்பட்டவைகள் உள்ளன. எடாகரினே எமது சூரி யனைப் போன்று குறைந்தது 10 மடங்கு திணிவைக் (மாஸ்) கொண்டது.
நாசாவின் ஸ்பிட்ஸர், ஹப்பிள் தொலைநோக்கிகளால் பெறப்பட்ட தரவுத் தொகுப்புகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், இந்தப் புதிய நட்சத்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை அதிக அள விலான இரசாயன தனிமங்களை வெளியிடுகின்றன.



# ஆஸ்திரேலியாவில் மீண்டும் காட்டுத்தீ

சிட்னி,ஜன.9
ஆஸ்திரேலியாவின் மேற்குப்பகுதியில் பாரிய காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இதனால் 95 வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.
யார்லூப், பேர்த் ஆகிய நகரங்களில், மூன்றில் ஒரு பகுதி தீக்கிரையாகியுள்ளன. இந்த நிலை மேலும் தொடரலாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு, இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தத் தீ விபத்தில் 50 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவுக்கு காட்டுத்தீ பரவி சேதத்தை ஏற்படுத்தி யுள்ளது.
கட்டடங்களில் வெப்பக் கதிர் வீச்சினால் ஏற்படும் பாதிப்புகளே இறப்புகளைத் தோற்றுவிக்கும். எனவே பாதுகாப்பான வெளியான இடங்களில் தஞ்சம டையும் படி பொது மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-ரி4)



# பலஸ் துப்பா

ஜெருசலேம், ஜன.9
இஸ்ரேல் இராணு தீனர்கள் கத்தியால் கு 4 பலஸ்தீனர்கள் துப் இலக்கானார்கள் இராணுவம் தெரிவித் இந்தச் சம்பவத்தில் தாரிகள், பணியில் இஸ்ரேல் இராணுவ யால் தாக்க முற்பட் முதலில் மூவர் சுடப் பின்பு ஒருவர் கொல்ல

# 34 நாடுகளின் கூட்டுப்படைக்கு பாகிஸ்தான் வ

இஸ்லாமாபாத், ஜன.9
சவூதி அரேபியா தலைமையிலான 34 நாடுகளின் கூட்டுப்படை அமைக்கும் முயற்சியை வரவேற்பதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.
யேமனில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி அரேபியாவின் தலைமையில் ஐக்கிய அரபு எமி ரேட்ஸ், குவைத், ஜோர்தான் உள்ளிட்ட 10 நாடுகளின் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.
இதேபோல் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கக் கூட்டுப்படையில் இணைந்து சவூதி அரேபியா தாக்குதல் நடத்தி வருகிறது.
தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட சவூதி அரேபியாவின் தலை மையில் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 34 நாடுகளின் படைகளை இணைத்து புதிய கூட்டுப்படையை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாக சவூதி அரேபியாவின் இளவரசரும் ராணுவ அமைச்சருமான முகமது பின் சல்மான் கடந்த மாதம் அறிவித்தார்.
இந்தப் புதிய கூட்டுப்படையில் மாலி, மலேசியா, பாகிஸ்தான், லெபனான், எகிப்து மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகள் சேருவதாக முகமது பின் சல்மான் தெரிவித்திருந்த நிலையில், இப்படி ஒரு கூட்டுப்படை உருவாக்கப்படும் விடயமே தனக்குத் தெரியாது எனப் பாகிஸ்தான் பின்வாங்கியது.
இந்த நிலையில், சவூதி அரேபியா தலைமையில் 34 நாடுகளை உள்ளடக்கிய முட்டாள்களின் கூட்டுப்படையைத் தாக்கி அழிப்போம் என ஐ.எஸ். தீவிரவாதிகள் சபதம் ஏற்றுள்ளனர்.
முன்னதாக, இதைப்போல் ஒரு கூட்டுப்படை உருவாக்கப்படுவது தொடர்பாக தங்கள் நாட்டுக்கு எவ்வித தகவலும் இல்லை எனக் கருத்து வெளியிட்டிருந்த பாகிஸ்தான் அரசு, தற்போது இந்தக் கூட்டுப்படைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளது.
சவூதி அரேபியா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்டெல் பின் அஹமஹ் அல்-ஜுபைர் நேற்று பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத் வந்திருந்தார். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், பிரதமரின் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் மற்றும் ராணுவ இந்தச் களின் ச ஷெரிப் தியம் ம களையு ஈரானுக் பனிப்ே அல்-ஜ தெஹ்ர கவலை இஸ்லா தங்கள மூலமா கொண் செய்திக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார தடை

## சபையில் தீர்மானம்



வடகொரியாவுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பது குறித்து அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கலந்தாலோசித்து வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹை, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோரைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது வடகொரியாவுக்கு விரைவில் தகுந்த பதிலடி கொடுக்க 3 நாடுகளின் தலைவர்களும் உறுதி மேற்கொண்டனர்.

வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்காவின் அணுஆயுதங்களைக் கொரிய தீபகற்பத்தில் நிலை நிறுத்த வேண்டும் என தென்கொரிய அரசு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அமெரிக்கா தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. (ஐ-ரி4)

ள அறிக்கையில், 'வடகொரியாவுக்குத்
வகையில் தீர்மானம் தயாரிக்கும் பணி
ருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.
ஜன் வெடிகுண்டைப் பரிசோதித்துள்ள

# கதிகள் கைது

மரிக்காவில்
ம், மற்றவர்
ர்பு வைத்தி
ள்ளனர்.
நந்து இன்று
ஆதரவு வழங்
துக்காகவும்,

வெளிப்படையாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட இருவரும் ஈராக்கில் பிறந்த பாலஸ்தீனர்கள் ஆவார். ஒருவர் 2009 ஆம் ஆண்டு ஈராக்கிலிருந்து அமெரிக்காவுக்குப் புகலிடம் கோரி வந்தவர் ஆவார். மற்றொருவர் சிரியாவில் இருந்து 2012 ஆம் ஆண்டு அகதியாக நுழைந்தவர் ஆவார். (ஐ-ரி4)

# லஸ்தீனர் மீது
# ப்பாக்கிப் பிரயோகம்

லம், ஜன.9
ல் இராணுவத்தை பலஸ்
கத்தியால் குத்த முற்பட்டதால்
தீனர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு
னார்கள் என இஸ்ரேல்
வம் தெரிவித்துள்ளது.
சம்பவத்தில் மூன்று ஆயுத
, பணியில் ஈடுபட்டிருந்த
இராணுவத்தினரைக் கத்தி
க்க முற்பட்டனர். இதனால்
மூவர் சுடப்பட்டனர் என்றும்
நவர் கொல்லப்பட்டார் என்றும்

அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இஸ்ரேல் இராணுவத்தினர் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களாகவே இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இதுவரை 140 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# ன் பெரும் வரவேற்பு

ராணுவத் தளபதி ரஹீல் ஷெரிப் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் சவூதி தலைமையிலான 34 நாடுகளின் கூட்டுப்படை அமைக்கும் முயற்சியை வரவேற்பதாக நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார். தீவிரவாதத்தை ஒழிக்கும் விவகாரத்தில் பிராந்தியம் மற்றும் சர்வதேச அளவிலான அனைத்துவித முன்னெடுப்புகளையும் பாகிஸ்தான் ஆதரிக்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

ஈரானுக்கும் சவூதிக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் பனிப்போர் தொடர்பாக நவாஸ் ஷெரிப்புக்கு அப்டெல் பின் அஹமஹ் அல்-ஜுபைர் விளக்கிக் கூறியதாகவும், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் சவூதி தூதரகத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் கவலை அளிப்பதாக அவரிடம் தெரிவித்த நவாஸ் ஷெரிப், இஸ்லாமியர்களின் ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டு தங்களுக்கிடையிலான வேற்றுமைகளை இருநாடுகளும் பேச்சு மூலமாக மட்டுமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டதாகவும் பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வானில் இருந்து வீழ்ந்த உலோகப் பந்தால் பரபரப்பு

பீஜிங், ஜன.9

வியட்நாம் மற்றும் சீன எல்லையில் திடீரென்று பெரும் சத்தத்துடன் வானத்தில் இருந்து விழுந்த உலோகப் பந்தினால் வியட்நாம் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

வியட்நாம் நாட்டின் வடக்கு எல்லையோரப் பகுதியில் திடீரென்று பெரும் சத்தத்துடன் 3 உலோகப் பந்துகள் விழுந்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற அதிகாரிகள் மற்றும் இராணுவச் சிறப்புக் குழுவினர் அந்த உலோகப்பந்துகளைச் சோதனையிட்டுள்ளனர்.

விழுந்த பந்தானது சுமார் 45 கிலோ நிறை இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் சுமார் 6 கிலோ நிறை கொண்ட ஒரு பந்தானது குடியிருப்புப் பகுதியில் ஒரு வீட்டின் அருகே விழுந்துள்ளது. இன்னுமொரு பந்து 250 கிராம் நிறை கொண்டது எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று உலோகப் பந்துகளும் வியட்ணாமின் பாதுகாப்புப் பிரிவினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ஆனால் இதுகுறித்து விளக்கமளித்த விண்வெளி ஆராய்ச்சியாளர் ஒருவர் இந்த உலோகப்பந்து விண்வெளிக்கலனின் எரிபொருள் அமைப்பாகவும் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ-ரி4)



# ஐ.எஸ் அமைப்பின் புதிய வீடியோவால் ஐரோப்பிய நாடுகள் கடும் அச்சத்தில்

வொஷிங்டன்,ஜன.9

மனித உரு பொம்மைகளைக் கொண்டு சாரதிகள் இல்லாத வெடிகுண்டுக் கார்களைத் தயாரிக்கும் பணியில் ஐஎஸ் ஆராய்ச்சி மையம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகள் அச்சம் அடைந்துள்ளன. இஸ்லாமிக் ஸ்டேட் தீவிரவாத அமைப்பு, மேற்கத்திய நாடுகள் மீது பயங்கர வாதத் தாக்குதல்களை மேற்கொள்ள தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான புதிய ஆராய்ச்சி மையத்தையே உருவாக்கி யுள்ளதாக புதிய வீடியோ ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அதாவது சாரதிகள் இல்லாத கார்களைக் கொண்டு தாக்குவதற்கான தொழில்நுட்பம் மற்றும் விமானத்தைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் ஆகியவற்றை உருவாக்க ஆய்வு மையம் ஒன்றையே நடத்தி வருவதாக அந்த வீடியோ ஆதாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்காக உலகின் பல நாடுகளிலிருந்தும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியாற்றி வருவதாகவும் அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதேவேளை தரை இலக்குகள் முதல் வான்வழி இலக்குகளைத் தாக்கும்



ஏவுகணைகள், பயங்கரவாத இயக்கங்களின் கையில் கிடைத்தால் அதுதான் பயங்கர வாதத்தின் உச்சகட்டமாக இருக்கும் என்று ஐரோப்பிய உளவு நிறுவனங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் தங்களிடமுள்ள ஆயுதங்கள், தொழில்நுட்பங்கள், ஏவுகணைக்கான பொருள்கள், தாக்குதல் முறை ஆகியவற்றை விளக்கும் ஐ.எஸ். வீடியோ ஆவணப்படுத்தப்பட்டிருப்பது குறித்து ஐரோப்பிய நாடுகள் கடும் அச்சம் வெளியிட்டுள்ளன. (ஐ)

# லிபியாவில் குண்டுவெடிப்பு

## 65 பேர் உயிரிழப்பு



லிபியாவில் உள்ள பொலிஸ் பயிற்சி மையத்தில் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புத் தாக்குதலில் சுமார் 65 பேர் கொல்லப்பட்டனர். வெடிகுண்டுச் சத்தம் சுமார் 60 கி.மீ. தூரத்துக்கு ஒலித்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிபியாவின் கிழக்கு நகரமான ஸ்லீதெனில் உள்ள பொலிஸ் பயிற்சிப் பள்ளியில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. வெடிகுண்டுகள் நிரப்பிய ட்ரக் பள்ளிக்குள் புகுந்து நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலால் சுமார் 65 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ள நிலையில் சாவு எண்ணிக்கை குறித்த அச்சம் நிலவுகிறது.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த பொலிஸ் பயிற்சிப் பள்ளி, முன்னாள் லிபிய ஜனாதிபதி மம்மர் கடாபியின் காலகட்டத்தில் ராணுவத் தளமாக விளங்கியது.

லிபியாவில் கடந்த 2011 இற்குப் பின்னர் ஐ.எஸ். ஆதிக்கம் இருந்து வருகிறது. முக்கியமாக எண்ணெய் வளம் மிக்க வடக்குப் பகுதிகளை ஐ.எஸ். இயக்கத்தினர் தங்களது வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

உங்கள் பிள்ளைக்கு 2½ வயது
நிறைவடைந்து விட்டதா ?
எங்களொரு பாடசாலை நாட்களிலும்
Play Group இல் இணைந்து கொள்ளலாம்.
உங்கள் பிள்ளைகளின்
ஆங்கில அறிவுக்கு
ஆரம்பத்திலேயே
அடித்தளம் இடுங்கள்
(British & National Curriculum)
ஆங்கில
மொழிமூல
பாலர் பாடசாலை
ADMISSIONS For
Montessori
#136, Navalar Road,
Jaffna,
Tel: 0115925923
BEEFORT
INTERNATIONAL SCHOOL
Colombo : #27, St.Lucia's Street, Colombo 13
Trinco : #59A, Green Road, Trincomalee
Manipay :
#248, Jaffna Road, Manipay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அருள்மிகு ஆஞ்சநேயருக்கு இன்று ஜெயந்தி தினம்

தெய்வத்தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்.

அஞ்சேலென அபயமளிக்கும் அருள்மிகு ஆஞ்சநேயரின் ஜெயந்தி தினம் இன்றாகும். வழிபடும் அடியவர்களின் துன்பம் களைந்து, இன்பவாழ்வு அருளும் ஆஞ்சநேயருக்கு எமது இலங்கையில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்தில் மருதனார்மடத்திலும் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. இராமபிரானுடைய அன்புக்குப் பாத்திரமான இவருக்கு அனுமன், மாருதி, வாயுபுத்திரன் என்னும் நாமங்களும் வழக்கில் இருக்கின்றன.

ஆஞ்சநேயக் கடவுளை அன்போடு வணங்கினால் மிகுந்த பராக்கிரமமும், துணிவுடன் கூடிய தைரியமும், இரக்க குணமும் , எல்லையற்ற பேராற்றலும் கிடைக்கும். நினைத்த காரியமும் கைகூடும்.

வாயுபுத்திரரான இவர், சீதாபிராட்டியைத் தேடி இலங்கைக்கு வந்து அரக்கர் குலத்தை அழிக்க வழிவகுத்ததுடன், இராவணேஸ்வரனுக்குப் புத்தியும் புகட்டி, சீதைக்கு நம்பிக்கையூட்டி வாழ்வளித்ததாகச் சொல்லப்படுகிறது. அஞ்சனையின் வயிற்றில் அவதரித்த ஆஞ்சநேயர் உருத்திரனின் அம்சம்கொண்டவர்.

மோட்சத்துக்குரிய ஞானத்தைத் தருகின்ற இவர் எந்தவித பயனையும் எதிர்பார்க்காமல் சகல ஜீவராசிகளுக்கும் ஆன்ம ஈடேற்றம் அருளுகின்றார். ஒரு முறை இவர் பழம் என்று நினைத்துச் சூரியனையே விழுங்கியதாகக் கதையுண்டு. அதிசய, அற்புத, அதீத சக்தி படைத்த ஆஞ்சநேயருக்கு அனுமன், வராகர், வாமனர், ஹயக்ரீவர், இராமர் ஆகிய ஐம்முகங்கள் உண்டு.

ஆன்ம பலம், மனத்தைரியம், துணிவு, உறுதி, தேகாரோக்கியம் ,சொல்வன்மை, மனஅமைதி, திருப்தி முதலியவற்றை அருளுகின்ற ஆஞ்சநேயர், மும்மூர்த்திகளுடைய பேரருட் கருணையினால்

> ஆஞ்சநேயக் கடவுளை அன்போடு வணங்கினால் மிகுந்த பராக்கிரமமும், துணிவுடன் கூடிய தைரியமும், இரக்க குணமும், எல்லையற்ற பேராற்றலும் கிடைக்கும். நினைத்த காரியமும் கைகூடும்.

அழிவேயில்லாத வரம் பெற்றுச் சிரஞ்சீவியாக இராமனுடைய தூதனாக வந்து விஸ்வரூபம் காட்டுகின்ற அம்சமாக விளங்குகின்றார். இவருடைய துணை எமது வாழ்வுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அருளும் தன்மை வாய்ந்தது. ஆகவே ராம நாமத்தைச் சொல்லி வெற்றிலையால் மாலைபோட்டு அமுது, வடை, நிவேதித்து உண்மையான பக்தியுடன் இவரை வணங்குவோர்க்கு நிச்சயம் அருளுண்டு. புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கின்ற ஒவ்வொருவரும் அருள் வடிவான சாந்தமும், அமைதியும், ஈர்ப்புச் சக்தியும் நிறைந்த ஆஞ்சநேயரை வணங்கி வழிபாடியற்றி நல் வாழ்வு வாழ வழி சமைத்துத் தங்களைதாங்களே தயார்ப்படுத்திக் கொள்வார்களாக.



# உங்களுக்கு 2016 எப்படி?

## இடபம்

உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் நேற்று இடபராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். இடபராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.

**பெண்கள்**
ஆண்டின் தொடக்கத்தில் குடும்பத்தில் சிறுசிறு நிம்மதிக் குறைவுகள் ஏற்பட்டாலும் ஆகஸ்ட் மாதம்முதல் மகிழ்ச்சியும் சுபிட்சமும் நிலவும். சுபகாரியங்கள் கைகூடும். புத்திர வழியில் மகிழ்ச்சியைப் பெறுவீர்கள். பணவரவுகள் சரளமாக இருக்கும். கணவன்-மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதால் சேமிக்கமுடியும்.

**மாணவ- மாணவியர்**
கல்வியில் நல்ல ஈடுபாட்டுடன் செயற்பட்டு அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். உடன்பயிலும் மாணவர்களின் ஆதரவு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிகளைத் தட்டிச்செல்ல முடியும். அரசுவழியில் எதிர்பாராத உயர்வுகள் கிடைக்கும். நினைத்த கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்து படிக்க முடியும்.

**மாதப்பலன்கள் (ஜனவரி)**
உங்கள் ஜென்ம ராசிக்கு 6-ல் செவ்வாய் சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பு என்றாலும் மாத முற்பாதியில் சூரியன் 8-ல் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் எடுத்துக்கொண்டால் மருத்துவச் செலவுகளைக் குறைத்துக்கொள்ள முடியும். நெருங்கியவர்கள் ஓரளவுக்கு சாதகமாக அமைவார்கள். தொழில், வியாபாரத்திலிருந்த போட்டிகள் ஓரளவுக்குக் குறைந்து லாபங்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் நிம்மதி நிலவும். எடுக்கும் காரியங்களிலும் சிறப்பான வெற்றிகளைப் பெறமுடியும். கடன்பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். துர்க்கையம்மனை வழிபாடு செய்வதால் நற்பலனை அடைய முடியும்.

**பெப்ரவரி**
ருணரோக ஸ்தானமான 6-ல் செவ்வாய் சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் சூரியன் 10-ல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் அனுகூலங்களை ஏற்படுத்தும் அமைப்பாகும். உத்தியோகத்தர்களின் திறமைகளுக்கேற்ற பாராட்டுதல்கள் கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகளைப் பெறக்கூடிய யோகம் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, பொருளாதாரரீதியாக உயர்வு உண்டாகும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடிய காலம் என்பதால், விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும் பெரிய கெடுதிகள் ஏற்படாது. தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வது உத்தமம்.

**மார்ச்**
மாதக்கோளான சூரியன் சாதகமாகச் சஞ்சரிப்பதும், 4-ல் சஞ்சரிக்கும் குரு வக்ரகதியிலிருப்பதும் ஓரள்வுக்கு சாதகமான அமைப்பாகும். பணவரவுகள் தேவைக்கேற்ப அமையும். உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் செலுத்துவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறையும். பணம் கொடுக்கல்- வாங்கலில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர் கள் பெரிய தொகைகளை முதலிட்டுச் செய்யநினைக்கும் காரியங்களில் மிகவும் கவனம் தேவை. சனிக்குப் பரிகாரம் செய்வது மிகவும் உத்தமம்.

**ஏப்ரல்**
ஜீவன ஸ்தானமான 10-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும், லாப ஸ்தானமான 11-ல் சூரியன் சஞ்சாரம் செய்வதும் தொழில், வியாபாரரீதியாக மேன்மைகளை ஏற் படுத்தும் அமைப்பாகும். எடுக்கும் முயற்சிகளில் எதிர்பாராத வகையில் வெற்றிகளைப் பெறுவீர்கள். எந்த எதிர்ப்புகளையும் சமாளிக்கக் கூடிய வலிமையும் உண்டாகும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடும் என்பதால் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. பணவரவுகளில் எந்த பிரச்சினையும் இருக்காதென்றாலும், ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு பணியில் பாராட்டுக்கள் கிடைக்கும். தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.

**மே**
சமசப்தம ஸ்தானமான 7-ல் சனி செவ்வாயும், விரய ஸ்தானமான 12-ல் சூரியனும் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். இம்மாதம் நீங்கள் எதிலும் கவனத்துடன் நடந்துகொள்வது நல்லது. பணவரவுகளில் நெருக்கடிகள் நிலவுவதால் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடு, மனசஞ்சலங்கள், உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றமுடியாத சூழ்நிலைகள் ஏற்படும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு போட்டி பொறாமைகள் அதிகரிக்கும்.. முருகப்பெருமானை வழிபாடு செய்வது கெடுதிகளைக் குறைக்கும்.

**ஜூன்**
சூரியன் ஜென்ம ராசியிலும், 7-ல் சனி செவ்வாயும் சஞ்சாரம்செய்வது சாதகமற்ற அமைப்பாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிவரும். குடும்பத்தில் உள்ளவர்களாலும் மருத்துவச் செலவுகள் ஏற்படும். எந்தவொரு காரியத்திலும் சிந்தித் துச் செயல்படுவதும், நெருங்கியவர்களை அனுசரித்து நடந்துகொள்வதும் நற்பலனைத் தரும். எடுக்கும் காரியங்களில் தடைகளுக்குப்பின் தான் வெற்றிகிட்டும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் எதிலும் எதிர் நீச்சல் போட்டே முன்னேறவேண்டியிருக்கும்.
உத்தியோகஸ்தர்களின் திறமைக்கேற்ற உயர்வு தாமதப்படும். துர்க்கையம்மனை வழிபடவும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களுக்கு விடை கொடுப்போம்

கே.எஸ்.சிவஞானராஜா

எல்லோரது மனதிலும் அரும்பு விட்டிருக்கும் இந்த வினாவுக்கு விடை சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வெளிப்படாமலே உள்ளது. வெளிப்படுவதற்கான விழிப்புணர்வை ஊடகங்கள் செவ்வனவே செய்தபோதும், நாம் வெற்றி பெறாமல், தொற்றா நோய்களில் அகப்பட்டிருப்பது வருத்தமளிப்பதாகவே உள்ளது. மூதாதையர் வாழ்ந்தபோது கடின உழைப்பும், கட்டுப்பாடான உணவுப் பழக்க வழக்கமும் இருந்தபடியால், தொற்றா நோய்கள் அவர்களை ஒருபோதும் தீண்டவில்லை. தற்காலத்தின் கடின உழைப்பு மறைந்து விட்டது. கண்ட கண்ட உணவுப் பழக்க வழக்கங்கள் எமது வீடுகளில் குடிகொண்டுவிட்டன. இதன் நிமித்தம் உலகத்தில் வாலாயம் பெற்ற அத்தனை நோய்களும், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பிடித்ததோடு அல்லாமல், தமது கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கின்றன என்று துணிந்து கூறலாம். இந்த நோய்களிலிருந்து விடுதலை பெறுவதென்பது எம் கைகளிலேயே உண்டு. எப்படி இதனை வென்றெடுக்கலாம் என்று உணர்த்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.



> தற்காலத்தின் கடின உழைப்பு மறைந்து விட்டது. கண்ட கண்ட உணவுப் பழக்க வழக்கங்கள் எமது வீடுகளில் குடிகொண்டு விட்டன. இதன் நிமித்தம் உலகத்தில் வாலாயம் பெற்ற அத்தனை நோய்களும், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பிடித்ததோடு அல்லாமல், தமது கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

### தொற்றா நோய்கள்

தீராத தொற்றா நோய்களாவன, சலரோகம், உயர் குருதியமுக்கம், புற்றுநோய்கள், நீண்ட கால சுவாசப்பை நோய்கள், இருதய நோய்கள் ஆகியனவாகும். இந்த நோய்களை மாற்ற முடியாத பிரதான காரணிகளாக அமைபவை, மரபணுப் பின்னணி, குடும்ப வரலாறு, வயது, ஆண் பெண், பாலமைப்பு என்பனவாகும். இத்தகு நிலைமைகளை வெல்ல இயலாத அல்லது மாற்ற இயலாத காரணிகளாக விளங்குபவை மனநெருக்கீடு, மன உளைச்சல், தவறான உணவுப் பழக்கம், புகைபிடித்தல், போதைப் பொருள் பயன்பாடு, மது பாவனை, நொறுக்குத் தீனிகள், காம, குரோத, விரோத செயற்பாடுகள் என்பவையாகும்.

இவை போன்றவைகளிலிருந்து விடுபடும்போதும், தூர விலகும்போதும், தவிர்க்கும்போதும் தொற்றா நோய்களிலிருந்து பெரும்பாலும் தப்பி விடலாம். மேலும் காலம் அறிந்து வேளையறிந்து வைத்திய பரிசோதனை செய்வதன் மூலம் தொற்றா நோய்களைத் தடுக்கலாம்.

### நிவாரணம்

- உங்களது உயரத்துக்கேற்ற நிறையைப் பேணுதல்.
- குருதி அமுக்கத்தை அளந்தறிதல்.
- குருதியின் வெல்ல மட்டத்தை அளந்தறிதல்.
- குருதியில்கொலஸ்ரோல் மட்டத்தை அளந்தறிதல்.
- மற்றும் உடலியல் மாற்றங்களை அவதானித்தல்.
- பௌதிக, சுற்றுச்சூழல் மாசடைதல் போன்றவற்றைக் கண்காணித்தல்.
- உள்ளத்துக்குப் போதுமான ஆன்மிகத் தேவைகளை நிவர்த்தி செய்தல்.
- உடலுக்குத் தேவையான சத்துள்ள உணவுகளை உண்ணுதல்.
- தினமும், சீரான, நேர்த்தியான தேகப்பியாசத்தை ஒழுங்காகச் செய்தல்.
- குடும்ப நல்லுறவுகளைப் பேணுகின்ற, சகோதரத்துவ, அன்னியோன்னிய, சகவாழ்வுக்கான விருந்தோம்பல் பண்புகளை விருத்தி செய்தல்.
- குடும்ப ரீதியாக ஆன்மிக, பொழுதுபோக்கு விளையாட்டு, கலாசார நிகழ்வுகளில் முழுமையாகப் பங்குபற்றுதல்.
- வரகு, சாமி, குரக்கன், எள்ளு, சோளம், பயறு, உளுந்து, வெந்தயம், வாழைப்பொத்தி, கீரை, பொன்னாங்காணி, முள்ளங்கி, தூதுவளை, முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை, உள்ளி, இஞ்சி, மல்லி இவற்றைப் பதம் செய்து சாப்பிடுதல்.

இங்கு சொல்லப்பட்ட அத்தனை விடயங்களையும் கவனத்தில் எடுப்போமாக இருந்தால் மேற்குறிப்பிட்ட நோய்கள் எம்மை விட்டுப் பறந்தோடும்.

### உப்பு

நாளொன்றில் ஐந்து கிராம் அளவுக்கு மேலதிகமாக உப்பை ஒருவர் உணவின் மூலம் உட்கொள்ளல் ஆகாது. கூடுதலாகப் பாவிப்போமாக இருந்தால், உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், இரைப்பைப் புற்றுநோய் ஏற்படும். ஆதலால் உப்புப் பாவனையைக் குறைத்தேயாக வேண்டும். இதன் மூலம் தொற்றா நோய்களைத் தவிர்க்கலாம்.

### சீனி

ஒருவர், மூன்று மேசைக் கரண்டிக்கு மேல் ஒரு நாளைக்கு எடுப்பது ஆகாததாகும். கூடுதலாகச் சீனியை நாம் பாவிப்போமாக இருந்தால் உடற்பருமன் அதிகரிக்கும். இரத்தக் குழாய்களில் மாற்றத்தை ஏற்படுத்தி மாரடைப்பை ஏற்படுத்தும், சலரோகத்தை ஏற்படுத்தி கண், சிறுநீரகப் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

### கொழுப்பு

உள்ளெடுக்கப்படும் சக்தியின் அளவில், நாளாந்தம், இயன்றளவு பத்து வீதத்துக்கும் மீறாத கொழுப்புப் பதார்த்தத்தை உணவில் சேர்ப்பது பாதுகாப்பானது. இறைச்சி, பால், தேங்காய், தேங்காய் எண்ணெய் இவற்றை இயன்றளவு குறைத்தல் நல்லது.

நல்லெண்ணெய், மரக்கறி எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவை தொற்றா நோய்களையும், அதன் தாக்கங்களையும் வெகுவாகக் குறைக்கும் தன்மை கொண்டவை.

மேற்சொன்ன ஆலோசனைகளோடு, நடத்தல், மாடி ஏறுதல், நீச்சல், விளையாட்டுக்கள், பிரார்த்தனை, தியானம், பஜனை, கூட்டியள்ளுதல், ஆடுமாடு வளர்த்தல் யாவுமே தொற்றா நோய்களை அணுகா வண்ணம் எச்சரிக்கை செய்து தூரத் துரத்தவல்ல பழக்கங்களாகும். வீட்டில் சமைத்தவற்றை உண்ணப் பழகிக் கொள்ளுங்கள். அடுக்களைச் சாப்பாட்டை விடுத்து, தெருக்கடைக்குப் போகாதீர்கள். தொற்றா நோய்களுக்கு விடை கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வரலாற்றில் இன்றைய தினம்

1349 – சுவிசில் 700 யூதர்கள் அவர்களது வீட்டில் வைத்து உயிருடன் எரியூட்டப்பட்டனர்.
1718 – ஸ்பெயின்மீது பிரான்ஸ் போர்ப்பிரகடனம்.
1768 – நவீன சேர்க்கஸ் முதன்முதலில் லண்டனில் பிலிப் அஸ்றலீயால் அரங்கேற்றப்பட்டது.
1862 – முதலாவது பெற்றோலியம் ஏற்றுமதிக் கப்பல் 1329 பரல் பெற்றோலுடன் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு லண்டன் விக்டோரியா துறைமுகத்தை வந்தடைந்தது.
1933 – அம்ஸ்ரடாம் மிட்டாய் தொழிற்சாலை தொழிலாளர்கள் சம்பளக் குறைப்புக்கு எதிராக வேலை நிறுத்தம்.
1945 – ஜெனரல் மக் ஆதர் தலைமையிலான அமெரிக்கப் படையினர் பிலிப்பைன்ஸ் நாட்டினுள் புகுந்தனர்.
1953 – கொரிய படகு நீரில் மூழ்கி 249 பேர் சாவு.
1960 – எகிப்தின் அஸ்வான் அணைகட்டும் வேலை ஆரம்பம்.
1968 – சேர்வயர் 7 விண்கலம் சந்திரனில் மெதுவாகப் தரை இறங்கியது.
1969 – கொன்கோர்ட் சுப்பசோனிக் விமானம் பிறிஸ்ரல் இங்கிலாந்தில் முதலாவது பரீட்சார்த்த பறப்பை மேற்கொண்டது.
1980 – சவூதி அரேபியாவில் 63 பேர் தலைதுண்டிக்கப்பட்டனர்.
1987 – சீன வியட்நாமிய எல்லைச் சண்டை 1,500 பேர் உயிரிழப்பு.
1993 – டில்லியில் விமான விபத்து; பயணிகள் 152 பேருடன் விமானப் பணியாளர்களும் உயிர் தப்பினர். ஆயினும் துறை சார்ந்த அமைச்சர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.
1994 – எம்பிலிப்பிட்டிய புதைகுழிச் சம்பவம்; அதிபரின் மகனுடன் ஏற்பட்ட தனிப்பட்ட குரோதம் காரணமாக 31 மாணவர்களும் சாவடைந்தனர் என திடுக்கிடும் தகவல் வெளியானது.
1995 – தடுத்து வைக்கப்பட்டுள்ள 181 பேரை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு விசாரணைக்கு குழு பரிந்துரை.
1997 – ஆனையிறவு மற்றும் பரந்தனில் புலிகள் அதிரடி. 10 ஆட்லறிகள் அழிக்கப்பட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிப்பு.
– பாகிஸ்தானில் விஷவாயுக் கசிவு 18பேர் சாவு; 640 பேர் சுகவீனம்.
– தரம் 1 அனுமதிக்கு லொத்தர் மூலம் மாணவர்களைத் தெரிவு செய்ய கல்வியமைச்சு நடவடிக்கை.
2000 – டிசெம்பர் 18இல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஜனாதிபதி சந்திரிகாவைக் கொலை செய்து விட்டு, இராணுவ அரசு அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருந்ததாக இரகசியப் பொலிஸ் தகவல்.
2002 – அமெரிக்கன் மியூசிக்கின் நூற்றாண்டின் கலைஞர் விருதை மைக்கல் ஜாக்ஸன் பெற்றுக் கொண்டார்.
2004 – விளைபொருள்களுக்கான கழிவுகளை பொதுச் சந்தையில் நிர்ணயம் செய்ய பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை.
2009 – லசந்த விக்ரமசிங்காவின் கொலைச் சூத்திரதாரிகள் அரசாலும் கட்டுப்படுத்த முடியாத புலனாய்வுப் பிரிவினரே; சர்வதேச விசாரணைவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை.

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



# நீயா? நானா?

வேடன் விரித்திருந்த வலையில் இரண்டு பறவைகள் சிக்கிக் கொண்டன.

"அடடே! இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே!" என்று சொல்லிவிட்டுக் கலங்கியது ஒரு பறவை.

"இப்பொழுது எப்படித் தப்பிப்பது?" என்று கேட்டுவிட்டுக் கலங்கியது இன்னொரு பறவை. தூரத்தில் வேடன் மிகவும் விரைவாக வந்து கொண்டிருந்தான்.

"கவனித்தாயா! வேடன் வந்து கொண்டிருக்கிறான்!" என்றது ஒரு பறவை.

"ஆமாம்! அவனிடம் சிக்கினால் எமது கதி அதோ கதிதான். குருமாவாக்கி விடுவான்!" என்று பதற்றப்பட்டது இரண்டாவது பறவை.



பறவைகள் இரண்டும் அவசரமாய் கலந்து பேசின.

"நாம் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் உயரக் கிளம்பினால் வலையோடு பறந்துவிடலாம். பிறகு எங்காவது போய் விடுபட்டுக் கொள்ளலாம்!" என்று யோசனை கூறியது ஒரு பறவை.

"ஆமாம்! இதுவே சரியான யோசனை!" என்று ஆமோதித்தது இரண்டாவது பறவை.

வேடன் வலையை நெருங்கியபோது இரண்டு பறவைகளும் ஒரே நேரத்தில் 'குபீர்' என்று பறந்தன.

வலை அவற்றின் கால்களில் சிக்கிக் கொண்டதால் அதுவும் அவற்றுடன் சேர்ந்து பறந்தது.

வேடன் அப்பொழுதும் விடவில்லை. பறவைகளைத் தொடர்ந்து ஓடினான்.

இந்தக் காட்சியை அந்தக் காட்டுப் பாதையின் வழியே நடந்துகொண்டிருந்த ஒரு மகான் பார்த்தார்.

அவர் வேடனை நிறுத்தி "அப்பனே! அந்தப் பறவைகள்தான் தப்பிவிட்டனவே. பிறகு ஏன் அவற்றின் பின்னே ஓடுகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு வேடன் "உயிர் மேல் இருந்த ஆசையில் அவை இரண்டும் ஒற்றுமையுடன் பறந்துவிட்டன. ஆனால் இந்த ஒற்றுமை கடைசி வரை அவற்றிடம் நீடிக்காது. விரைவில் அவை இரண்டுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். அடுத்து சண்டை வரும். ஒற்றுமை குலையும்.

"தனித்தனியே போகத் தீர்மானிக்கும். அப்பொழுது அவற்றால் மேற்கொண்டு பறக்க முடியாது. எனவே வலையோடு கீழே விழும். என் கையில் சிக்கும். அதனால்தான் நம்பிக்கையோடு அவற்றின் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறேன்!" என்று சொன்னான்.

பிறகு பறவைகளைத் தொடர்ந்து ஓட ஆரம்பித்தான்.

பறந்துகொண்டிருந்த பறவைகளில் ஒன்று மற்றொன்றைப் பார்த்து, "நண்பா! வலையுடன் நாம் இப்படியே தொடர்ந்து பறக்க முடியாது. இப்படியே வடக்குப் பக்கம் திரும்பினால் என் உறவினர் வசிக்கும் இருப்பிடம் வரும். அங்கு சென்றால் அவர்கள் இந்த வலையிலிருந்து எம்மை விடுவிப்பார்கள்!" என்றது.

அதைக் கேட்ட இரண்டாவது பறவை. "வடக்குப் பக்கம் போக எனக்குப் பிடிக்கவில்லை. அது அபசகுனமான திசை என்று என் முன்னோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே தெற்கே செல்லலாம். அங்கே மிகப்பெரிய அரசமரமொன்றில் என் உறவினர்கள் வசிக்கின்றனர். நாம் அங்கு சென்றால் அவர்கள் எம்மை இந்த வலையில் இருந்து விடுவிப்பார்கள்" என்றது.

முதல் பறவைக்கு இதைக் கேட்டதும் 'சுருக்'கென்று கோபம் வந்தது.

"முட்டாளே, நாங்கள் வசிக்கும் வடக்குத் திசை உனக்கு அபசகுனமான திசையாக இருக்கிறதா? உனக்கு என்ன திமிர்!" என்று சொல்லிக் கத்தியது.

இதைக் கேட்ட இரண்டாவது பறவைக்கு இது பெரிய தன்மானப் பிரச்சினையாகப் போய்விட்டது.

"ஆமாம்! அபச குனமான திசைதான்" என்று அழுத்தமாகச் சொன்னது இரண்டாவது பறவை.

முதல் பறவையின் கோபத்தை இது அதிகம் கிளறிவிட்டது.

"உன்னிடம் நட்பு வைத்ததே தவறு என்று இப்பொழுது தெரிகிறது. நீ ஒன்றும் என் பகுதிக்கு வரவேண்டாம். நான் போகிறேன்!" என்று சொல்லி முதல் பறவை வடக்கு திசைநோக்கித் திரும்பியது.

"நீ சொன்னவுடன் நான் உன் பகுதிக்கு வரவேண்டுமா? அப்படிச் சட்டம் ஏதாவது இருக்கிறதா? நீ எப்படியோ போ. நான் என் பகுதிக்குச் செல்கிறேன்!" என்று சொல்லிய இரண்டாவது பறவை தெற்குப் பக்கம் திரும்பியது.

இரண்டுபறவைகளும் விரைவில் சோர்ந்து போயின. வலை கீழே இறங்க ஆரம்பித்தது.

அப்பொழுது கூட அவை இரண்டும் ஆபத்தை உணராமல், நீயா? நானா? என்ற எண்ணத்தில்தான் இருந்தன.

வலை கீழே விழுந்தது.

அப்பொழுதுதான் மீண்டும் ஆபத்தில் சிக்கிக்கொண்டதை உணர்ந்தன பறவைகள். வேடன் தாவி வந்து வலையைப் பிடித்தான். பறவைகள் தங்கள் ஒற்றுமையின்மையால் வேடனிடம் மாட்டிக்கொண்டன.

## உப்பு

கடலில் விளைவது உப்பு
காந்தி எடுத்து வந்தது உப்பு
உணவில் சேர்ப்பது உப்பு
அதிகம் சேர்த்தால் தப்பு!

உணவுக்கு உப்பு சுவைதான்
அளவாய் சேர்த்தால் சரிதான்
உடலுக்கு உப்பு தேவைதான்!
அதிகம் என்றால் குப்பைதான்!

அயடீன் கலந்த உப்பு!
அதுவே நல்லது நம்பு
அயடீன் இல்லாத உப்பு
வருமே அதனால் தப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எரிச்சலூட்ட இலங்கை அரசு முயற்சியா?

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தனது மூன்று நாள் பயணத்தை இலங்கையில் முடித்துக்கொண்டு நாடு திரும்பிவிட்டார். அவருக்கு இங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தில் மூடிய அறையில் இருதரப்புப் பேச்சுகள் நடைபெற்றன. இதனை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் எட்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், விமானக்கொள்வனவு ஒப்பந்தமும் பாகிஸ் தானுடன் செய்யப்பட்டுள்ளதாக தற்பொழுது பரபரப்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் பிரதமரின் குழுவில் இடம்பெற்றிருந்த பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி டில்லி ரைம்ஸ் நாளிதழ் இது குறித்துச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் அரசியல் ஆய்வாளரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்கவும் கருத்து வெளியிட்டிருக்கிறார். டில்லியின் தாளத்துக்கு கொழும்பு ஆடாது என்பதை இந்த விமானக் கொள்வனவு உடன்படிக்கை எடுத்துக் காட்டுவதாக தயான் ஜயதிலக்க கூறுகிறார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் இலங்கை தனது நம்பிக்கைக்குரிய நாடு என்று நினைத்துக்கொண்டிருந்தது இந்தியா. ஆகவே, விமானக் கொள்வனவு உடன்பாடு இந்தியாவுக்கு அதிர்ச்சியை அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் வெளிப்பார்வைக்கு இலங்கை சமநிலையான உறவைப் பேணி வந்தது. ஆனால், உண்மையான நோக்கம் சீனாவை அரவணைத்துச் செல்வதுதான் என்பதை போகப்போக இந்தியாவால் புரிந்துகொள்ள முடிந்தது. ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவைத் தோற்கடிக்க இந்தியா மறைமுகமாகச் செயற்பட்டதை எவரும் மறுக்கமுடியாது.

ஜனவரி 8இல் ஆட்சிமாற்றத்தின் பின்னர் கொழும்புத் துறைமுக நகர்த்திட்ட வேலைகள் நிறுத்தப்பட்டமை உள்ளிட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளால் இலங்கையை வளைத்துப் போட முடிந்ததில் இந்தியா திருப்தி அடைந்திருந்ததை எவராலும் ஊகிக்க முடியும். ஆனால், பாகிஸ்தானிடமிருந்து சீன தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்ட ஜே.எவ். தர எட்டு விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு எடுத்த முடிவால் நிச்சயமாக இந்தியா சீற்றம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. பாகிஸ்தானிடம், இலங்கை விமானங்களை வாங்கப்போவதாக செய்திகள் வெளியாகிய சமயம் டில்லி தரப்பில் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இது குறித்த உடன் படிக்கையில் கையெழுத்திட வேண்டாம் என்று இரண்டு இந்திய அதிகாரிகள் தொலைபேசி மூலம் இலங்கை அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இலங்கை, இந்தியாவைப் பகைத்துக்கொள்ளுமானால், துறைமுக நகர்த் திட்டத்துக்கு இந்தியா கடனாக வழங்க இணக்கம் தெரிவித்திருந்த 400 மில்லியன் டொலரையும் சில சமயம் இழக்க நேரிடலாம். பாகிஸ்தானிட மிருந்து விமானங்களைக் கொள்வனவு செய்வதால் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இந்தியாவிடமிருந்து கடற்படைக் கப்பல்களை இலங்கை வாங்கும் என்று கூறப்பட்டாலும், இது இந்தியாவை திருப் திப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது.




கலாநிதி தயான் ஜயதிலக்கவின் கருத்துப்படி டில்லியின் தாளத்துக்கு கொழும்பு ஆடாது என்றால் இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைக்கு இது மற்றொரு தோல்வியாகும்.



# இலட்சியச் சுடர்

வாணி

நாம் தேடுகின்ற வெற்றி அனேகமாக எம்மைச் சுற்றியேதான் நடமாடுகிறது. எமது திறன்களுக்கும் எம் மனத்தின் தொடுவானத்திற்கும் அப்பாலுள்ள எந்த ஆசையையும் ஒரு லட்சியமாக நாம் நீடித்து வைத்திருக்க முடியாது. அவை வெறும் கனவுகளாக விரைவில் உதிர்ந்து போய்விடும். ஆனால் உறுதியாக நாம் மேற்கொள்ளும் லட்சியம் என்பது எம் ஆற்றல் வரம்புக்கு உட்பட்டதே. இதை நாம் கற்பனை செய்வதில்லை. அது ஏற்கனவே எம்முள் இருக்கின்றது. அந்த லட்சிய வெற்றியும் நாம் விழிப்புணர்வோடு இருக்கிறோமோ என்றுசோதிப்பதைப் போன்று எமக்கு அருகில்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. குறிக்கோள் என்பது வெறும் ஆசையல்ல. ஆசைக்கு மேல் அதில் எமக்கு ஈடுபாடு இருக்க வேண்டும். எம் குறிக்கோள்களை நாம் வடிவ ரூபத்தில்-காண வேண்டும். உடலால் உணர வேண்டும். ருசிக்க வேண்டும். நுகர வேண்டும். நாம் அவற்றுடன் வாழ வேண்டும். நீருக்குள் அமுங்கியிருப்பவன் வெளியே வர எப்படித் துடிக்கிறானோ அத்தகைய வேகம் எமக்கு ஏற்படவேண்டும் என்று. அத்தகைய துடிப்பே, குறிக்கோளை அடையும் போது எண்ணங்கள் வெற்றியாக, சாதனைகளாக மலர்கின்றன.

> “குறிக்கோள் என்பது வெறும் ஆசையல்ல. ஆசைக்கு மேல் அதில் எமக்கு ஈடுபாடு இருக்க வேண்டும். எமது குறிக்கோள்களை நாம் வடிவரூபத்தில் காண வேண்டும். உடலால் உணர வேண்டும். ருசிக்க வேண்டும். நுகர வேண்டும். நாம் அவற்றுடன் வாழ வேண்டும்.”

மனிதன் எங்கே போக விரும்புகிறானோ அங்கே தான் அவனது இருப்பிடம் என்றார் வான்பிரான் என்ற ஜேர்மன் நாட்டு ராக்கெட் விஞ்ஞானி. வான்பிரான் ஜேர்மனியிலிருந்து அமெரிக்கா வந்தவர். 20 ஆண்டுகளாக அமெரிக்க வானவெளித்திட்டத்தை நிர்வகித்து வருகின்றார். முதல் மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பி வைக்கக் காரணமாயிருந்தவர் அவர். சந்திர மண்டலத்தைச் சில நாள் மனித வீடாக மாற்றிய சாதனையை நிகழ்த்திய அந்த மனிதர் கூறுகின்றார்., சந்திரமண்டலத்திற்குப் போக ஆசைப்பட்டால் போய் வரலாம் என்று.

உலக சரித்திரத்தைப் பார்த்தோமானால் வாழ்க்கையில் முன்னேறி வாகை சூடியவர்களெல்லாம் ஒரு நேரத்தில் ஒரு வேலை என்ற தத்துவத்தைப் பின்பற்றினார்களென்பதை அறியலாம். நெப்போலியன் கூறினார், எனது மூளையில் பல அலுவல்கள் ஒழுங்காகவும் சிரமமாகவும் தனித் தனியே புறாக்கூட்டின் அறைகள் போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் அலுவலை மறந்து மற்றொன்றைச் சிந்திக்க வேண்டின் முந்திய அறையை மூடிப் பிந்திய அறையைத் திறந்து கொள்வேன். இவை இரண்டும் ஒன்றோறொண்டு கலப்பதும் இல்லை. எனக்கு களைப்பைத் தருவதுமில்லை. வீண் சிந்தனைக்கு எனது மூளையில் இடமே கிடையாது. உறங்க விரும்பும்போது எல்லா அறைகளையும் மூடி விடுவேன். உடனே அயர்ந்து தூங்குவேன் என்று.

இவ்வாறு ஒரு நேரத்தில் ஒரு வேலை என்ற ஒழுங்குச் சட்டத்தைத்தங்களுக்கே தாங்கள் பிறப்பித்துக் கொண்டு யார் மனமொன்றி வேலை செய்கிறார்களோ அவர்களே வாழ்க்கையில் முன்னேற்றமடைகின்றவர்களாவர். அவர்கள் அவசரப்படவு மாட்டார்கள். ஆத்திரப்படவும் மாட்டார்கள். கடிகாரம் போன்று அவர்களுடைய வாழ் நாள் கழிந்து கொண்டிருக்கும். தங்களுடைய வாழ்நாளுக்குள் மகோன்னத காரியங்களைச் சாதித்து வெற்றி கண்டுவிடுவர். தங்களுடைய நேரத்தை அந்தந்தக் காரியங்களுக்கென வகுத்துக் கொண்டதை அவர்களின் வாழ்க்கை இயந்திரம் ஒழுங்காக வேலை செய்ய வழி வகுத்தது. உதாரணமாக காந்திஜியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். அவர் அரசியல் வாதியாக மட்டு மல்லாது ஆத்மிக ஞானியாகவும் விளங்கினார். இரண்டும் ஒருவரிடத்தில் சங்கமமாகியமை சாமானிய காரியமல்ல. அவருக்கு அளிக்கப்பட்டது எமக்குப்போன்று 24 மணி நேரங்கள் தான்.

ஆனால் அவைகளை எவ்வாறு பற்பல காரியங்களுக்கென வகுத்துக் கொண்டார் என்பதைப்பாருங்கள். பிறரால் தாங்க முடியாத அரசியல் சுமைகளை, தான் ஒருவரே தனித்துச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்ட போதிலும், அவர் பிரார்த் தனை செய்வதை நிறுத்தினாரா? உலாவச் செல்வதை நிறுத்தினாரா?

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IDM** Nations Campus

**BE READY TO**
MAKE A DIFFERENCE WITH
HIGHLY TRUSTED **IDM DIPLOMAS**
ACCEPTED LOCALLY AND INTERNATIONALLY
FOR THE PAST **30 YEARS**

**IDM INTERNATIONAL DIPLOMA IN**

- Computing
- Business Management
- Hardware & Computer Network Technology
- Web Engineering
- Law

**IDM DIPLOMA IN**

- AutoCAD
- Graphic Designing
- Multimedia
- Computer Application (Ms Office - ICDL)
- Computerized Accounting Packages

HOT LINE 0774419901

Our International Affiliations

IDM Nations Campus இன் யாழ் குடாநாட்டிற்கான கிளை தலைமையகத்தின்கீழ் பின்வரும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

**IDM NATIONS CAMPUS**
#216, Nawalar Road, Jaffna | Tel: 021 222 9901
E-mail: jaffna@idmedu.lk | www.idmedu.lk

Prepared under
Hygienic method Specially for physicians and domestic purposes
750 ml

**IMPROVED FORMULA PURITY GUARANTEED**

# V.S.P
## SPECIAL LUNCH OIL



Special V.S.P Gingelly Oil

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135/9165

சுகாதார முறையில்
உணவிற்கும்,
வைத்தியத்திற்கும்,
விஷேடமாகத்
தயாரிக்கப்பட்டது.

உரிமையாளர் : திரு.பொ.பாஸ்கரன்
R.No 11505
சுத்தமான வி.எஸ்.பி நல்லெண்ணெய்

CIMA
Chartered Institute of Management Accountants

WISDOM JAFFNA
THE PLACE FOR CIMA

உங்களது
உயர் கல்வி...
உயர்ந்த நோக்குடன்...
உங்களை நாடி...

*Create Your Own Success Story...*




Commencement Dates:
18th January 2016
(Weekday Batch)
REGISTRATIONS NOW ON..!

**After O/Level or A/Level Start CIMA Certificate Level @ Wisdom...**

Fast Track your Future to become a Chartered Global Management Accountant (CGMA)
with the new generation professional business qualification, CIMA and a BSc Degree...

உங்களுக்கான விசேட சலுகை..!

நீங்கள் 2015 ஆகஸ்ட்
க.பொ.த உயர்தரப் பரீட்சை முடித்தவராயின்

| 3A சித்திகள் கொண்டிருப்பின் | அகில இலங்கை மட்டம் 100 ற்குள் |
| --- | --- |
| கற்கை கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும் | கற்கை கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும் |

நீங்கள் 2015 டிசம்பர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடித்தவராயின் கற்கைக் கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும்

இச்சலுகை 2016 ஜனவரி 18 ஆம் திகதி வரை மட்டுமே!

Call us to guide you better
**076 777 0747**
www.wisdombusiness.com

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, Navalar Road, Jaffna.
E : jaffna@wisdombusiness.com
021 222 07 27
021 720 0777
ROBERT GORDON UNIVERSITY ABERDEEN
CIMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

# External Degree

**GAQ, BA Part I ,BA Part II**

## aat (Srilanka)

**Foundation, Intermediate, Final**

**AA1, AA2, AA3**

Qualification : G.C.E O/L 6 PASSES

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

MEDIUM - TAMIL & ENGLISH

## Chartered

Medium: English & Tamil

**Executive Level, Business Level**

Qualification: A/L 3 Pass

Further Details

**JAFFNA COLLEGE**

**UNDERGRADUATE Dept**

**464, Hospital Road,Jaffna.**

**021 222 3382 / 021 222 9149**



## Upgrade your qualifaction with us




**BTEC HND**

where personal attention leads to professional achievement

**SOFTWARE ENGINEERING**

Leads to BSc

மேலதிக விபரங்களுக்கு **071 777 5 666**

**021 4 900 900**

பல நூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில்
உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்

**IIS CITY CAMPUS**

#200, Sivan Pannai Road, Jaffna

Tel: 222 8060 Web: www.iis.edu.lk



## தென்னிந்திய திருத்தல யாத்திரை

**தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி, கேரளா ஊடான யாத்திரை**

நாள்கள் 16, ஆரம்பம். 27.01.2016. யாத்திரிகர்கள். 10.

தரிசிக்கும் ஆலயங்கள் சுருக்கமாக திருச்சி, உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, 9 நவக்கிரக ஆலயங்கள், ஆறுபடைவீடுகள், குருவாயூர், கன்னியாக்குமரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 5 பொற் கோயில், இராமேஸ்வரம், பிரம்மாகோயில், திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சவடி, ஆஞ்சினேயர், மைசூர், சாமுண்டீஸ்வரி, மணக்குள விநாயகர், பத்மநாதசுவாமி, திரு விடைமருதூர், திருவையாறு உட்பட 60இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன், மைசூர், பிருந்தாவனம், பாலஸ், மரீனாபீச், பாண்டிச்சேரி பீச்சும் காணலாம். (ஆலயங்கள் அனைத்திலும் பூசை நேரத்தில் தவறாது தரிசிக்கலாம்)

பெற்றுக்கொள்ளும் ருபாவுக்கு எமது சேவை

இருவழி விமானரிக்கட், மூன்றுவேளை சுத்தமான உயர்தர சைவ உணவு, 2 லீற்றர் குடிநீர், கொழும்பில் இருந்து விமானநிலையம் செல்லவும் திரும்பவும் வாகனவசதி. யாத்திரை முழுவதும் ஏசி. வாகன வசதி. இரண்டுபேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள். ஆலய தரிசன கட்டணங்கள் அடங்கலாக.

விருப்பமுடையவர்கள் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் 50 புகைப்படங்கள் நாடு திரும்பியபின் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.(அன்பளிப்பாக)

விவரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
59, 8/6 செட்டியார்தெரு, கொழும்பு 11
077 768 0102, 077 736 2154



## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும் ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும், ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும் ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் 6 மாத கற்கைநெறி

***(Trainer Training (teacher Training programme)*** **(யாழில் முதல் முறையாக)**

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.01.2016) சனி (weekend batch)**
**9.am (18.01.2016) திங்கள் (Week day batch)**

பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040



## O/L, A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.

| Courses | Entry Qualification | Duration |
|---|---|---|
| B.Sc. in Computer Science | O/L or A/L | 2-3 Years |
| Top Up in B.Sc. in Computer Science | 2 Years Diploma or HND | 1 Year |
| P.G.D. in Computer Science | Any Degree | 1 Year |
| M.Sc. in Computer Science | B.Sc. in Comp. Sc. or P.G.D in Comp. Sc. | 1 Year |
| Hotel Management | O/L or A/L | 1 Year |

North Lanka IIT

Peoples Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.

Contact: 0777592666 , 0769440075


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நருபவர்: வித்யா

**மேடம்:** சூழ்நிலை அறிந்து நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. உறவினர்களால் நன்மை உண்டு.

**இடபம்:** பிறர் ஏளனமாகப் பேசும் சூழல் உருவாகலாம். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தெய்வ வழிபாடு சிறப்பாக நடக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**கடகம்:** பகைவர் தொல்லை நீங்கும். புதிய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்குச் சொத்துச் சேர்க்கை கிடைக்கும்.

**சிங்கம்:** பணிகளில் குறுக்கீடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் முதலீடு தேவைப்படும். சீரான இலாபம் கிடைக்கும். பெண்கள் எதிர்பார்த்த சுப செய்தி தேடி வரும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கன்னி:** எதிலும் நிதானத்துடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மறையும். இலாபம் உயரும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** மற்றவர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**தனுசு:** எதிரியும் விலகிப்போகும் நல்ல நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பெண்கள் எதிர்கால நலனுக்காகச் சேமிப்பர். உறவினர்கள் வலிய வந்து உதவி செய்வர்.

**மகரம்:** சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** எதிரியும் மதிக்கிற சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். சுப விடயத்தில் இருந்த தடை விலகும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** திறமை வெளிப்படும் விதத்தில் செயற்படுவீர்கள். சமுதாயத்தில் மதிப்புக் கூடும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்குப் பூர்த்தியாகும். குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

"ஏண்டா...பொய் சொன்ன?" இனிமேல் இப்படி பொய் சொல்ல மாட்டேன்னு சொல்லு என மகனை அடி அடியென அடித்தார் தந்தை.
இனி மேலும் பொய் சொல்வேன் அப்பா என்று அழுது கொண்டே சொன்னான் மகன்.
தந்தை திகைத்து போய், ஏன்டா, இம்புட்டு அடி வாங்கியும் ஏண்டா இப்படிச் சொல்ற? என்றார்.
பையன் சொன்னான், "இனி மேல் பொய் சொல்ல மாட்டேன் எனச் சொன்னால் அது பொய் தானே அப்பா" என்றான்.

WhatsApp
படித்ததில் பிடித்தது



ஸ்ரீ ( SRI ) @KeethaSj · 25 Dec
தோல்வி
என்பது
அவமானம்
அல்ல
அது
முயற்சி
செய்ததன்
அடையாளம்......




பேஸ் புக்கில் பிடித்தவை...

எங்க இருந்துடா வரீங்க ?



**பெண்**

பெண் அன்பில் ஒரு தாய்,
பெண் அழகீல் ஒரு தேவதை,
பெண் அறிவில் ஒரு மந்திரி,
பெண் ஆதரவில் ஒரு உறவு,
பெண் வெறுப்பில் ஒரு நெருப்பு,
பெண் வெற்றிக்கு ஒரு மலை,
பெண் தோல்விக்கு ஒரு பள்ளம்,
பெண் நட்பில் ஒரு நேர்மை,
பெண் கன்டீப்பில் ஒரு ஆசிரியர்,
இருந்தாலும் பெண் ஒரு புரியாத புதிர்?

# தமிழ் சினிமாவில் குறைகிறது பேய்களின் ஆதிக்கம்

கடந்த சில வருடங்களாகத் தமிழ் சினிமாவில் பேய்களின் ஆதிக்கம் வலுவாக இருந்தது. "பீட்சா", "காஞ்சனா" தொடக்கி வைத்த இந்த பேய்க் கதை விவகாரம் கடந்த இரண்டு வருடங்களாக நீடித்து வந்தது. தற்போது பேய்ப் படங்களின் வெற்றி கணிசமாகக் குறைந்து விட்டதால், தமிழ் சினிமா மெல்ல மெல்ல பேய்களின் பிடியிலிருந்து விடுபடுகிறது. 2014ஆம் ஆண்டு 8 பேய்ப் படங்கள் மட்டுமே வெளிவந்தன. இதில் "யாமிருக்க பயமே", "பிசாசு", ''அரண்மனை'' படங்கள் மட்டுமே மக்களின் வரவேற்பைப் பெற்றன. 2015ஆம் ஆண்டு 20 பேய்ப் படங்கள் வெளிவந்தன. இதில் "காஞ்சனா 2", "டார்லிங்", "டிமான்டி காலனி", "மாயா" ஆகிய படங்கள் மட்டுமே மக்களின் வரவேற்பைப் பெற்று வசூலைக் குவித்தன. சூர்யா நடித்த "மாஸ்" உட்பட மற்றப் பேய்ப் படங்கள் வரவேற்பைப் பெறவில்லை. குறைந்த பட்ஜெட், பாழடைந்த பங்களா, நான்கைந்து நடிகர்கள் இவற்றைக் கொண்டு எளிதாகத் தயாரிக்கப்பட்ட பேய்ப் படங்கள் அனைத்தாலும் ஓரிரு நாள்கள் கூட தியேட்டரில் தாக்குப்பிடிக்க முடியாமல் போனது. 2016 ஆம் ஆண்டின் முதல்நாளே "பேய்கள் ஜாக்கிரதை", "கரையோரம்" என்ற பேய்ப் படங்களுடன் தொடங்கி இருக்கிறது. ''அரண்மனை 2", ''ஹலோ நான் பேய் பேசுறேன்'' படங்கள் அடுத்ததாக வெளியாக இருக்கின்றன. ஒரு படம் சுந்தர்.சி இயக்குவது, மற்றொன்று சுந்தர்.சி தயாரிப்பது. இந்தப் படங்களுடைய வெற்றியைப் பொறுத்தே புதுப் பேய்ப் படங்களை உருவாக்கத் தயாரிப்பாளர்கள் ஆர்வம் காட்டுவார்கள்.





# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | | 7 | |
| 7 | | 6 | 5 | | | | | 3 |
| 5 | | | 8 | | | | | |
| | | | 3 | | 2 | | 5 | 6 |
| 6 | | | | | | | | 1 |
| 3 | 1 | | 6 | | 4 | | | |
| | | | | | 8 | | | 9 |
| 2 | | | | | 5 | 3 | | 4 |
| | 6 | | 4 | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 1 | 3 | 7 | 9 | 8 | 5 | 4 |
| 8 | 3 | 7 | 2 | 4 | 5 | 6 | 1 | 9 |
| 4 | 5 | 9 | 1 | 8 | 6 | 7 | 3 | 2 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 3 | 5 | 9 | 7 |
| 3 | 9 | 6 | 4 | 5 | 7 | 1 | 2 | 8 |
| 5 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 6 |
| 6 | 1 | 3 | 7 | 9 | 4 | 2 | 8 | 5 |
| 7 | 2 | 4 | 5 | 3 | 8 | 9 | 6 | 1 |
| 9 | 8 | 5 | 6 | 2 | 1 | 4 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைப்போம் வாங்க



**தேவையானவை:**

கத்தரிக்காய் - 6,
அரிசி மா - 4 மேசைக்கரண்டி,
மிளகாய்த் தூள் -2 தேக்கரண்டி,
மல்லித் தூள் -1 மேசைக்கரண்டி,
உப்பு - தேவையான அளவு.

## கத்தரிக்காய் பொரியல்

**செய்முறை:**

தேவையான பொருள்களை எடுத்துக்கொள்ளவும். கத்தரிக்காயின் மேற்பகுதியை நீக்கி விடவும். பின்பு அதனை வட்டமாக நறுக்கிக்கொள்ளவும். ஒரு தட்டில் அரிசி மா எடுத்துக் கொள்ளவும். மசாலா தூள்களைச் சேர்க்கவும். பின்பு உப்புச் சேர்த்து நன்கு கலக்கவும். பின்பு கத்தரிக்காயை அதில் புரட்டி எடுக்கவும். அனைத்துப் பக்கங்களிலும் படும்படி புரட்டி எடுக்கவும். சுட்டியில் எண்ணெய் விட்டுச் சூடாக்கவும். அதில் கத்தரிக்காய்த்துண்டுகளைப் போடவும். ஒரு பாத்திரத்தால் மூடி வைக்கவும். இரு பக்கங்களும் வெந்த பின்பு சுவையாகச் சாப்பிட்டு மகிழலாம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 650 | 600 | 600 | 600 |
| நண்டு | 250 | 500 | 400 | 300 | 300 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 450 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | 600 | 500 | 450 | 500 | - |
| சுறா | 300 | 600 | 600 | - | 600 | 600 | - |
| சீலா | 250 | 500 | 500 | 400 | 400 | - | 400 |
| விளை | 500 | 500 | 300 | 600 | 450 | 400 | 400 |
| முரல் | 250 | 350 | 400 | 400 | 300 | 250 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 500 | 400 | - | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | - | - | 500 | - | - |
| ஒரா | 300 | 350 | 300 | - | 400 | - | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 300 | 350 | 100 | - |
| நகரை | 150 | 300 | - | - | 300 | - | 350 |
| சூடை | 130 | 200 | 100 | 200 | 120 | 150 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 250 | 200 | 250 |
| திருக்கை | 150 | 350 | 250 | 400 | 300 | 150 | - |
| மதனம் | 250 | 300 | 220 | 300 | 250 | 350 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 50 | 100 | 600 | - |
| பாலை | 100 | 250 | 300 | 600 | 350 | 250 | - |
| வாளை | 150 | 150 | - | 300 | 250 | 300 | 250 |





## இது புதுசு

### துணிகளால் தயாரிக்கப்பட்ட பை

பெண்களுக்கான பைகளில் துணியில் தயாரிக்கப்பட்ட வேலைப்பாடுகள் கொண்ட பை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சதுர வடிவில் உள்ள பையில் நூல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முழுக்க முழுக்கத் துணியால் தயாரிக்கப்பட்டிருப்பதால் துவைத்துப் பாவிக்கலாம். இவை 450 ரூபாவில் இருந்து 650 ரூபாவரை விற்பனை செய்யப் படுகின்றன.

**நாளை**
மார்கழி -25
ஞாயிற்றுக்கிழமை
10.01.2016
திதி: அமாவாசை
மு.ப.08.15
நட்சத்திரம்: பூராடம்
மு.ப.11.03
ராகுகாலம்:
05.03-06.33 வரை
சுபநேரம்:
09.33- 11.03 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 60 | 120 | 60 | 120 | – | 80 |
| கத்தரி | 150 | 130 | 150 | 120 | 120 | 140 | 100 | 120 |
| கரட் | 250 | 200 | 200–400 | 180 | 180 | 400 | 180 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 60 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 100 | 120–160 | 180 | 240 | 150 | 150 | 150 |
| பாகல் | 200 | 150 | 200 | 160 | 120 | 300 | 130 | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 120 | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 120 | 80 | 80 | 100 | 65 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 170 | 100 | 120 | 140 | 200 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 45–50 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 180 | 70 | 80 | 50–60 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 50–60 | 40 | 50 | 40 |
| கீரை | 40 | 70 | 40 | 20 | 40–50 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 30 | 40 | 10 | 12 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 350 | 300 | 190–280 | 300 | 250 | 350 |
| புடோல் | 80 | 80 | 60 | 100 | 100 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 140 | 130 | 160 | 100 | 140 | 90 | 100 |
| வெண்டி | 160 | 160 | 200 | 120 | 120–160 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 250 | 220 | 200 | 280 | 220–240 | 150 | 200 | 150 |
| லீக்ஸ் | 120 | 150 | 160 | 180 | 120–160 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50–60 | 40–50 | 40 | 30–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 70 | 70 | 55 | 80–120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 90–100 | 40 | 50 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 300 | 280 | 300 | 340 | 280–300 | – | 200 | 300 |
| இராசவள்ளி | 150 | 150 | 140 | 160 | 140–160 | 120 | 100 | 100 |



## வீட்டுக்கு அழகு சேர்க்கும் மாபிள்

* வீடு கட்ட வேண்டும் என காணி வாங்கி விட்டீர்கள். முதலில் என்னென்ன செய்ய வேண்டும் எனப் பார்ப்போம். முதலில் நிலத்தைச் சரி செய்து வீடு கட்டுவதற்கு ஏற்ப தகுதி படைத்ததாக மாற்ற வேண்டும். அத்திபாரத்தில் தொடங்கி, வீட்டுக்கு வர்ணம் பூசுவது, மாபிள் பதிப்பதுவரை உங்களுடைய கவனம் இருக்க வேண்டும்.



* அதில் மாபிள்கள் வீட்டுத் தரைக்கு அழகு சேர்க்கும் ஓர் அம்ச மாகும். இன்றைக்கு பலவிதமான கட்டுமானப் பொருள்களைக் கொண்டு தரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்குள் மாபிள் முக்கியமானதொன்று. ஆரம்பத்தில் சில வண்ணங்களில் மட்டுமே மாபிள்கள் கிடைத்தன. இப்போது அப்படியல்ல. பல விதமான வண்ணங்களில் கிடைக்கின்றன. அதுபோல வடிவங்களிலும் பல விதங்கள் வந்து விட்டன. நாம் கட்டும் வீடுகளின் அமைப்புக்குத் தகுந்தவாறு பலவிதமான மாபிள்களை வாங்கிப் பதிக்கலாம்.

* வழுக்காத் தன்மை கொண்ட கிரிப்பர் மாபிள்கள் கடைகளில் கிடைக்கின்றன. மாபிள்களின்நன்மை என்னவென்றால் இவை அதிகம் அழுக்குப்படியக் கூடியவை அல்ல. படியும் அழுக்குகளை எளிதாகத் துடைக்கவும் முடியும் குறிப்பாக சமையலறை குளியலறைபோன்றஅறை களுக்கு இந்த மாபிள்கள் பொருத் தமாக இருக்கும்.

* வரவேற்பறை, சமையலறை, பூசையறை, படுக்கையறை என ஒவ்வொரு அறைக்கும் தகுந்தாற் போல அனைத்துக்கும் விதவிதமான மாபிள்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவித்

ஒரு வருடப் பூர்த்தி நிகழ்வு நேற்று கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது. அதில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மிகச்சிறிய அரிசி அளக்கும் ஆளாக்கு என்ற அளவைக்குள் கிழக்கு, மேற்கு என்ற திசைகள் உள்ளனவா? என்பதைக் கற்பனை செய்யமுடி யாது. எனினும் இலங்கை போன்ற சிறிய தீவில் கிழக்கு, மேற்கு என்ற திசைகள் நிச்சயமாக உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறித்து கருத்துக்களை வெளியிடுவதைக் குற்றமாக நாம் கருதவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொடிய போரை ஒழித்ததில் வரலாறாகின்றார் என் பதில் சந்தேகமும் இல்லை.

இருப்பினும் அப்பாவிப் பொது மக்களைப் படுகொலை செய்தமை போரின் கொடிய தன்மையை வெளிப்படுத்து கின்றது. வேலுப்பிள்ளை பிரபாகரனின் குழந்தை என்ற காரணத்துக்காகக் கொடிய முறையில் அந்தக் குழந்தையைக் கொன்றதன் மூலம் அந்தக் குழந்தை பயங்கரமான முறையில் இந்த உலகத்தை விட்டுச் சென்றுள்ளது.

இதன்மூலம், சமாதானம் அகன்று சென்றது. துப்பாக்கிகள் மௌனமாகின. அதேநேரம் சமாதானப் பேச்சுக்களின் குரல்களும் மௌனமாகின.

சிங்கள இனவாதத்தையும் தமிழ் இனவாதத்தையும் நாம் எதிர்க்கின்றோம். மலையக மக்கள் உட்பட்ட அனைத்து சமூகத்தவர்களுக்கும் நம்பிக்கை உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வும் அரசைக் கையேற்றதன் பின்னர், தேசிய சமாதானம் வரும் என் பதில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. சிறிய தீவு மற்றும் கண்டம் என்பவற்றுக்கு இடையில் உள்ள வித்தியாசம், தீவு என்பது என்பது மிகவும் சிறியது. கண்டம் என்பது மிகப் பெரியது.

இந்தநிலையில் தற்போதைய ஆட்சியின் கீழ் இலங்கை நம்பிக்கைத் தீவாக மாறும். எதிர்காலத்தில் இலங்கை நம்பிக்கைக் கண்டமாகவும் மாறும் என்ற உறுதிப்பாடு உள் ளது.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் இலங்கையின் தலைவர்கள் சமூகங்களுக்கு இடையே நம்பிக்கையைக் கட்டி எழுப்பியுள்ளனர். பொறாமையை விலக்கியுள்ளனர். இதன் மூலம் இலங்கையை பெரிய நாடாக வெளிப்படுத்தியுள்ளனர். -என்றார். (த-வ)

## கழுத்துப்பட்டிச்

சவாலை நிறைவேற்றத் தவறியுள்ளார்.

ரத்னலங்கா நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் 4ஆவது தடவையாக விசாரணை நடத்தப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வாக்குமூலம் அளித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில், நாளை (நேற்று) கறுப்பு கழுத்துப்பட்டி அணிந்து வந்து விசேட அறிவிப்பொன்றை நான் விடுவிப்பேன் என்று கோத்தபாய ராஜபக்ச கூறியிருந்தார்.

இதனால், நேற்றுக் காலை 8 மணி முதல் ஜனாதிபதி ஆணைக் குழுவின் வளாகம் முன்னால் கோத்தபாய வின் வருகைக்காக ஊடகவியலா ளர்கள் காத்துக் கிடந்தனர். புகைப்படப் பிடிப் பாளர்களும் தயார் நிலையிலேயே இருந்தனர்.

ஆனால், 8.55 மணியளவிலேயே கோத்தபாய ராஜபக்ச பெரிய மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு அலுவலகத்துக்கு வந்திருந்தார். எனினும், அவர் கறுப்பு நிற கழுத்துப் பட்டி அணிந் திருக்கவில்லை. நீல நிற கழுத்துப் பட்டியே கட்டியிருந்தார்.

இவ்வாறு கோத்தபாய வருகையில், கறுப்பு கழுத்துப்பட்டி அணிந்து வருவதாகக் கூறியிருந்தீர்களே அதைக் காணமுடியவில்லையே என்று ஊடகவியலாளர்கள் வினா தொடுத்தனர்.

இதற்குச் சிரித்தபடியே பதிலளித்த கோத்தபாய, நாட்டில் நீல நிறம் கறுப்பு நிறமாகியுள்ளது என்று கூறி சமாளித்தபடியே ஆணைக்குழு காரியாலயத்துக்குள் நுழைந்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரிடம் நேற்று ஐந்தாவது தடவையாகவும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## புலம்பெயர் தமிழர்

மூலம் மக்கள் தமது விவசாயக் காணிகளில் பயிர் செய்யும் நிலைமை ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு, புலம்பெயர் தமிழர்கள் அங்கு முதலீடுகளைச் செய்வதற்கு முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த பொருளாதார மன்ற மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய போதே, ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில், நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றும் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய உறுதிமொழி ஒன்றை நிறைவேற்றுகிறோம். புதிய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அனைத்து மக்களுக்கும் அவர்களின் சொந்தக் காணிகள் மீளக் கையளிக்கப்படும். இதன் மூலம் மக்கள் தமது விவசாயக் காணிகளில் பயிர் செய்யும் நிலைமை ஏற்படுத்தப்படும்.

ஜேர்மனி , கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகளில் பரந்துபட்டு, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும் பாலானோர் வர்த்தக நடவடிக்கைக ளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வடக்கின் அபிவிருத்திக்கு முதலீடுகளை மேற்கொள்ள முடியும். வடக்கில் மட்டுமல்ல, கொழும்பின் அபிவிருத்திக்கும் இவர்களால் பங்களிப்புச் செய்ய முடியும்.

புலம்பெயர்ந்து வாழும் சிங்கள மக்களும் தமது பங்களிப்பை வழங்க முடியும். பெரும்பாலான புலம் பெயர் சிங்களவர்கள் கல்வித் துறையில் நிபுணத்துவம் பெற்று வெளிநாடுகளில் தொழில் புரிகின்றனர். இவர்களால் இலங்கையின் கல்வித் துறையின் மேம்பாட்டுக்கு பங்களிப்பை வழங்க முடியும். எனவே, புலம்பெயர் தமிழர்களுக் கும் சிங்களவர்களுக்கும் தமது தாய்நாட்டுக்கு பங்களிப்பை வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

சீனாவின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. எதிர்காலத்தில் மத்திய கிழக்கில் என்ன நடக்கும் என்பது தெரியாது. அமெரிக்காவிலும் நெருக் கடிகள் உருவாகலாம். எனவே இந்து சமுத்திரத்தின் போட்டிமிக்க சமூகச் சூழலை எமது நாட்டில் கட்டி யெழுப்ப வேண்டும் – என்றார். (த-5)

## யாழிலிருந்து

இந்தச் சேவைக்கு முறைப்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் தெரிவிக்க என்ற தொனிப் பொருளில், புதிய சேவை ஜனாதிபதி மைத்திரிபாலவினால் நேற்று முற்பகல் 11 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. முகநூலில் ஹாஸ் குறி யீட்டுடன் 'ரெல்தபிரசிடன்ற்' என்று ரைப் செய்து, அதனூடு ஜனாதிபதிக்கு எதுவித முறைப்பாடுகளையும் தெரிவிக்க முடியும்.

இந்நிகழ்வு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதியிடம் தெரிவிக்க.. எனும் சேவையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், மக்களின் குறைகளைக் கேட்டறியும் வகையில் முதலாவது தொலைபேசி அழைப்புக்கும் ஜனாதிபதி பதிலளித்தார்.

முறைப்பாடுகள் தெரிவிக்கும் சேவை நேற்று முற்பகல் 11 மணிக்கு உத்தி யோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னதாகவே பலரும் தமது பிரதேசங்களிலுள்ள குறைபாடுகள் - பொதுவான குறை பாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் மெலிஞ்சி முனைக் கிராமத்தின் பிரதான வீதியின் மோசமான நிலையை ஒளிப் படங்களுடன் எடுத்து, அசோக் அந்தோனிப்பிள்ளை என்ற முகநூல் பெயரைக் கொண்ட ஒருவர் ஜனாதிபதியிடம் தெரிவிக்க பகுதிக்கு முறைப் பாடு செய்துள்ளார்.

இதன் பின்னர் பல முறைப் பாடுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. (த-5)

## எஞ்சிய 248 ஏக்கர்

தில் வலி.வடக்கில் எவ்வளவு ஏக்கர் காணி விடுவிக்கப்படுவது என்பது குறிப்பிடப்படவில்லை.

ஆனால் அமைச்சரவை முடிவை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனரத்ன, வலி.வடக்கில் 948 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சரவை அங் கீகாரம் வழங்குவதற்கு முன்பா கவே, கடந்த மாதம் 30 ஆம் திகதி வலி.வடக்கில் 701 ஏக்கர் விடு விக்கப்பட்டிருந்தது. மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் காணி விடுவிப்பு தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் அமைச் சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்பதாக, ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய ஜனாதிபதியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு 701 ஏக்கர் விடுவிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் அமைச்சரவையில், வலி. வடக்கு காணி விடுவிப்புக்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக் கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டதைப் போன்று 948 ஏக்கர் விடுவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தால் எஞ்சிய 248 ஏக்கரும் எப்போது விடுவிக்கப்படும் என்று வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர் வாழ்வுச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. (த-5)

## வரலாறாகிவிட்டார்

உரையாற்றியபோதே இலங்கைத் தலைவர்கள் முன்னிலையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டார். அவரின் குறிக்கோளும் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. ஆனால், அந்த குறிக்கோள் தற்போது மறைந்துள்ளதே தவிர மீண் டும் வருவதற்கான சாத்தியக்கூறு கள் உள்ளன.

பிரிவினைவாதம் தற்போதைய நிகழ்ச்சி நிரலில் இருந்து வெளியே றியுள்ளபோதிலும் அது நிரந்தரமாக வெளியேறவில்லை.- என்றார். (த-வ)

## தம்மைக் கொல்ல

மன்னிப்பு அளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரைச் சந்தித்து ஆசியும் வழங்கினார்.

ஜனநாயக அரச நிர்வாகத்தின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு நேற்றுப் பிற்பகல் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன் னாள் உறுப்பினரான சிவராஜா ஜெனி வன் என்ற குறித்த நபரை, ஜனாதிபதி சந்தித்தார்.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய பின்னர், அந்த நபர் ஜனாதி பதியைச் சந்தித்தார். இதன்போது ஜெனிவனின் கைகளைப்பிடித்து, ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார்.

பொலன்னறுவை - மன்னம்பிட்டிய பகுதியில் வைத்து, குறித்த நபர் குண்டு ஒன்றை வெடிக்க வைத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக்கொலை செய்ய முற்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

அத்துடன் பொலன்னறுவை மேல் நீதிமன்றம், குறித்த குற்றத்திற்காக, ஜெனிவ னுக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத்தீர்ப்பளித் தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையி லேயே குறித்த தமழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரை நேரில் அழைத்து ஜனாதிபதி மன்னிப்பளித்து விடு தலை செய்துள்ளார். (த-வ)

## அமெரிக்காவும்

யாகின்ற நிலை யில், பி.பி.சி. செய் திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே பசில் ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில், குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, ஐரோப் பிய ஒன்றிய நாடு கள் பல எமக்கு எதி ராக அணிதிரண்டிருந்தன. சர்வ தேச மட்டத்தில் அந்த நாடுகள் கொடுத்த அழுத்தங்களுக்கு அப்பால் உள்நாட்டிலும் அழுத்தம் கொடுத்தன.

அந்த நாடுகள் பகி ரங்கமாக இதனைச் சொல்லியி ருக்கின்றன. அமெரிக்கா தங்களின் வருடாந்த அறிக்கையில் 2015 இல் தமக்குக்கிடைத்த வெற்றி என்று இலங்கையின் ஆட்சி மாற்றத்தை வர்ணித்துள்ளது. அதை விட வேறு சாட்சி என்ன வேண்டும்--என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் சவின் ஆட்சிக்கா லத்தில் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த அவரது மூன்று சகோதரர்களில் ஒருவர் தான் பசில் ராஜபக்ச என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## நல்லாட்சி அரசுக்கு

இலங்கையின் தற்போதைய அரசின் இந்த மாற்றம் நீண்ட கால சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சமான எதிர்காலத்திற்கு உதவியாக அமையும் என்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் போர் நிலவிய காலப் பகுதியில் காணப்பட்ட நெருக்கடிகளைச் சீரமைத்துக் கொள்வதற்குப் புதிய ஆட்சியின் கீழ், நடவடிக்கை எடுக்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் பான்-கீ-மூன் அந்த வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக 2015ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபையினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுக்கு சாதகமான பதில் கிடைத்தது என்றும் பான்-கீ - மூன் மேலும் தெரிவித்துள்ளார். (த-சி)

## அரசமைப்புப் பேரவை

ருந்தனர்.

இதன் பிரகாரம் ஜனாதிபதி அதிகாரத்தை திருத்தம் செய்வது, தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றல் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கல் ஆகிய விடயங்கள் குறித்த பிரேணையில் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டது. அது தொடர்பில் நாடாளுமன்ற அறிவித்தலிலும் உள்ளடக்கப்பட்டது.

எனினும் மகிந்த தரப்பு கூட்டு எதிர்க் கட்சியினரும் ஜே.வி.பியும் குறித்த பிரேரணைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இதனால் குறித்த பிரேரணையிலிருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கல் என்ற தீர்மானத்தை தவிர்ப்பதற்கு அரசு முயற்சித்து வருகின்றது.

இந்த நிலையைல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு குறித்த பிரேரணை தொடர்பில் நேற்று மாலை ஆராய்ந்திருந்தது. இதன்போது, ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தகவல் தருகையில்:-

நாடாளுமன்றம் அரசமைப்பு பேரவையாக மாற்றம் செய்வதற்கு பிரதமரினால் இன்று சமர்ப்பிக்கப்படும் பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூடி ஆராய்ந்தது.

இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடத்தப்படும் வாக்கெடுப்பின் போது, கூட்டமைப்பு எவ்வாறு நடந்து கொள்வது தொடர்பில் ஆராய்ந்தோம். சர்வதேசமே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டுமென்ற கொள்கையில் இருக்கும் போது இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியானதாகப் பயன்படுத்த வேண்டும். எனினும் பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் நேற்றிரவு 10.00 மணிக்குக் கூடி ஆராய்ந்தனர்.

எனவே, அவர்களின் முடிவு வெளியாகியதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று காலை மீண்டும் கூடும்.- என்றார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வயது சிறுமியுடன் தம்பதியாக வாழ்ந்த இளைஞனுக்குப் பிணை

சாவகச்சேரி, ஜன. 9

தனது மச்சாள் முறையான வலிகாமத்தைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியுடன் தம்பதியாக வாழ்ந்த 19 வயது இளைஞனை பிணையில் செல்ல அனுமதித் தது சாவகச்சேரி நீதி மன்று.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞன் தனது மச்சாள் முறை யான சிறு மியை அழைத்து வந்து குடும்ப மாக இருப்பது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதையடுத்துப் பொலிஸார் கடந்த 25 ஆம் திகதி இளைஞனைக் கைது செய்து மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதி வான் செ.கணபதிப் பிள்ளை நேற்று முன் தினம் வரை குறித்த இளைஞனை விளக் கமறியலில் வைக்குமாறு உத்தரவிட் டார்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இளைஞன் சார் பில் வாதிட்ட சட்டத்தரணியின் வேண்டு கோளின் பிரகாரம் இளைஞனை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல நீதிவான்அனுமதித்தார். (ற-ஐ-9)

## பதவி வறிதாக்கம் செய்யப்பட்ட அலுவலர்கள்உள்ளூராட்சித் திணைக்களங்களில் இணைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

வடக்கு மாகாண சபையும், வடமாகாண முதலமைச்சரும் இணைந்த வகையில் பதவி வறி தாக்கம் செய்யப்பட்ட செயலாளர்கள்உள்ளூராட்சித் திணைக்களங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி உதவியாளர் பதவி வகுப்பைச்சேர்ந்த 9 பேர் நீண்ட பல வருடங்களாகப் பிரதேச சபை, நகர சபைகளின் செயலாளர்களாகப் பதவி வகித்து வந்தனர்.

இவ்வாறு பதவி வகித்த உள்ளூராட்சிஉதவியாளர் வகுப்பைச்சேர்ந்த செயலாளர்கள், உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்ற அடிப்படையில் பதவி வறிதாக்கம் செய்யப்பட்டு திணைக்களங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிச் சபைகளுக்குப் பயனுறுதி வாய்ந்த, தகுதி வாய்ந்த முகாமைத்துவ உதவியாளர் வகுப்பைச் (சுப்றா) சேர்ந்தவர்களை வடக்கு மாகாண சபையும்,வடக்குமாகாண முதலமைச்சரும் இணைந்த வகையில் உடனடியாகச் செயற்படும் வண்ணம் புதியவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ஐ-50)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டு . வடக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த
திரு. திருமதி பரமேஸ்வரன் மாலா
தம்பதியரின் செல்வப் புதல்வனும்
யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனுமாகிய
**சதுர்வேதன்**
கடந்த 2015 ஆம் ஆண்டின்
க.பொ.த. உயர்தரத்தில்
உயிரியல் பாடப் பிரிவில் தோற்றி
2A, 1B சித்தியுடன்
யாழ். மாவட்டத்தில் 44 ஆவது
இடத்தினைப் பெற்று
"மருத்துவ பீடத்திற்கு" தெரிவாகியுள்ளார்.
கற்பகன் அருள்பெற்று மருத்துவத்துறையில் சாதனை
புரிந்திட சதுர்வேதனை வாழ்த்தி நிற்கின்றோம்.

(67493) (13,15,18)

**குடும்பத்தினர்.**

### விசேட பொதுக்கூட்டம்

**இடம்** - இந்து இளைஞர் சங்க பணிமனை
**காலம்** - 10.01.2016 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்** - காலை 9.00 - 11.00

முக்கிய விடயங்கள் பற்றி தீர்மானங்கள் எடுக்கவிருப்பதனால் சகல அங்கத்தவர்களையும் உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.
இணைச்செயலாளர்
N.Ratheepan

## Study Medicine

### MBBS / MD

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO

* Raiga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



Admission Open for the Year 2016

iCS Study Overseas
187, 6-1/1 Galle Road, Colombo 06

**Appointments**
077 3013060

### 2016 Chemistry Personal Classes

Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்.

தொ.பே: 077 6038913

### விற்பனைக்கு

தொடர்பு: 077 999 4655

ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

(67497) (14,15)

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஈச்ச மோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

077 614 6434

### பெயர் மாற்றம்

வீரபத்திரர் வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த **சேகர்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **மணிவன்னன்** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

மணிவன்னன்

### வீடு வாடகைக்கு

இராஜபாதை வீதியில் U.N.H.R. ஸ்ரோர்ஸ்க்கு அண்மையில் 4¼ பரப்பில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.

077 123 7063
077 729 9031

### G.C.E(A/L) (EDEXEL)

Maths, Chemistry, Biology, Physics வகுப்புகள் நடைபெறுகின்றன.

**Beefort International School**
*136, Navalar Road, Jaffna.*

### தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, உடுவில் விளக்தடையான் வீதியைச் சேர்ந்த A. ஜெகதாஸ ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 783130360V, மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பவற்றுடன் போஸ் உடுவிலுக்கும் தாவடிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

077 988 0198

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும்

## After AL/OL What Next ?

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற

பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

### Spoken English with Grammar — 1½ Months

100% பயிற்சி — 100% வெற்றி

சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க

### Diploma In English — 2½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

Spoken English with Grammar: ~~Rs.10'000~~ Rs.7'500
Diploma in English: ~~Rs.14'000~~ Rs.9'500

Batches Start On
11.01.2016@ 9.00am
13.01.2016@ 9.00am
15.01.2016@ 2.00pm
16.01.2016 @ 9.00am
17.01.2016 @ 9.00am

BCHS

No.15, Chirambiyady Lane (off Stanley Road),
Jaffna (Near Ariyalam & Above Sathosa SM)
Tel : 021-2224550
Mobile# 077 036 5728, 0777 222 422, 077 655 5677

### S.K.Balasabash யிடம் கல்வி கற்று, க.பொ.த (உயர்தரப்) பரீட்சை - 2015 வணிகக்கல்வி பாடத்தில் ("A", "B") பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துதல்

| பெயர் | பெறுபேறு | வணிகக்கல்வி | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 3A | | | |
| டினேஸ் | 3A | A | 02 |
| திவ்வியா | 3A | A | 04 |
| வேணுயா | 3A | A | 05 |
| அருண்ஜெனுசன் | 3A | A | 28 |
| கம்சவாகினி | 3A | A | 38 |
| நிலோசினி | 3A | A | 51 |
| நிமாலினி | 3A | A | 55 |
| அபிராமி | 3A | A | 70 |
| ஸ்ரெபினியா | 3A | A | 72 |
| போரிஸ் ஜெல்ட்சின் | 3A | A | 74 |
| சஞ்சீவி | 3A | A | 87 |
| 2AB, 2AC, A2B, ABC | | | |
| தனுசான் | 2AB | A | 50 |
| கிருஷ்ணவேணி | 2AB | A | |
| சுபேசன் | 2AC | A | |
| கஜன் | 2AC | A | |
| சஞ்சிகா | 2AC | A | |
| கிருஷாந்தி | ABC | A | 116 |
| சம்யுதா | A2B | A | |
| மயூரிக்கா | A2B | A | |
| பிரியங்கா | A2B | A | |
| சுருதிகா | A2B | A | |
| யதுர்சா | A2B | A | |
| அருசா | ABC | A | |
| Bபெறுபேறு | | | |
| சியாலினி(கிளிநொச்சி மாவட்டம்) | A2B | B | 17 |
| சியாமினி | 2AB | B | 58 |
| சர்மினி | 2AB | B | 91 |
| ஸ்டீப் டினுசன் | 2AB | B | 99 |
| குகதரன் | 2AB | B | 129 |
| மரியபிரியதர்சினி | 3B | B | |
| டிலக்சன் | 3B | B | |
| பர்வின் | 3B | B | |
| தனுராஜ் | 2BC | B | |
| வேதிகா | B2C | B | |
| மகாராணி | B2C | B | |
| கம்சன் | B2C | B | |
| தக்சாயினி | BCS | B | |
| சிவமாறன் | 2BC | B | |

இவர்களோடு மேலும் ("C", "S") தர பெறுபேறுபெற்ற மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இம் முறையும் 100 %சித்தி சாதித்தவர்களைக் கேளுங்கள் சாதனைக்குரிய வழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமலர் மயில்வாகனம்



கோண்டாவிலைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமலர் மயில்வாகனம் கடந்த (03.01. 2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென் றவர்களான திரு.திருமதி. நடராசா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வே வாகனத்தின் அன்பு மனைவியும், மதிவதனி (சுவிஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), உதயகுமார் (ஜேர் மனி), சுதாமதி (ஜேர் மனி), அசோக்குமார்(சுவிஸ்), திலிப்குமார் (ஜேர்மனி), ஜெயக்குமார் (கனடா), ரஞ்சித்குமார் (கனடா), தினேஸ் குமார் (பிரான்ஸ்), சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மருமகன்களின் மாமியாரும், மருமகள்களின் மாமியும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியாரும், பூட்டப்பிள்ளை களின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2016) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவன் வீதி,கோண்டாவில்வடக்கு, கோண்டாவில்.
குடும்பத்தினர்.
077 0780549

### சுப்பிரமணியம் கந்தசாமி
(ATTORNEY- at LAW, JPUM)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் கந்தசாமி (சட்டத்தரணி யும் பதில் நீதிவான், சாவகச் சேரி) அவர்கள் நேற்று (08.01. 2016) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சுப்பிரமணியம்- தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-ஜெகசோதி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மினிதேவியின் அன்புக் கணவரும், மனோன்மணியின் சகோதரனும், பரமநாதனின் மைத்துனரும், நளினி (நீதிவான் அக்கரைப்பற்று), ஜானகி, அகி லன், சுகந்தன், விம லன், ஜமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாகரன், சிவலஷ்மன், துசித்தா ஆகியோரின் மாமனும், அனுக் ஷனா, அக்ஷரன், வைஷ்ணவி, துளசிகா ஆகியோரின் பேரனுமாவ ார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உறறார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.
தகவல்:
சிவலஷ்மன் (மருமகன்)
35/10, 5ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### கந்தையா-முருகேசு

பிறப்பு
29 . 07 . 1924



இறப்பு
08 . 01 . 2016

மாவிட்டபுரம் சாயுடை கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட கந்தையா-முருகேசு நேற்று (08.01. 2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-எள்ளுப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான கந்தப் பிள்ளை - குஞ்சரம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான குமார லிங்கம், யோகப்பிள்ளை, இளையதம்பி மற்றும் சின்னப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை, முத்துப் பிள்ளை, நடராசா மற்றும் முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவனேஸ்வரி (ஆசிரியர், கொல்லன் கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை), சிவநாதன், சிவராசா (ஊழியர், இலங்கை போக்குவரத்துச் சபை-கோண டாவில்), சிவசேகர் (ஊழியர், கொக்கு வில் இந்துக் கல்லூரி), சிவகாந்தன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தி யோகத்தர் -தெல்லிப்பழை), சிவகுமார் (அபிவிருத்தி உத்தி யோகத்தர்- முல்லைத் தீவு மாவட்ட செயலகம்), சிவஅன்பு ஆகியோரின் அன்புத் தந்தையும், சேகர், செந்தில்வாணி (ஆசிரியை, அள வெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), அகிலாண் டேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத் தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கலையரசி, கிருஷ்ண சாந்தி (G.S.J/223), கனெசியா (அபிவிருத்தி உத்தி யோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தோசிகா, பிவனுஜா, லக்சனா, றக்சிகா ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.01.2016) வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் மாவிட்ட புரம் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலய அதிபர்
நடுநாயகம் சூரியகுமார்
அவர்களின் மாமனார்
**கந்தையா பொன்னம்பலம்**
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம். ஆசிரியர்கள், மாணவர்கள்,

## மரணஅறிவித்தல்கள்

### செல்வி சுகநேசன் கிருஜா
(நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச பழைய மாணவி)



2ஆம் வட்டாரம் நெடுந் தீவு மேற்கு நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சுகநேசன் கிருஜா 07.01.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் சுகநேசன் - திலகம் தம்பதிகளின் செல் வப் புதல்வியும், காலஞ் சென்ற சண்முகநாதன் மற் றும் சீதா லெட்சுமி, காலஞ்சென்றவர்களான மருதப்பு- தங்கம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த் தியும், சுகிர்தன், சுசிதன், கேசவன் ஆகியோரின் பாச மிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2016) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
2ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் சண்முகநாதன்



பிறப்பு
05.02.1965

இறப்பு
06.01.2016

யாழ்ப்பாணம், தாவடி தெற்கைப் பிறப்பிட மாகவும் இத்தாலியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகநாதன் இத்தாலியில் 06.01.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தாவடி தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் அருமை மகனும், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் - தையல் நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்சினி யின் அன்புக் கணவரும், அர்ச்சயாவின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, கணேசமூர்த்தி, சிவகுமார், தனுஷ்யா ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷானி, ஹரிகரன், ஜெயசுதன், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 14.01.2016 வியாழக்கிழமை இத்தாலியில் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
(67501)
(11,15,18)
குடும்பத்தினர்.

## பெண் சாவு

சாவகச்சேரி, ஜன.9

இரவு உணவருந்தி விட்டுப் படுக்கைக்குச் சென்ற குடும்பப் பெண்ணொருவர் நெஞ்சு வலி ஏற்பட்டு வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.சம்பவத்தில் சாவகச்சேரி நுணாவில் சந்தியைச் சேர்ந்த பெண்ணே சாவடைந்த வராவார். (வ-9)

## யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம்
## யாழ். மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணி தெரிவு

யாழ் மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணியைத் தேர்வு செய்வதற்கான தெரிவுகளும் பயிற்சிகளும் நடைபெறுகின்றன. இவற்றில் பங்குபற்ற விரும்பும் வீராங்கனைகள் தங்களது பாடசாலை. கழகம் மூலம் அல்லது தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
செயலாளர், யாழ்மாவட்ட கிரிக்கெட் சங்கம்,
29,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 513 4390

## கண்ணீர் அஞ்சலி



வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சியில் பதவிநிலை உதவியாளராகக் கடமையாற்றும்
செல்வி **தனிநாயகம் மனோராணி**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **அன்னலட்சுமி தனிநாயகம்**
அவர்கள் 07.01.2016 காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
20.04.1976

மறைவு
10.12.2015

### அமரர் மயிலன் மோகன்

கடந்த 10.12.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.01.2016) சனிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனை வரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ள வும்)

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
077 697 6311

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேறிய மக்களுக்கு அடுத்த வாரம் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜன.9
வலி.வடக்கில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடுத்த வாரமளவில் மீள்குடியேற்ற அமைச்சினால் உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
701 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த வாரம் வலி. வடக்கில் விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வதற்காக 536 குடும்பங்கள் வரையில் பதிவு செய்துள்ளன. இவர்களுக்கு இதுவரை எந்தவொரு உதவிகளும் வழங்கப்படவில்லை.
தேசிய தைப்பொங்கல் விழாவில் வைத்து, காணி விடுவிப்பு தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரே, இவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

## அரசமைப்புத் திருத்தம்

இந்தப் புதிய அரசமைப்புச் திருத்தம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்கு சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் எனவும் அரச உயர்மட்டத் தகவல்கள் மேலும் குறிப்பிட்டன.
இதேவேளை, புதிய அரசமைப்பு வரைவுக்காக நாடாளுமன்றம் இன்று அரசமைப்புப் பேரவையாக மாற்றம் செய்யப்படுகிறது. இதன்மூலம் இன்று முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசமைப்புக் குழுவின் உறுப்பினர்களாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

### வேலைக்கு ஆள்தேவை

விருந்தினர் விடுதிக்கு அறைபராமரிப்பாளர், வரவேற்பாளர் தேவை.

தொடர்பு: 077 222 1379

### நாற்றுக்கள் விற்பனைக்கு

மிளகாய் (MI Green), கத்தரி (தின்னவேலி ஊதா), தக்காளி (பத்மா) நாற்றுக்கள் அளவெட்டியில் விற்ப னைக்கு உண்டு.
தொடர்பு: மூர்த்தி - 077 860 4493

### விளையாட்டு உபகரணங்கள் விற்பனைக்குண்டு

சகல விதமான விளையாட்டு உபகரணங்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 311 6079, 021 222 9265

### தவறிவிட்டது

இராம பாலச்சந்திரசர்மா ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், தேசியஅடையாளஅட்டை (621630750v), ATM அட்டை என்பன கோண்டாவில் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 021 221 1902 தொடர்புகொண்டு உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

### விசேட விலைகளில்

தைப்பொங்கலை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட ஏணி பலவகைகளில், பல அளவு களில் விசேட கழிவு விலைகளில்.

யூனியன் ஹாட்வெயர்
194,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
077 336 3766

### ஆட்டிறைச்சிக்கடை இடமாற்றம்

திருநெல்வேலி மேல் மாடியில் இயங் கிய ஆட்டிறைச்சிக்கடை தற்போது கொக்குவில் பிறவுண் வீதியில் (கொக் குவில் உப அலுவலகத்திற்கு அருகில்) இயங்குகின்றது என்பதை சகல வாடிக்கையாளருக்கும் அறியத்தருகின்றேன்.

ந.உதயகுமார்
உரிமையாளர் 077 085 6479

### உடன் தேவை

எமது பாடசாலை விடுதியில் வேலை செய்வதற்கென தகுதியான, அனுபவமுள்ள 35தொடக்கம் 50 வயதிற்குள்ளான பெண்கள் தேவை. இரு நாற் சான்றிதழ் பத்திரங்களுடன் நேர்முகத் தெரிவுக்காக இன்று (09.01.2016) சனிக்கிழமை பி.ப. 2.00மணி தொடக்கம் 4.00மணி வரை பாடசாலை அலுவலகத்திற்கு வருகை தரவும்.

அதிபர்.
உடுவில் மகளிர் கல்லூரி.

### பிரத்தியேக குழு வகுப்புகள்

* பரீட்சை பாட விதானங்களை நோக்கியதான குழு வகுப்புகளின் புதிய பிரிவுகள் யாழ் நகரில் 16.01.2016 (சனி) ஆரம்பமாக உள்ளன.
* எளிமைப்படுத்திய வழிகாட்டல்களில் பின்வரும் பாடங்கள் நடைபெறும்.

| | |
|---|---|
| தமிழ் மொழி மூலம் - விஞ்ஞானம்/கணிதம் | தரம் 9, 10 |
| ஆங்கில மொழி மூலம் - விஞ்ஞானம்/ கணிதம் | தரம் 9, 10 |
| ஆங்கிலம்/ஆங்கில இலக்கியம் | தரம் 10,11 |

தொடர்புகளுக்கு:- பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் 077 207 9821

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் நிறுவனத்துக்கு பெயின்ரர், உதவியாளர்கள் தேவை.
தொடர்பு:
077 470 7511, 072 4946075

### மலேசியா வேலை வாய்ப்பு

1) சொக்லேட் கொம்பனி
(கெல்ப்பர் 30 ஆண்)
RM 900 SR 36000 + OT
(No Food, Accommodation Free)
2) கிளவுஸ் கொம்பனி
(கெல்ப்பர் 50 ஆண்)
RM 900 SR 36000 + OT
(No Food, Accommodation Free)
3) மேசன், பிளம்பர், பெயின்டர், லேபர், எலக்ரிசன், காப்பெண்டர் உடன் தேவை.
(வங்கிக்கடன் வசதிகளும் செய்து

T.P: 076 885 1720, 076 885 1723
Email:- asianlanka27@gmail.com
Galaxy Foreign Employment Agency
Licence No: 2486




### 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 06 . 01 . 1946



இறப்பு 25 . 11 . 2015

**அமரர் ஜெகநாதன் இராணிரத்தினம்**

கடந்த 25.11.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் ஜெகநாதன் இராணிரத்தினம் (பாட்டுமாமி, கிளிஅக்கா) அவர்களின் இல்லத்தில் இன்று (09.01.2016) நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும். மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

576/1, கலட்டி அம்மன் லேன்,
கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



**கந்தையா ஆறுமுகசாமி**

சன்னதி வீதி, தம்பக்கடவை இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகசாமி நேற்று (08.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, சரவணமுத்து, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவலட்சுமி, கந்தவேள் (இலண்டன்), விஜயலட்சுமி (ஆசிரியை-யா/இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமித்திரா (இலண்டன்) திருக்குமரன் (யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் அஸ்மிதா, அக்ஷயன், ஷாமிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக் கிரியைகளுக்காக சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/67504)(10,17)

### E.S.P நாகரத்தினம் (கல்விக் காருண்யர்,பொன்மனச்செம்மல்) அவர்களின் மணிவிழாக்கான கூட்டம் தொடர்பான அறிவித்தல்



இடம்:- பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி
காலம்:- 10.01.2016
நேரம்:- மாலை 5 மணி

மேற்படி மணிவிழா நாயகனின் சமய, சமூக, கல்விச்சேவை போன்ற செயற்பாடுகளைக் கௌரவிக்கும் முகமாக மணிவிழா சபை அமைப்பதற்கான பொதுக்கூட்டம் நடைபெற இருக்கின்றது. அவரது அன்புள்ளங்களை கலந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அமைப்பாளர்கள்
ஞான திருக்கேதீஸ்வரன் ஆசிரியர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி
V.தயாபாலன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சோ.ஹரிசங்கர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

விழா ஏற்பாட்டுக் குழு சார்பில்
பேராசிரியர் க.தேவராஜா
யாழ் பல்கலைக் கழகம்

விளம்பர அனுசரணை:
அன்னா தொழிலகம்,
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்துக்கு எதிரான சதத்தின் மூலம் அணியில் நீடிக்க முடியும் என்கிறார் பவுமா



தென்னாபிரிக்கா சார்பாக டெஸ்ட் ஆட்டங்களில் சதம்பெற்ற முதலாவது கறுப்பின வீரரான தெம்பா பவுமா, இந்தச் சதத்தின் மூலம்தான் மிகவும் திருப்தியடைந்துள்ளதாகவும், அணியில் நீடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
25 வயதான தெம்பா பவுமா, இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் நிறைவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் சதம் பெற்றார். இதன்மூலமே, இந்தப் பெருமையை அவர் பெற்றார். தென்னாபிரிக்க அணியில், கறுப்பின வீரர் ஒருவர் உள்ளடங்கலாக, வெள்ளை இனத்தவர் அல்லாத நான்கு பேரை ஒவ்வொரு முறையும் களமிறக்க வேண்டும் என்ற எழுதப்படாத நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.
இது சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக திறமையற்ற கறுப்பின வீரர்கள் அணியில் இடம்பெறுவதற்கு வழி வகுப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்தநிலையில் தெம்பா பவுமாவின் மீதும் அழுத்தம் காணப்பட்டது. எனினும், சதமடித்ததன் பின்னர் கருத்துத் தெரிவித்த பவுமா, மிகவும் உணர்ச்சி வசப்பட்டவனாகவும் நிம்மதியடைந்தவனா கவும் இருக்கிறேன். நான் மிகவும் திருப்தியடைந்துள்ளேன். அணியில் காணப்படும் சூழ்நிலை காரணமாக ஓட்டங்களைக் குவித்தால் மாத்திரமே, அணிக்குப் பொருத்தமானவன் என்ற எண்ணம் காணப்படுகிறது. இதைத் தவறு என்று சொல்லவில்லை.
ஆனால் எனது சதத்தின் மூலம் அணியில் நீடிக்கும் நம்பிக்கை உள்ளது என்றார். (ம)

## றியல் மட்றிட்டின் சூழ்நிலை அற்புதம் பயிற்சியாளர் சிடான் தெரிவிக்கிறார்



புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டின் சூழ்நிலை சிறப்பாக அமைந்துள்ளதாக அந்த அணியின் புதிய பயிற்சியாளரான சிடான் தெரிவித்துள்ளார்.
மட்றிட்டின் பயிற்சியாளரான பெனிடெஸ் பதவி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த அணியின் புதிய பயிற்சியாளராக சிடான் நியமிக்கப்பட்டார். இவரை நேற்றுமுன்தினம் றியல் மட்றிட்டின் நிர்வாகம் உத்தியோகபூர்வமாக வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. பின்னர் கருத்துத் தெரிவித்த சிடான், – றியல் மட்றிட் அணியில் வீரர்களுக்கு இடையிலான புரிந்துணர்வு சிறப்பாக உள்ளது. வீரர்களின் ஓய்வறை சுமுகமாக உள்ளது. அனுபவ வீரர்களுக்கும் இளம் வீரர்களுக்கும் இடையே ஆரோக்கியமான மனநிலை பேணப்படுகிறது. இத்தகைய அணியை ஒழுங்கமைப்பதில் எனக்கு பெரும் சிரமம் இருக்கும் என்று எண்ணவில்லை. இனி வரும் ஆட்டங்கள் எமக்கு இன்னும் சிறப்பாக அமையும் என்று எண்ணுகிறேன் என்றார். (ம)

## மூன்றாவது டெஸ்ட்டிலும் ஸ்ரெயின் சந்தேகம்

இங்கிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்திலும் ஸ்ரெயின் விளையாடுவது சந்தேகம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.
இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரண்டாவது ஆட்டத்தில் விளையாடவில்லை. காயம் இன்னமும் முழுமையாக குணமடையாததால், அவர் மூன்றாவது ஆட்டத்தில் இருந்தும் விலகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விடுத்துள்ள அறிக்கையில் –



நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இதுவரை இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இங்கிலாந்து 1:0 என்ற அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துகிறது. 3ஆவது டெஸ்ட் 14ஆம் திகதி ஜோகன்னஸ் பார்க்கிலும், 4ஆவது மற்றும் கடைசி ஆட்டம் செஞ்சூரியனில் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. காயத்தால் அவதியுற்று வரும் ஸ்ரெயின் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஸ்ரெயினின் காயம் ஓரளவு குணமடைந்துவிட்டது. அவரால் விளையாட முடியும். ஆனால் அவசரப்பட்டு களமிறக்கி ரி–20 உலகக்கிண்ணம் போன்ற முக்கிய தொடர்களில் அவரை இழக்க நாங்கள் தயாரில்லை. அடுத்த டெஸ்ட்டில் நூறு சதவீதம் உடற்தகுதி பெற்றால், ஸ்ரெயின் களமிறங்குவார். இல்லாவிட்டால் இறுதி டெஸ்ட்டில்தான் அவரைப் பார்க்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## தலைமைத்துவத்தைக் கைவிடுவதில் எவரும் அழுத்தங்களைத் தரவில்லை

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகுமாறு தனக்கு எந்த அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள அம்லா, தலைமைத்துவத்தில் இருந்து நீங்கியமை தனது சொந்த முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளார்.
டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகியமை தொடர்பாக அம்லா தெரிவிக்கையில் – எனது பதவி விலகலில் எவ்வித பின்னணிகளோ அல்லது அழுத்தங்களோ இல்லை. 14 நாள்களுக்கு முன்னரே நான் பதவி விலகுவது தொடர்பாக தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடனும், அனுபவ வீரர்களுடனும் கலந்தாலோசித்துவிட்டேன். என்னால் முடியாததை இன்னுமொருவரால் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற எண்ணம் எனக்குள் ஏற்படுகிறது. எனவே வாய்ப்பை இன்னுமொருவருக்கு வழங்க வேண்டும் என்று முடிவெடுத்தேன் என்றார். (ம)

## விளையாடினால் றியல் மட்றிட்டில்; கரத் பலே உறுதியான கருத்து




றியல் மட்றிட் கழகத்திலிருந்து விலகும் எண்ணம் தமக்குக் கிடையாது என நட்சத்திர வீரரான கரத் பலே தெரிவித்துள்ளார்.
றியல் மட்றிட் கழகத்தின் பயிற்சியாளரான றபேல் பெனிடெஸ் பதவி நீக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பை பலே விடுத்துள்ளார். பெனிடெஸுக்கு நெருக்கமானவராகக் கருதப்படும் பலே, பெனிடெஸின் பதவி நீக்கத்தால் கழகத்தை விட்டு விலகலாம் என எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக செல்சி அணியின் ஈடன் ஹஸார்டும், கரத் பலேயும் அணிகளை மாற்றிக் கொள்ளக்கூடும் எனச் செய்திகள் வெளியாகி வருகின்றன. இந்தநிலையிலேயே, கழகத்திலிருந்து விலகப்போவதில்லை என பலே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் பெனிடெஸ் எனக்கு நெருக்கமானவர்தான். இதை நான் மறுப்பதற்கு இல்லை. அதற்காக அவரை நீக்கியதால் அணியைத் தூக்கி எறிந்து விடுவேன் என்று எண்ணுவது தவறு. மட்றிட்டை விட்டு விலகும் எண்ணம் எனக்கு இல்லை என்றார். (ம)

## இறுதி ரி-20 நாளை



இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான ரி–20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களைக் கைப்பற்றிய நியூசிலாந்து ரி–20 தொடரிலும் முதலாவது ஆட்டத்தை வெற்றிபெற்று தனது இருப்பை உறுதி செய்துள்ளது.
நாளை நடைபெறவுள்ள இரண்டாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றால் தொடரைச் சமன்செய்ய முடியும். தோல்வியடைந்தால் ரி–20 தொடரும் முழுமையாக நியூசிலாந்திடம் செல்லும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**பருத்தித்துறை லீக்கின் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 9

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி கிழக்கு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி அணியை எதிர்த்து ஆதிசக்தி அணியும், காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து கழுகுகள் அணியும், பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் அணியை எதிர்த்து நக்கீரன் அணியும், மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணியும் மோதவுள்ளன.

**கரைச்சி கால்பந்தாட்டத் தொடர்**

கரைச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் காலிறுதி ஆட்டங்களில் காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதி ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து ஜெயந்தி நகர் அணியும்,மு.ப. 10 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் இளந்தளிர் அணியை எதிர்த்து பூநகரி யங்ஸ்ரார் அணியும், பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து சந்திரோதயம் அணியும் மோதவுள்ளன.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமாரன் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் சென்.றொக்ஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதவுள்ளது.

**மாவத்தை வி.கழகத் தொடர்**

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி அண்ணா அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அணி மோதவுள்ளது. மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி சில்வெஸ்ரார் அணியை எதிர்த்து அராலி சென்.நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருமகள் அணியை எதிர்த்து ஜேம்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

**வித்தியா வி.கழகத் தொடர்**

முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகத்தினர் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்த ஏற்பாடுசெய்த துடுப்பாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. முதலாவது ஆட்டத்தில் வித்தியா, செந்தமிழ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இரண்டாவது ஆட்டத்தில் முள்ளியவளை முல்லைக்குமரன் அணியை எதிர்த்து நீராவிப்பிட்டி அல் ஜின்னா அணியும், மூன்றாவது ஆட்டத்தில் முள்ளியவளை வளர்மதி அணியைஎதிர்த்துவற்றாப்பளை வெண்மலர் அணியும், நான்காவது ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் அணியை எதிர்த்து முல்லை ஸ்ரார் அணியும்- ஐந்தாவது ஆட்டத்தில் அல் ஹிஜ்ரா அணியை எதிர்த்து மா மூலை விண்ணொளி அணியும் மோதவுள்ளன. ஆட்டங்கள் அனைத்தும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ம-102)

# யாசிர் மீது நடவடிக்கை வேண்டாம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை



ஊக்கமருந்து உபயோகப்படுத்தியதால் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் யாசிர் சா, உள்நோக்கத்திலும் சுயநலத்துக்காகவும் அதைப் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவரின் மீது தடை விதிக்கும்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

டெஸ்ட் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள யாசிர் சா, கடந்த மாதம் 13ஆம் திகதி அபுதாபியில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊக்கமருந்து சோதனையில் ஊக்கமருந்தை உபயோகப்படுத்தியமை தெரிய வந்தது. இதையடுத்து யாசிர் சா கிரிக்கெட்டில் இருந்து உடனடியாக நீக்கம் செய்யப்பட்டார். அடுத்ததாக இரண்டாவது கட்டச் சோதனையை நடத்தும்படி அவர் கோரினால், அதன் முடிவின் அடிப்படையில் அவர் மீது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை என்ன நடவடிக்கை எடுக்கும் என்பது தெரிய வரும். ஒருவேளை 'பி' மாதிரி சோதனையில் அவர் ஊக்க மருந்து எதுவும் உபயோகப்படுத்தவில்லை என்ற முடிவு வந்தால், அவர் மீதான இடைநீக்கம் உடனடியாக விலக்கி கொள்ளப்படும்.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, யாசிரின் சா ஊக்க மருந்து விவகாரத்தில் விளக்க அறிக்கையொன்றை அளித்துள்ளது. அதில் - யாசிர் சாவின் மனைவி இரத்தக் கொதிப்புக்கு மாத்திரைகளை பயன்படுத்தி வருகிறார். அந்த மாத்திரைகளை யாசிர் சா தெரியாமல் சாப்பிட்டுவிட்டார். அதில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தது அவருக்குத் தெரியாது. அவர் உள்நோக்கத்துடன் அதைப் பயன்படுத்தவில்லை. தவறாகச் சாப்பிட்டு விட்டார். அறியாமல் செய்த தவறால் அவருக்கு கருணை அடிப்படையில் குறைந்த தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்- என்றுள்ளது. (ம)




லாலிகா தொடருக்கான ஆட்டங்கள் இடம்பெறாத நாள்களிலும் ரியல் மட்ரிட் தீவிர பயிற்சியில் ஈடுபடும். இவ்வாறு நேற்றுமுன்தினம் மட்ரிட் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டிருந்த பொழுது ரொனால்டோவிடம் கையெழுத்து வேண்டிட முட்டிமோதிடும் ரசிகர்கள். (ம)



## வோஸ்னியாக்கி நேர்செற் வெற்றி

ஏ.எஸ்.பி. கிளாசிக் ரென்னிஸ் தொடரில் டெல்கெருவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்றார் வோஸ்னியாக்கி.

நேற்றுநடைபெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கும் வோஸ்னியாக்கியை எதிர்த்து மோதினார் 43ஆவது இடத்தில் உள்ள அலேக்ஸாண்டிரா டெல்கெரு. இதில் வோஸ்னியாக்கி 6:1 என்ற கணக்கில் முன்செற்றைக் கைப்பற்றினார்.

இரண்டாவது செற்றிலும் டெர்கெருவால் வோஸ்னியாக்கியைச் சமாளிக்க முடியவில்லை. இதனால் அந்தச் செற்றையும் 6:0 என்ற கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றார் வோஸ்னியாக்கி. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயமன்ஸ், நீக்கிலஸ் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 9

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. இதில் டயமன்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 6:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



இந்தியாவின் பாடசாலைகளுக்கு இடையிலான ஆட்டத்தில், ஆட்டமிழக்காது ஆயிரத்து ஆறு ஓட்டங்களைக்குவித்த பிரணவிற்கு சச்சின் தனது துடுப்பு மட்டையில் கையொப்பமிட்டு பரிசளித்துள்ளார். (ம)

# சபன்யோலை வீழ்த்தியது பார்சிலோனா



கோப்பாடெல்ரேதொடரின் இறுதிப் பதினாறு அணி களுக்கான ஆட்டங்களில் நேற்று நடைபெற்ற முத லாவது ஆட்டத்தில், சபன் யோலை 4-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்கடித்துள்ளது.

இந்த ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்திலேயே சபன் யோலின் பிலிப்பி கைகீடோ பெற்ற கோலின் மூலம் அவ்வணி முன் னிலை பெற்றிருந்த போதும், 13ஆவது, 44 ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி பெற்ற கோலின் மூலம் பார்சிலோனா 2:1 என்று முதல்பாதியில் ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாம் பாதியில் 49ஆவது நிமிடத்தில் பிகேயும் 88ஆவது நிமிடத்தில் நெய்மரும் கோல்களைப் பதிவுசெய்ய 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)

# இந்திய அணி சவால் தரும்; ஆஸிக்கு டேரன் எச்சரிக்கை

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு பெரும் சவாலளிக்கும் என்று ஆஸ்திரேலிய அணி யின் பந்துவீச்சுப் பயிற்சியாளரான டேரன் லீ மேன் தெரிவித்துள் ளார்.



இந்தியா - ஆஸ்திரேலியா தொடர் தொடர்பாக லீ மேன் தெரிவிக்கையில் - இந்திய அணியின ரும் ஆவேச ஆட் டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். ஆகவே இந்த 5 ஆட்டங் களும் மிகவும் விறு விறுப்பாக அமையும். இந்திய அணி ஒரு திற மையான ஒருநாள் அணியாகும், உலகக் கோப்பை அரையிறு திக்குத் தகுதி பெற்ற அணி. எனவே ஆஸ்திரேலியாவுக்கு இந்தத் தொடர் சவாலே. எனவே நாம் சிறப்பாக ஆட வேண்டிய கட்டாயம் உள்ளது. முதல் ஆட்டத்தில் நன்றாகத் தொடங்குவது அவசியம் என்றார். (ம)

# இந்தியாவுக்கு எதிரான தொடரிலிருந்து ஆஸ்திரேலியாவின் வோர்ணர் விலகல்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதல் இரு ஆட்டங்களில் இருந்தும் ஆஸி யின் அதிரடி வீரரான வோர்ணர் விலகியுள்ளார்.



ஏனைய ஆட்டங் களில் அவர் பங்கேற் பது குறித்து உறுதி யான தகவல்கள் இன்னும் வெளியாக வில்லை.

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலி யாவில் சுற்றுப்பய ணம் செய்து 5 ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரி லும், மூன்று ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளை யாடுகிறது. முதல் ஒரு நாள் ஆட்டம் 12ஆம் திகதி ஆரம் பமாகிறது. இந்நிலையில் இந்தியாவுக்கு எதிராக முதல் 2 ஒரு நாள் ஆட்டங்களிலும் இருந்து ஆஸ்திரேலிய அணியின் அதிரடி வீரர் டேவிட் வோர்ணர் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வோர்ணரின் மனைவி இரண்டாவது பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டதாலேயே அவர் தொடரில் இருந்து விலகியுள்ளார். (ம)

CHEMISTRY
GROUP CLASS
N.MAHESWARAN B.Sc PGDE M.Phil (Edu)
A/L 2018
Saturday & Sunday
English Medium 6.15 am
தமிழ் மொழி மூலம் 3.30 pm
ஆரம்பம் - 10.01.2016
இடம் - 46, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
T.P No :- 077 229 4743

வீடு வாடகைக்கு
தொடர்பு: 077 714 9396
இல.09, கனகபுரம் முதலாம் பண்ணை கிளிநொச்சியில் ஹவின் கலைக்கல்லூரிக்கு அருகில் உள்ள சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(67404) (14,15)

வீட்டுடன் காணி விற்பனைக்கு
இல.67, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
077 072 4666
00479 951 5207

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை
* முகாமையாளர்
* காசாளர்
* சிட்டை எழுதுநர்
* சப்ளையர்
* சமையலாளர்
* சமையல் உதவியாளர்
* ரீமேக்கர்
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 078 2375
(6.00மணிக்கு பின் தொடர்பு: 021 205 3845)

ஆங்கில ஆசிரியர் தேவை
உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும், பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 5084
மே/பா உதயன்பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




Sale Assistant (Female)
Cargills Square இல் அமைந்துள்ள Trendy காட்சியறைக்கு ஆங்கில அறிவுள்ள Sale Assistant தேவை.
(மாநகர சபை எல்லைக்குட்பட்டவர் விரும்பத்தக்கது)
T.P: 075 2553188 trendyjaffna@trendyclub.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.